No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 6

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 12

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1354 றமலான் மீ, 1935 வரு டிசம்பர் மீ

1. அல்குர்ஆன் ... 441
2. நாயக வாக்கியம் ... 443
3. திருகுர்ஆனும் றமலான் மாதமும் ... 445
4. றமலான் மாதமும் நோன்பும் ... 449
5. வேதங்களின் தன்மை ... 452
6. நூர்ஜஹான் பேகம் கொலைக் கைதியா? ... 457
7. இஸ்லாத்தின் முன்னேற்றமும் தற்கால முஸ்லிம்களின் நிலைமையும் ... 465
8. அத்தாவுல்லா ஷாஹ்புகாரி வழக்கு ரிவிஷன் மனு தீர்ப்பு ... 469
9. பழைய ஞாபகம் ... 470
10. சுகாதாரம்—தேன் ... 474
11. உத்தம மாதுக்கள் ... 476
12. இஸ்லாமிய உலகம் ... 478

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

15 JAN 1938
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS 15 JAN 1936

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1354 றமலான் மீ 1935 ஞூ டிசம்பர் மீ	இதழ் 12

அல் குர்ஆன்

உம்முடைய நடையில் நடுத்தரமானதைத் தெரிந்துகொள்ளும், இன்னும் மேள்ள மேள்ள வார்த்தையாடும். (ஏனெனில்) நிச்சயமாக சப்தங்களில் விகாரமானது கழுதையினுடைய சத்தமாகும். (குர்ஆன்).

மேலே கூறப்பட்டுள்ள திருவாக்கியம் ஸூரயே லுக்மானி லுள்ளதாகும். இதில், ஹஸ்ரத் லுக்மான் அவர்கள் தங்கள் குமாரருக்கு வாழ்க்கைநடத்தும் விதத்தையும், உயிர் வாழும் மாதிரியையும் அறிவித்துக் கொடுக்கும் தன்மை நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முந்திய ஆயத்தில் ஹஸ்ரத் லுக்மான் அவர்கள் தங்கள் புத்திரருக்கு உபதேசிக்கும் முறையில், "அருமை புத்திரரே! அல்லாஹ் தஆலாவுக்கு இணைவைக்கலாகாது; ஏனெனில் இணைவைப்பது பெரிய அநீதியாகும்" என்றும், "அருமை புத்திரரே! தொழுகையை நிறைவேற்றும், மனிதர்கள் நற்காரியங்கள் புரியுமாறும் கெட்ட காரியங்களை விட்டுத் தவிழ்ந்துகொள்ளும்படியும் உபதேசம் புரியும்; கஷ்ட சங்கடங்கள் வந்தணுகும்போது அதனை 'சபர்' செய்துகொள்ளும்; மனிதர்களிடம் தயாளமின்மை, பொருட்படுத்தாமை முதலிய பாதகச் செயலோடு முன்னேக்காதே" என்றும் அறிவித்ததாக கூறப்படுகிறது. ஆகவே, நடத்தையில் நடுத்தரமானதைத் தெரிந்துகொள்வதும், நடக்கும்போது நடுத்தரமான நடையாகவே நடந்து செல்லுவதும், இதரர்களுடன் வார்த்தையாடும்போது மிருதுவாகவும் சாதாரணமாகவும் வார்த்தையாடுவதும் பிரதானவைகளாகும் என்பதைத் தெரிந்துகொள்ளுகிறோம். இதற்கு மாற்றமாய், வார்த்தையாடுவதில் சத்தம்போடுவதும் அதட்டல் உருட்டல் செய்வதும், பிரயோசனமற்ற வீண்வார்த்தைகளை உபயோகிப்பதும் மானிடத்தன்மையினின்று வெகுதூரப்பட்டவைகளாகும். மனிதனைவிருந்துகொண்டு கழுதையைப்போல அர்த்தமற்றவும் அறிவுக்கெட்டதாகவுமாகிய வார்த்தைகளை வாயிலிருந்து வெளியாக்கி உரத்த தொனியோடு சத்தம்போடுவதால் எவ்விதப்பிரயோசனமு மேற்பட்டுவிட

மாட்டாது. இவ்வாறன கடும் மொழிகள் அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூலுக்கும் அதிருப்தியை அளிக்கக்கூடியதாகவிருப்பதால் மானிடர் இவைகளை விட்டுத் தவிழ்ந்து கொள்ளுவது பிரதானமாகும். "(ஏ ஹபீபே!) எவர்கள் தங்களை (தங்களுடைய) அறைக்கு வெளியிலிருந்து (சத்தத்துடன்) அழைக்கின்றார்களோ அவர்களிலனேகர் புத்தியில்லாதவர்களாக விருக்கிறார்கள்" என அல்லாஹ் தஆலா கூறி, சத்தமாகப் பேசுவதன் கெடுதியை தெரிவித்திருக்கிறான்.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் எந்த கோபத்துடைய நேரத்திலும் கடிந்ததும் கிடையாது; சத்தத்தோடு பேசியதும் கிடையாது; கெட்ட வார்த்தையையோ, யார் பேரிலும் தூஷணங் கூறுவதையோ ஒருபோதும் கையாண்டதுமில்லை. துக்கம் கவலை சஞ்சலம் கோபம் கஷ்ட சங்கடம் முதலியவைகளேற்படும் சமயங்களிலுங்கூட, நடுத்தர நடத்தையைக் கைவிட்டார்களில்லை; சதாவும் மெதுவாகவே வார்த்தையாடுபவர்களாக விருந்தார்கள்.

"நபிகள்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கெட்ட வார்த்தைகளை உபயோகிக்காதவர்களாயும், இதரர்களை சாபஞ் செய்யாதவர்களாயும், யாரையும் ஏசிப்பேசி நோவினை கொடுக்காதவர்களாயும் இருந்ததுடன் கோபத்துடைய நேரத்தில் 'அவனுக்கு யாது ஏற்பட்டுப் போயிற்று? அவனுடைய நெற்றி மண்ணுடன் சேர்ந்துபோக!' வென்று கூறுபவர்களாக விருந்தார்கள்" என ஹஸ்ரத் அனஸ் (ரலி.) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

சிறிப்புக்கொள்வது கொண்டு ஹிருதயம் மரணமாய்விடுவதாலும், அதிகமாய்ப் பேசுவது மரியாதைக் குறைவு, மடத்தனம் இவைகளுக்குள்ள அடையாளங்களாகு மாதலாலும், அதிகமாய் வளவப்பான முறையில் பேசுவது கொண்டு சங்கை மரியாதை கெவர்தை போய் விடுவதாலும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் அதிகமாய்ப் பேசாதவர்களாயும், கெக்கரிப்போடு சிறிப்புக்கொள்ளாதவர்களாயு மிருந்தார்கள்.

ஒருநாளன்று நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் அபூதர்ரு (ரலி.) அவர்களை விழித்து "ஏ அபூதர்ரே! சுமப்பதற்கு இலேசானவும் நன்மையால் மிதமிஞ்சியதுமான இரு குணங்களை யானுமக்கு தெரிவிக்கவேண்டாமா?" வென வினவினார்கள். அதற்கு அபூதர்ரு (ரலி.) அவர்கள் அவைகளை அறிவித்துக் கொடுக்குமாறு வேண்டிக்கொள்ளவே, 'வாய்மூடி இருப்பது, நற்குணம்' ஆகிய இவ்விரண்டு குணங்களுமாகும்" எனநபிகள் பெருமானார் (ஸல்.) அறிவித்ததாக ஹஸ்ரத் அனஸ் (ரலி.) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் உபதேசஞ் செய்வார்களாயின் அப்பிரசங்கம் அர்த்த புஷ்டியுள்ளதாயும் சுருக்குமானதாயுமிருக்கும். மேலும் அல்லாஹ் தஆலாவின் கட்டளைகளை எல்லோருக்கும் விளங்குமாறு தக்கமுறையில் அறிவிப்பார்கள். தேவைக்கு அதிகமான வார்த்தைகள் நாவிலிருந்து வெளியாகமாட்டாது. மக்களை சீர்திருத்துவதிலும் அல்லாஹ் தஆலாவின் கட்டளையை மக்களுக்கு எடுத்துக் காண்பிப்பதிலும் யாருடைய தயவு தாக்ஷணியத்தையும் பொருட்படுத்தமாட்டார்கள். "நீங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்வீர்களாயின் இரு உலகின்வேதனையைவிட்டும் காக்கப்படுவதுடன் உங்கள் ஐசுவரியங்களும் கார்மானமாக்கப்பட்டதாய்விடும்" என்று பெரிய பெரிய சக்கிராபதிகளுக்கெல்லாம் லிகிதம் விடுத்திருக்கிறார்கள். இவ்வாறு பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் யாருக்கும் அஞ்சாது சத்தியத்தை எடுத்துரைப்பதில் முதன்மையாய்ச்சிறந்து விளங்கினார்கள்.

"யாரையாகிலும் தேவைக் கதிகமாய்ப் பேசக் காண்பீர்களாயின், நிச்சயமாய் அவன் பைத்தியக்காரனாக விருக்குமென் றெண்ணிக் கொள்ளுங்கள்" என ஹகீம்புஜர்ஜம்ஹர் கூறியிருப்பது ஈங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதற்காகத்தான், எவ்வார்த்தையும் மனதில் கவனித்து, ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் அவ்வார்த்தையை வெளியிடவேண்டுமென பெரியார்கள் கூறியிருக்கின்றார்கள்.

மேலும் ஒரு வார்த்தையை அவசியமின்றி மடக்கி மடக்கிக் கூறுவதும் தகைமையுடையதாகா. ஒரு விஷயத்தை ஒருமுறை செவியுறுபவன் மறுமுறை அதனைக் கேட்கப் பிரியப்படாதிருப்பதே இதற்குக் காரணமாகும்.

யாராகிலும் நம்மிடம் ஏதாகிலும் சமாசாரத்தைக் கூறுவாராயின் அது விஷயம் ஏற்கனவே நமக்குத் தெரிந்திருந்த போதிலும் அவன் தன் வார்த்தையை முடிவுக்குக் கொண்டுவரும் வரை

நமக்குத் தெரிந்திருப்பதை வெளியாக்காமல் வாய்திறக்காதிருப்பது உத்தமமாகும். கூட்டத்தில் இதரர்களிடம் வினவப்படும் வினக்கட்கு நாம் மறுமொழி கூறலாகாது. கூட்டத்தில் பொதுவாக எல்லோரையும் நோக்கிக்கேட்கப்படுமாயின் அதுபொழுதும் மறுமொழி சொல்வதில் எல்லோருக்கும் முந்திவிடலாமாது. இதரர்கள் கூறும் மறுமொழி தக்க விடையாக இல்லாதிருந்தாலும் அவர்கள் தம் வார்த்தைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வரை இடையே குறுக்கிட்டு எவ்விதப் பேசும் பேசலாகாது. மக்கள் ஏதாகிலும் வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது அது நமக்குச் சம்பந்தமில்லாததாகவிருக்குமாயின் அதுபொழுது நாம் வாய்மூடிக்கொண்டிருக்க வேண்டியது நமது கடமையாகும். நமக்குத் தெரியாத ஏதாகிலும் காரியமோ வார்த்தைபேசுவதோ நடைபெறுமாயின் திருட்டுத்தனமாக அல்லது மறைவாக அதனைக் கேட்பதற்கோ, அவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளுவதற்கோ முயற்சி செய்யலாகாது. பெரியார்களிடம் சாடைசயிக்கினையாக வார்த்தையாடக்கூடாது. அன்னோரிடம் மிருதுவாகவும் மரியாதையாகவும் நடுத்தர தொனியோடும் வார்த்தையாடவேண்டும். அவசியமின்றி வார்த்தைகளை வளர்த்துச் செல்லலாகாது. எச்சந்தர்ப்பத்திலும் சுருக்கத்தையே கவனத்திலிறுத்தி காரியத்தைக் கைகொள்ள வேண்டும். அதுபொழுதுதான் கேட்பவர்கட்கு மனச்சட வேற்படாதிருக்கும். பிரசங்க மாற்றுவதிலோ, வியாசம் வரைவதிலோ கடுமொழிகளையும், நுட்பமான கருத்துகளையுடைய வசனங்களையோ உபயோகிக்கலாகாது. மேலும் சபையில் கூடியிருப்பவர்களின் அறிவாற்றலுக்கு மேன்பட்ட கருத்தமைந்த வார்த்தைகளையும் உபயோகிக்கலாகாது. ஒவ்வொருவரிடமும் அவரின் அறிவு ஆற்றலுக்குத் தக்கவாறு வார்த்தையாடவேண்டும்.

மானிடர் வாழ்க்கை நடத்துவதற்கும் இதரர்களுடன் கூடிப் பழகுவதற்கும் மேற் கூறப்பட்டவைகள் பிரதான விஷயங்களாகுமாதலால் ஒவ்வொருவரும் இதனைக் கைகொள்ள முயற்சிக்க வேண்டியது மிகமிக அவசியமாகும்.

நாயக வாக்கியம்

அவருடைய பெற்றோரைப் பார்க்கினும் பிள்ளையைப் பார்க்கினும், மற்ற ஜனங்கள் அனைவரையும் பார்க்கினும் நான் அதிகப் பிரியமுள்ளவனாக ஆகாதவரை உங்களில் எவரும் (உண்மை) விசுவாசியாகமாட்டார்.''

பெற்றோர்கள் பிள்ளைகள் இதர ஜனங்கள் அனைவரையும் பார்க்கினும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அதிகமாக நேசிப்பவர்தான் உண்மை விசுவாசியாக இருக்கமுடியுமென்பதும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பால் இப்படிப்பட்ட பிரியமும் பற்றும் ஏற்படவில்லையாயின் அவருடைய விசுவாசம் பரிபூரண மானதாக இருக்கமாட்டாதென்பதும் இந்த ஹதீதின் கருத்தாகும். இந்த ஹதீது முஸ்லிம்களிடையில் அதிகப் பிரபல்யமாக இருப்பதால் இதனைக் கேள்விப்படாத முஸ்லிம்கள் மிகச் சிலர்தானிருக்கக்கூடும். ஆனால் இந்த ஹதிதின் உட்கருத்தும், நோக்கமும் கிரியாம்சையில் அமல் நடத்தப்படுவதுதான் மிகச் சுருக்கம். இந்த ஹதீதின்படி நடப்பவர் 10 ஆயிரம் பேருக்கு ஒருவர் இருப்பாரா என்பது கூடச் சந்தேகம்தான். முஸ்லிம்கள் மாத்திரமென்ன யூதரும், கிறிஸ்துவரும், ஹிந்துக்களும், நாஸ்தீகர்களும்கூட நாயகம் (ஸல்.) அவர்களை நேசிக்கத்தான் செய்கிறார்கள். அதாவது, நாயகம் (ஸல்.) அவர்களது ஜனன தின விழாக்களின்போது அவர்களது அருமை பெருமைகளைக்கூறிப் போற்றுகின்றனர்; புகழ்கின்றனர்; வாழ்த்துகின்றனர்; சபையில் மிக அலங்காரமாகப் பேசி பொது ஜனங்களது மனத்தில் ஒருவிதமான உருக்கத்தை உண்டு பண்ணி விடுகின்றனர். ஆனால், நாயகம் (ஸல்.) அவர்கள் இந்த ஹதீதின் மூலமாக நம்மிடம் கோரி இருப்பது இவ்விஷயமன்று. "அவர்களனைவரையும் பார்க்கினும் அதிகமாக தம்மை நேசிக்கவேண்டும்'' என்பதேயாகும்.

முஸ்லிம்கள் காலை மாலை எந்நேரமும் ஸலவாத்து ஓதிக்கொண்டும், நாயகம் (ஸல்.) அவர்களது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஸலவாத்துச் சொல்லி விரல்களைக் கண்ணில் வைத்து அவைகளை முத்தமிட்டவர்களாய் இருந்து கொண்டு நாயகம் (ஸல்.) அவர்களது கட்டளையை மறந்து இருப்பதை தம்பால் முஸ்லிம்கள் பிரியமாக இருக்கிறார்கள் என்பதற்கு அளவு கோலாக பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆக்கவில்லை. ஸலவாத்து ஓதுதல், நாயகம் (ஸல்.) அவர்களது பெயரைக் கேட்டமாத்திரத்தில் ஸலவாத்துச் சொல்லிக் கண்ணில் கையை வைத்துக் கொள்ளுதல் ஆகியவைகளுடன் நாயகம்(ஸல்.) அவர்களை முற்றிலும் பின்பற்றி நடப்பதே உண்மையான பக்தியும், பிரியமும் ஆகும். (இப்படிக் கூறுவதால் ஸலவாத்துச் சொல்வதையோ, கண்ணில் கை வைத்து முத்தமிடுவதையோ மறுப்பதாகவோ, அலக்ஷியமாக கருதுவதாகவோ நினைத்து விடலாகாது)

இந்த ஹதீதில் பெற்றோர், பிள்ளைகள், இதர ஜனங்கள் ஆகிய மூன்றுவகையினரைச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இம்மூவகையினரையும் பார்க்கினும் அதிகமான நேசமும் பாசமும் நாயகம் (ஸல்.) அவர்கள்பால்தான் இருக்கவேண்டும் என்பது இந்த ஹதீதின் சாரமாகும். உலகில் நடைபெறும் சகல காரியங்களும்பெரும்பாலும் இம்மூன்று வகையாரைப் பொறுத்தே நடைபெறுகின்றன என்பது தெரிந்த விஷயம். எனவே, இம்மூன்று வகையினரைப் பார்க்கினும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அதிகமாக நேசிப்பதில் உலகசம்பந்தமான பாசம் அடியுடன் ஒழிவதற்கான அடிப்படை இருக்கிறது என்பது புலனாகும்.

எனவே, நாம் நமது சம்பாத்தியத்தில் கிடைக்கும் வருவாயை, பணத்தை, துணியை, உணவை, உண்டியை நமக்கும் நமது பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் எவ்வாறு செலவு செய்கிறோம்? இப்படிச் செலவு செய்வதால் எவ்வளவு சந்தோஷ மேற்படுகிறது, இது போல் நமது நாயகம் (ஸல்.) அவர்களுக்காக நாம் இவ்வளவு சந்தோஷமாகவும் தாராளமாகவும் செலவு செய்கிறோமா? என்பதை உற்றுணர்ந்து பார்க்கவேண்டும். நமது மக்களுடைய கல்வி, கல்யாணம் முதலிய காரியங்களுக்காக எவ்வளவு செலவு செய்கிறோம்? இவ்விதமாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஊழியங்களுக்காக நமது பணத்தைச் செலவு செய்கிறோமா? என்பதை கவனியுங்கள். நமது பின்னைய சந்ததியினரின் க்ஷேமத்தைக் கருதி எத்தனை சொத்துக்களையும், கட்டிடங்களையும், நஞ்செய், புஞ்செய்களையும் வாங்குகிறோம்; அவைகளை உற்பத்தி செய்கிறோம். இவ்விதமாக ஏதேனும் ஒரு சொத்தை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சம்பந்தமாகக் காரியம் நடைபெறுவதற்கு ஏதேனும் ஒரு சொத்தை வாங்கி வக்பு செய்திருக்கிறோமா? நமது வகுப்பினருக்குள், குலத்தினருக்குள் நமக்கு கண்ணியமும் மரியாதையும் இருக்க வேண்டுமென்பதற்காக நாம் செய்யுங் காரியங்களென்ன? இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும்போது இஸ்லாமிய ஷரீஅத்தின் அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்று லக்ஷியம் செய்திருக்கிறோமா? இவைகளை நாம் நமக்குள் கேட்டுக்கொண்டு நமது கிரியைகளைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமாயின் நமது வாழ்க்கை முறையின் பிரதான முக்கிய லக்ஷியம் எது? நமக்கு அதிகப் பிரியமானது எது? என்பது நன்கு புலனாகும். நமக்கு நாயகம் (ஸல்.) அவர்கள்பால் அதிகப்பிரியமிருக்கிறதா? நமது பெற்றோர்கள் பிள்ளைகள்பால் அதிகப் பிரியமிருக்கிறதா? என்பது நன்கு புலனாகிவிடும். தமது மனைவி மக்களுக்காகவும், பெற்றோர்களுக்காகவும், நஞ்செய் புஞ்செய் வாங்குவதற்காகவும் கடன் வாங்காமல் இருப்பவர் எவரேனுமுளரோ? என்ற வினா உண்டாகும்போது எல்லோரும் இப்படிப்பட்ட காரியத்தில் சமய சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு கடன் வாங்கி இருக்கின்றனர் என்றே பதில் கூறப்படும். ஆனால், இஸ்லாமிய ஷரீஅத்திற்காக, நாயகம் (ஸல்.)அவர்களது கட்டளைக்காக அவர்களது சந்தோஷத்திற்காக ஏதேனும் கடன் வாங்கி ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கின்றோமா? என்ற வினா உண்டாகும் பக்ஷத்தில் "இல்லை" என்ற பதில்தான் கிடைக்கும் என்பது வெளிப்படை.

சோதரர்! நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்பால் அதிக நேசம் கொள்ளவேண்டும் என்பதற்கு நாயகம் (ஸல்.) அவர்களுக்கோ அவர்களது சந்ததியாருக்கோ நீங்கள் பணத்தையும் பொன்னையும் கொடுக்கவேண்டும் என்பதல்ல; அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் ஏவியபடி— அவர்கள் கட்டளையிட்டபடி நாம் நடந்து கொள்ளவேண்டும் என்பதே கருத்தாகும்.

திரு குர்ஆனும் ரமலான் மாதமும்.

“ரமலான் மாதம் இதிற்றான் (திரு) குர்ஆன் அருளப்பட்டது. (அது) ஜனங்களுக்கு நேர் வழிகாட்டியாகவும், நேர்வழிகாட்டிக்குத் தெளிவான அத்தாட்சிகளாகவும், (நன்மை தீமையை இன்னதென்று) பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. எனவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றனரோ அவர் அ(ம்மாதத்)தில் நோன்பு வைக்கவேண்டும்”(திரு குர்ஆன்)

இந்த சிறப்புற்ற ரமலான் மாதத்தில் முஸ்லிம்களில் வயதுவந்த ஆண் பெண் இருபாலரிலும் வாலிபர் வயோதிகர் என்ற வித்தியாசமில்லாமல் யாவரும் நோன்பு வைக்கின்றனர். இந்த மாதம் பிறந்தவுடன் முஸ்லிம் உலகில் புதிய உணர்ச்சியும், சந்தோஷமும் புது மாறுதலுமேற்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? ரமலான் மாதத்திற்கு முஸ்லிம்கள் ஏன் இவ்வளவு சிறப்பைக் கொடுக்கவேண்டும்? என்ற வினாக்கள் பலருக்குத் தோன்றுவது சகஜம். இவ்விதமான வினாக்கள் முஸ்லிம் அல்லாதாரிடம் மாத்திரமில்லாமல் முஸ்லிம்களிடமும் உண்டாகுவது இயற்கை. இதன் இரகசியத்தைப்பற்றி இறைவன் தனது திருமறையின்கண் மேற்கண்டவாறு கூறி இருப்பதால் இவ்வியாசத்தின் ஆரம்பத்தில் எடுத்தெழுதப்பட்டிருக்கும் வேதவசனத்தைக் கவனிப்பவர்களுக்கு இவ்வினாக்களுக்குரிய சமாதானம் நன்கு விளங்கும். இந்த மாதத்தில்தான் திருகுர்ஆன் அருளப்பட்டதென்றும், இந்த மாதத்தில் நோன்பு வைக்கவேண்டும் என்றும் இறைவன் கட்டளையிட்டிருக்கிறான். திருகுர்ஆன் அருளப்பட்ட மாதமாக இருப்பதற்காக இந்த மாதத்தில் நோன்பு வைக்கவேண்டும் என்று கட்டளையிட்டதற்கும் காரணம் இல்லாமற் போகவில்லை. திருகுர்ஆன் ஜனங்களுக்கு நேரான வழியைக் காட்டுகிறதென்றும், இது காட்டுகிற இந்த நேர் வழிக்குத் தக்க அத்தாட்சிகளை அது கூறுகிறதென்றும், நன்மைதீமை, பாபம் புண்ணியம், மானிட வர்க்கத்தாருக்குச் சாதகம் பாதகம் ஆகியவைகள் இன்னின்னவை என்று பாகுபாடு செய்து பிரித்தறிவிக்கிறதென்றும் இறைவனே மேற்கண்ட ஆயத்தில், திருகுர்ஆனின் மகத்துவத்தைப்பற்றி விளக்கிக் கூறியுள்ளான். இதனைப் பார்க்கினும் சிறந்த வேறொரு சமாதானம்கூறுவதற்கு எவராலும் முடியாது.

திருகுர்ஆன் நேர்வழி காட்டியாக இருப்பதாலும் இந்த நேர்வழிக்காட்டி அருளப்பட்டது ரமலான் மாதமாகவிருப்பதாலும் அந்த ரமலான்மாதத்தில் நோன்பு வைக்கவேண்டும் என்பது இந்த வசனத்தின் சாராம்சமாகும். ஒருவர் ஒரு ஊருக்குச் செல்வேண்டுமாயின் அந்த ஊருக்குச் செல்லும் பாட்டையில் செல்ல வேண்டும். அந்த ஊருக்குச் செல்லும் பாட்டையில்லாமல் வேறொரு பாட்டையிற் சென்றால் குறித்த இடத்திற்குப் போய்ச் சேரமுடியாதென்பது திண்ணம். அந்தக் குறித்த இடத்திற்குப் பல பாட்டைகள் இருந்தால் அதில் நேரான பாட்டையுமிருக்கும், கோணலான—சுற்றான பாட்டைகளுமிருக்கும். நேரான

பாட்டைதான் சொற்ப தூரமுள்ளதாக இருக்கும் என்பதும், மற்றைய பாட்டைகள் இந்த நேரான் பாட்டையைப் பார்க்கினும் அதிக தூரமுள்ளனவாயிருக்குமென்பதும் யாவர்க்கும் தெரிந்த விஷயமாகும்.

இவ்வுலகத்தில் வாழும் மனிதர் அனைவரும் தன்தனக்குறிய பரமார்த்திக எல்லையை அடைவதற்காகப் பல்வேறு பாட்டைகளிற் சென்று கொண்டிருக்கின்றனராதலின், மானிடர் அனைவரும் இவ்வுலகில் வழிபோக்கராகவே இருந்துவருகின்றனர். இவ்வுலகம் அவ்வழிப்போக்கர்களுக்குத் தங்குமிடமாகவே இருந்து வருகிறது. ஆதலால், எந்த வழிப்போக்கனும் தங்குமிடத்தில் தனக்குக் கிடைக்கும் சிறிது சௌகரியத்தை நினைத்துத் தனது பிரயாணத்தை நிறுத்திக் கொள்வதே இல்லை. இதுபோல இவ்வுலகில் வாழும் மனிதரில் எவரும் தமது அசல் பிரயாணத்தை மறந்து இவ்வுலகிலேயே சாசுவதமாகத் தங்கி விடுவதில்லை. பிறந்த ஒவ்வொருவரும் தம்தமக்கென நிர்ணயிக்கப்பட்ட காலவரையரை இங்கு தங்கி இருந்துவிட்டு அப்புறம் தமது பிரயாணத்தை மறுபடியும் ஆரம்பித்துக்கொள்கின்றனர். இப்படிப்பட்ட பிரயாணத்திற்கு வேண்டிய வசதிகளையும் சௌகரியங்களையும் தேடிக்கொள்வதே இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவரின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்.

இதற்கிணங்க, பரமார்த்திக வழியில் நடக்கும் பிரயாணியானவன் இவ்வுலகில் தங்கியிருக்கவேண்டிய காலத்தில் மறு உலகப் பிரயாணத்திற்கு அவன் தேடிக்கொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களென்ன? அவனது பிரயாணம் சுலபமாகவும், வெகு துரிதத்திலும் குறித்த இடத்தில் போய் சேருவதற்கு எவ்வழியில் அவன் செல்லவேண்டும், அவ்வழியில் சம்பவிக்கக் கூடிய காரியங்களென்ன? என்ற விஷயங்களை எல்லாம் திருகுர்ஆன் மிகவும் தெளிவாகக் கூறுகிறது. தான் இதற்குமுன் எப்பொழுதும் செல்லாத புதியதொரு தேசத்திற்குச் செல்பவனுக்கு Guide Book வழிகாட்டிப் புத்தகம் எவ்வாறு உதவியாக இருந்து, அவன் இறங்கவேண்டிய இடம், தங்க வேண்டிய இடம், செலவு செய்யவேண்டிய தொகை, அந்தந்த நகரங்களிலுள்ள விசேஷங்கள், பார்க்கவேண்டிய இடங்கள் முதலியவைகளை விளக்குவதுபோல, திருகுர்ஆன் மறு உலகத்தைப்பற்றியும், மறுஉலகவாழ்க்கையைப்பற்றியும் விளக்கிக் காட்டும் வழிகாட்டிநூலாக (Guide Book) இருக்கிறது என்று கூறலாம். ஆகவே, தனக்குத் தெரியாத ஒரு அந்நியதேசத்திற்கு முதல் முதலாகச் செல்ல விரும்புபவர் அந்ததேசத்தைப் பற்றிய "வழிகாட்டிப் புத்தகத்தை" எவ்வளவு ஆவலுடனும், சிரத்தையுடனும், கவனத்துடனும் படிப்பார் என்பதையும், அவர் தமது பிரயாணகாலத்தில் அந்தப் புத்தகத்தைதமது முக்கிய சாமான்களில் ஒன்றாகப்பாவித்து அடிக்கடி அதனைப் படித்துப் பார்த்து, அதில் சொல்லப்பட்டபடி அவர் நடந்துகொள்வார் என்பதையும் நாம் சொல்லாமலே நேயர்கள் அறிவர்.

இதுபோலவே மறு உலகவாழ்க்கைக்காக, மறு உலகத்தை நோக்கிப் பிரயாணம் சென்று கொண்டிருப்பவருக்கு, மேற்கண்ட வழிகாட்டிப் புத்தகம் உதவுவதைப் பார்கினும் அதிகம் உதவியாக இருக்கிற திருகுர்ஆனை மக்கள் ஒவ்வொருவரும் நன்கு படித்து, அதில் சொல்லப்பட்ட விஷயங்களைக் கவனத்தில் வைத்துக் கொள்வதுடன், எந்தநேரமும் அதனை அடிக்கடி பார்த்து முக்கிய விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொண்டே இருப்பதுடன், சதாவும் அது தங்கள் கையைவிட்டகலாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்யாமற் றவறி விடுவோமாயின் மறு உலக வாழ்க்கைக்காக யாம் செய்யும் இந்தப் பிரயாணத்தில் அநேகம் கஷ்டங்களை அனுபவிக்க நேருவதுடன் நேரான

பாதையைவிட்டுத் தவறி கோணலான பாதைகளிலும், காட்டுப் பாதைகளிலும் சென்றுவிடக் கூடும். அவ்வாறு வேறு வழியிற் சென்றுவிட நேர்ந்தால் அது நமது முக்கிய நோக்கமாகிய குறித்த இடத்திற்குக் கொண்டுபோகாமல் வேறு எங்கேனும் கொண்டுபோய் தள்ளிவிடவும், அங்கு நமக்கு அநேகம் கஷ்டசங் கடங்கள் நேரிடவும் கூடும் அல்லவா? ஆகவே, மறுஉலகயாத்திரையில் நேரான பாதையை அடையவும், வழியில் எவ்விதப்பயமும், கஷ்ட சங்கடமுமில்லாமல் குறித்த காலத்திற்குள் குறித்த இடம் போய்சேரவேண்டும் என்று விரும்புகிற நாம், திருகுர்ஆனை அல்லும் பகலும் அனவரதமும் ஓதி அதிலுள்ள விஷயங்களை நன்கு துருவி ஆராய்ந்து, அதன்படி மயிரிழை கூடப்பிசகாமல் நடக்க வேண்டியது அவசியம் என்பதை நாம் மீண்டும் உங்களுக்கு எடுத்துக் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை.

இதனைக் குறித்துத்தான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "எவன் திருகுர்ஆனை ஓதி, இரவிலும் பகலிலும் அதன்படி நடந்து, அதிற் சொல்லப்பட்டுள்ள விலக்கலான காரியங்களைத் தவிர்த்து, அனுமதிக்கப்பட்டுள்ள காரியங்களைக் கடைப்பிடித்து நடக்கின்றானே அவனுடைய ஸ்தூலத்திலுள்ள தசையையும், உதிரத்தையும் அல்லாஹ் நரகத்திற்கு ஹராமாக்கிவிடுகின்றான். இன்னும் அவர்களை நல்லோர்களான சங்கைவான்களான சிநேகிதர்களாகவும் ஆக்கிவிடுகின்றான். எனவே, நியாயத்தீர்ப்பின் நாள் வரும்போது இந்தத் திருகுர்ஆன் இம்மனிதனுக்கு ஆதாரமாகிவிடுகிறது" என்பதாகக் கூறியுள்ளார்கள். எனவே, மறு உலகவாழ்க்கையில் மக்கள் நரகலோகம் சேராமல் காப்பாற்றப்பட்டு, இறைவனது கிருபையால் சுவனபதியடைந்து அல்லாஹுதஆலாவின் 'லிக்கா' என்னும்சந்திப்பைப் பெறுவதே முக்கியநோக்கமாக இருக்கிறது. இதனைத்தான் "முக்தி" என்று கூறுகின்றனர்.

மேலே எடுத்துக் காண்பிக்கப்பட்ட ஹதீது ஷரீபில், திருகுர்ஆனை ஓதி அதன்படி எப்பொழுதும் நடந்து அதனை தனக்கொரு வழிகாட்டியாக வைத்துக் கொண்டிருப்பவனது தசையையும் உதிரத்தையும் இறைவன் நரகத்திற்கு ஹறாமாக்கி விடுகின்றான் என்று கூறி இருப்பதை நம்மவர் கவனிக்கவேண்டும். திருகுர்ஆன் ஷரீபின்படி நடப்பவர் நரகம் புகமாட்டார் என்பது இதிலிருந்து நன்கு தெரிகிறது. அதாவது, இவ்வுலகில் தவறான வழியைக் கடைப்பிடிக்க அந்தக் குர்ஆன் இடங்கொடுக்கமாட்டாது என்பதைத்தெளிவாகத் தெரிந்துகொண்டோம். ஆனால் தவறானவழியிற் செல்லாவிட்டால் நேரான வழியை அடைந்து விடுவதற்கு என்ன ஆதாரம் என்ற ஐயம் உண்டாகக் கூடும். இதனைக் குறித்து நாயகம் (ஸல்) அவர்கள் ஷை ஹதீதில் "கியாமத்துநாள் ஏற்படும்போது திருகுர்ஆன் அந்த மனிதனுக்கு ஆதாரமாக இருக்கும்" என்று கூறி இருக்கிறார்கள்.

ஒருவர் ஒரு வழக்கில், தக்க ரிக்கார்டுகளும் சட்ட பாயின்டுகளும் தமக்குச் சாதகமாக வைத்துக்கொண்டிருப்பாராயின் அவ்வழக்கில் அம்மனிதருக்குத் தான் சாதகமேற்படுமென்பது திண்ணம். எனவே, நியாயத்தீர்ப்பு நாளில் அல்லாஹுதஆலாவின் விசாரணையின் போழ்து மனிதர்களும் ஜின்களும் தங்கள் தங்கள் கிரியைகளுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதிருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒருவர் தம்முடைய கிரியைகளுக்குத் திருக்குர்ஆனை ஆதாரமாகவும் ரிக்கார்டாகவும் வைத்திருப்பாராயின் அவர் அன்றைய நீதி மன்றத்தில் தமக்குச் சாதகமான தீர்ப்பையே பெறுவார் என்பதில் என்ன சந்தேகம்? சாதகமான தீர்ப்பைப் பெறுகிற ஒவ்வொருவரும் சுவனபதி அடைவதுடன் அல்லாஹுதஆலாவின் 'லிக்கா' என்னும் சந்திப்பை அடையாமலிரார்

என்ற விபரத்தையும் இங்கு மீண்டும் வற்புறுத்திக் கூறவேண்டிய அவசிய மில்லை என நினைக்கிறோம்.

"திருகுர்ஆன் ஷாபி ஆகவும், முஷப்பஆக வும் (சிபாரிஷ் செய்வதாக) இருக் கிறது. எவர் இதனைத் தனக்கு வழி காட்டியாக ஏற்படுத்திக்கொள்கிறாரோ அவரை அது சுவனபதியில் சேர்க்கும். இன்னும் எவர் இதனை முதுகுக்குப் பின்போட்டு விடுகிறாரோ அவரை அது நரகத்தில் கொண்டுபோய்ச் சேர்க் கும்" என்பதாக அந்த நாயகம் (ஸல்.) அவர்கள் மற்றொரு ஹதீதில் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள். எனவே, திருகுர்ஆனைத் தனக்கு வழிகாட்டியாக வைத்துக்கொள்பவர் சுவன பதவியை அடைவார் என்பதும், அதனை அலக்ஷி யம் செய்து அதிற் சொல்லப்பட்டுள்ள கட்டளைகளைக் கடைப்பிடித்து நடக்காம லும், விலக்கல்களைத் தவிர்த்துக்கொள் ளாமலு மிருப்பவர் திருகுர்ஆனை தமது முதுகுக்குப் பின் போட்டவராகின்றார் என்பது திண்ணம். ஆகவே, அவர் நரகம் புகவேண்டிய தேற்படும். அல் லாமலும், இந்தத் திருகுர்ஆன் ஷரீபே இந்த மனிதருக்காக நாளைக் கியாமத்து நாளில் அல்லாஹுதஆலாவினிடத்தில் சிபாரிஷ் செய்வதாக ஏற்பட்டு விடுகிறது என்பதும் இதிலிருந்து தெரியவருகிறது.

மக்கள் அனைவரும் இந்தத் திருகுர் ஆனை அல்லும் பகலும் அனவரதமும் ஓதவேண்டும், அதிற் கூறப்பட்டுள்ள விஷயங்களை உணர்ந்துகொள்ள வேண் டும், அதிலுள்ள ஏவல்களைக் கடைப் பிடித்து விலக்கல்களைத் தவிர்த்து நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே தொழுகையில் திருகுர்ஆன் ஓதவேண் டும் என்றும், முக்கியமாக திருகுர்ஆனின் சாராம்சமடங்கிய அத்தியாய மாகிய "ஸூரத்துல்பாத்திஹா" என்னும் அல் ஹம்துஸூரத்தைஓதி, அதனுடன்வேறு ஆயத்துகளிற் சிலவற்றை ஓதவேண்டும் என்றும் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கி றது. ஒருவர் தினசரி 5 வேளை திருகுர் ஆனின் சாராம்சமாகிய அல்ஹம்து ஸூரத்தையும் இதர ஆயத்துகளையும் ஓதி வருவாராயின் அவரது மனப் பான்மை நாளுக்குநாள் மாறுபட்டு இறைவனது நேரான பாதைக்கு அவர் ஆளாகி விடுவார் என்பதும், இறைவ னது பாதைக்கு ஆளாகிய ஒருவர் மானக்கேடான காரியங்களையும் வெறுக் கத்தக்க காரியங்களையும் செய்யாமல் விலகிக்கொள்வார் என்பதும் திண் ணம். இதனைக் குறித்துத்தான் திரு குர்ஆனில் "நிச்சயமாகத் தொழுகையானது மானக்கேடானவைகளையும் வெறுக்கத்தக்கதை யும் விலக்குகிறது" என்பதாக இறைவன் கூறி இருக்கிறான்.

தொழுகையில் திருகுர்ஆன் முழு வதையும் ஓதிமுடிக்க முடியாது என்ப தும், அதுவும் தினசரி ஒவ்வொரு வேளை யும் ஓதிமுடிக்க முடியாது என்பதும் எல் லோருக்கும் தெரிந்த விஷயம். ஏனெ னில், திருகுர்ஆனிலுள்ள ஆயிரக்கணக் கான ஆயத்துகளனைத்தையும் ஒருவர் அழுத்தம் திருத்தமாக ஒருமுறை ஓதுவ தானாலும் குறைந்தபக்ஷம் ஒருநாள் முழுவதும் சரியாகக் கழிந்துவிடும் என் பது சாதாரணமாக யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். அதிலும் தினசரி ஐந்து வேளையிலும் அதனை முழுதும் ஓதுவ தென்றால் 5 முறை திருகுர்ஆன் முழு வதையும் ஓதவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஒருமுறை ஓதுவதே கஷ்ட மாக இருக்கும்போது 5 முறை ஓதுவ தென்பது அளவுக்கு மீறிக் கஷ்டங் கொடுப்பதாக இருக்கிறது. ஆதலின், ஜனங்களின் சௌகரியத்தை உத்தே சித்து திருகுர்ஆனிலுள்ள சிறு அத்தியா யங்களையோ அல்லது குறைந்தபக்ஷம் 3 சிறிய ஆயத்துகளையோ ஓதி விடுதல் போதுமானதென்று சட்டம் ஏற்படுத் தப்பட்டிருக்கிறது. ஆயினும், திருகுர் ஆன் முழுவதிலுள்ள முக்கிய கருத்தினை உணர்ந்து கொள்வதற்காக அதன் சார மாகிய "ஸூரத்துல் பாத்திஹா" முழு

வதையும் ஓதவேண்டும் என்றும் சட்டம் வகுத்திருக்கிறார்கள். இந்த அத்தியாயத்தை முழுவதும் ஓதுவதால் திருகுர்ஆனின் கருத்துக்களை ஒருவாறு தெரிந்து கொள்ளமுடிகிறது. மேலும், இதனைப் பரிபூரணமாக ஓதி யாவரும் கேட்டு, திருகுர்ஆனில் சொல்லப்பட்ட விபரங்கள் முழுவதையும் நன்கு விபரமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, றமலான் மாதத்தில் விசேஷமாகத் தொழுகிற "தராவீஹ்" தொழுகையில் குறைந்த பக்ஷம், அந்த ஒரு மாதத்தில் ஒரு முறையேனும் பாராயணம் செய்யவேண்டும் என்று சட்டம் வகுத்து அதன்பிரகாரம் முற்காலத்திலிருந்து தற்காலம் வரை கிராமங்களிலும், நகரங்களிலும் ரமலான் மாதத்தில் ஒருமுறை திருகுர்ஆனை ஓதித்தொழுவது வழக்கமாக இருந்துவருகிறது.

ஆகவே எல்லாம் வல்ல அவ்வல்லோன் நம்மவருக்கு நேரான வழியைக் காட்டி, திருகுர்ஆனின் ஏவல் விலக்கல்களையும், அது காட்டும் வழியையும் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற விருப்பம் நம்மவருக்கு உண்டாகச் செய்து, அதற்கான முயற்சியில் ஈடுபட அருள் சுரப்பானாக ஆமீன்.

றமலான் மாதமும் நோன்பும்

விசுவாசங்கொண்டவர்களே! நீங்கள் (பாவங்களைத்) தவிர்த்துக்கோள்வதற்காக, எண்ணப்பட்ட சில தினங்களில் உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டதுபோல உங்கள்மீதும் விதியாக்கப்பட்டிருக்கிறது. எனவே, உங்களில் எவரேனும் (அக்காலத்தில்) நோயாளியாக, அல்லது பிரயாணத்தில் இருந்து நோன்பு வைக்க வசதியில்லாமல் அக்காலத்தில் நோன்பு வைக்காமல் இருந்தால் வேறு நாட்களில் அவைகளின் எண்ணிக்கை (ப்படி நோன்பு வைத்துவிடவேண்டும்). ஆனால், அதற்குச் சக்தி இல்லாதவர்கள்மீது (நோன்பு வைக்காமல் இருப்பதற்கு) ஒரு ஏழைக்கு உணவளிப்பது பரிகாரமாக (பித்யாவாக) இருக்கிறது. ஆகவே, ஒரு நன்மையை எவர் அதிகமாகச் செய்கிறாரோ அது அவருக்கு நல்லது தான். எனினும், நீங்கள்நோன்பு வைப்பதுதான் உங்களுக்கு நன்மையாகும். இதனை நீங்கள் அறிந்திருப்பின்.

(திரு குர்ஆன்)

திரு குர்ஆனிலுள்ள இவ்வசனங்களில் அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா நோன்பு வைப்பது கடமை என்பதை வெயிட்டிருக்கிறான். நோன்புவைப்பதானது இறைவனது வணக்கங்களில் கஷ்டமான ஒரு வணக்கமாகும். அதாவது உணவிலும் உண்டியிலும் அதிகப் பிரியமாக வுள்ளவர்கள் தங்கள் மனவிருப்பத்திற்கு மாறாகப் பட்டினியாக விருத்தல் என்பது அவர்களுக்கு மிகுந்த சங்கடமாக இருக்கும். ஆதலால், நோன்பு வைத்துத் தங்களது மன விருப்பங்களை ஒடுக்கி அல்லாஹு தஆலாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் ஜனங்களுக்கு மனத்திருப்தி ஏற்படட்டும் என்பதற்காக அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா மேற் கூறப்பட்டுள்ள அதே ஆயத்தில் "உங்களுக்கு முன்னுள்ளவர்கள்மீது நோன்பு கடமையாக ஏற்படுத்தப்பட்டிருந்ததுபோல உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டிருக்கிறது" என்று கூறியிருக்கிறான். எனவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது உம்மத்துகளான நம்மீது மாத்திரம் நோன்பு கடமையாக்கப்படவில்லையென்பதையும், நமக்கு முன்னுள்ள வர்க்கத்தார் அனைவர் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்ததென்பதையும் இதிலிருந்து தெரிந்துகொள்கிறோம்.

ஹஜ்ரத் ஆதம் (அலைஹி.) அவர்கள் "அய்யாமுல்பீள்" அதாவது ஒவ்வொரு மாதத்திலும் 13, 14, 15 களில் நோன்பு வைத்துக்கொண்

டிருந்தார்கள். யூதர்கள் ஆஷூரா நாள், சனிக்கிழமைகள், இன்னும் சில நாட்களில் நோன்பு வைத்துக்கொண்டிருந்தனர். முஸ்லிம்களாகிய நம்மீது றமலான்மாத நோன்பு விதியாக்கப்பட்டது போல் கிறிஸ்துவர்கள் மீதும் றமலான்மாத நோன்பு விதியாக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் மார்க்கக்கட்டளைகளில் தங்களிஷ்டப்படி பல மாறுதல்களைச் செய்துகொண்டிருந்ததுபோல, நோன்பு விஷயத்திலும் மாறுதல்களைச் செய்தனர். அதாவது, றமலான் மாதம் சில சமயங்களில் வெய்யிற் காலத்தில் வந்துவிடுவதால் தங்களுக்கு தாகம் எடுக்கும்போது சிரமமாக இருக்கிறதென்றும், சில சமயங்களில் பனிகாலத்தில் வந்து விடுவதால் பசியுண்டாகி அதனால் கஷ்டமேற்படுகிறது என்றும் கூறி அந்த மதத்திலுள்ள குருமார்மள்,பனிகாலமும் வெய்யிற்காலமுமில்லாத வேறொரு காலத்திற்கு அதனை மாற்றிவைத்துக்கொண்டனர். இவ்வாறு தங்கள் சௌகரியம் இதனை மாற்றிவைத்துக் கொண்டதற்காக ஒரு மாதத்திற்குமேல் அதிகமாக இன்னும் 10 நாள் நோன்பிருப்பதாக ஏற்படுத்திக் கொண்டு 40 நாள் நோன்பிருத்தனர். பின்னர், தங்களது அரசர் கடும் வியாதியால் பீடிக்கப்பட்டபோது இறைவனிடம் வேண்டுதல் செய்துகொண்டனர். அதாவது, தங்கள் அரசருக்கு ஏற்பட்டுள்ள நோய் நீங்கிவிடுமாயின் ஒருவாரம் அதிகமாக நோன்பு வைப்பதாகப் பிரார்த்தனை செய்தனர். இவர்களது மனம் போல் அவ்வரசனுக்கு நோய் நீங்கிவிடவே, அவர்கள் 40 நாட்களுடன் ஒருவாரம் நோன்பை அதிகமாகச் சேர்த்துக்கொண்டனர். எனவே, இப்பொழுது கிறிஸ்துவர்களில் 47 நாள் நோன்பிருப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

இவ்விதமாக உலகத்திலுள்ள எல்லா ஜாதியினரும் நோன்பு வைப்பதைத் தங்களது மதக் கடமையாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இந்த நோன்பு வைக்கும் காலம், நோன்புகளின் எண்ணிக்கை, நோன்பு வைக்கும் முறை ஆகியவைகளில் பலத்த வித்தியாசங்களிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனினும், இந்த நோன்பு எக்காரணத்தினால் ஏற்படுத்தப்பட்டதோ, இன்னும் எந்த நன்மையை உத்தேசித்து விதியாக்கப்பட்டதோ அந்த நன்மையும் பலனும் ஏனைய சமூகத்தினர் நோன்பை அனுஷ்டிக்கும் முறையில் இல்லை என்பதையும், உத்தேசபலன் முஸ்லிம்களாகிய நாம் அனுஷ்டித்து வரும் நோன்பிலேயே இருந்துவருகிறது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

தவிர, அல்லாஹு சுப்ஹானஹு வ தஆலா நோன்பு வைக்கும்படியாக நமக்கு கட்டளையிட்டது வீணாக ஏற்படுத்திய விதியன்று, இதற்குத் தக்க காரணம் இருக்கிறது என்பதையும் மேற்கண்ட ஆயத்தில் விவரித்துக் கூறியுள்ளான். அதாவது "நீங்கள் பபபக்தியுள்ளவர்களாக ஆகுவதற்காக" என்பதாகக்கூறி இருக்கிறான். ஆனால் நோன்புநோற்கவேண்டும்என்று அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா கட்டளையிட்டாலும், அக்கட்டளையின்படி நாம் நோன்பு வைப்பதாலும் அல்லாஹு தஆலாவினது பெருமை அதிகமாகி விடுவதுமில்லை; அவனுக்கு நாம் ஏதேனும் உதவி செய்து விடுவதுமில்லை. நாம் நல்லவர்களாகுவதற்காகவும், பயபக்தியுள்ளவர்களாகுவதற்காகவுமே நாம் நோன்புவைக்கிறோம். நாம் பயபக்தியுள்ளவர்களாகி விடுவதால் அல்லாஹு தஆலாவின் அபிமானமும் பிரீதியும் நம்மீது ஏற்படுகிறது. இதனால் நாம் அவனது கருணைக்கு உரியவர்களாகி சுவர்க்கானந்தத்தை அனுபவிப்பவர்களாகி விடுகிறோம். ஆகவே, நாம் நோன்பு வைப்பதால் நமக்குத்தான் பிரயோஜனமும் நன்மையுமேற்படுகிறதே யன்றி, அல்லாஹுதஆலாவுக்கு இதனால் எவ்வித நன்மையுமேற்பட்டு விடுவதில்லை என்பதும் மேற்கண்ட ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

மற்றொரு விஷயத்தையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டியதிருக்கிறது. அல்லாஹுதஆலாவை நாம் வணங்குவது நமது நன்மைக்காகவே இருந்தபோதினும், நமது சக்தியையும், நமது சௌகரியத்தையும் கவனிக்காமல் நாம் குறித்த காலத்தில் அவனுக்கு அவ்வணக்கத்தைச் செய்துவிட வேண்டும் என்று அவ்வல்லோன் நம்மை நிர்ப்பந்தம் செய்யவில்லை. இந்த றமலான் நோன்பையே எடுத்துக்கொள்வோம். றமலான் மாதத்தில் நாம் நோன்பிருக்க வேண்டியது நமது கடமையாக இருப்பினும், நாம் பிரயாணத்திலிருக்கும் போதோ, அல்லது நோயாளியாக இருக்கும்போதோ றமலான் மாதம் பிறந்து, அக்காலத்தில் நோன்பிருக்க நமக்கு அசௌகரியமாக இருக்குமாயின் அப்பொழுது நாம் அந்தக் காலத்தில் நோன்பு வைக்காமல் இருந்து நமக்குச் சௌகரியம் ஏற்பட்ட பின்னர் நாம் விட்டுவிட்ட நோன்புகளை

திரும்ப வைத்து அதனைப்பூர்த்திசெய்ய ஹேதுவுண்டு. நம்மவரில் ஒருவருக்கு வயோதிகம் காரணமாகவோ அல்லது வேறு தக்ககாரணத்தாலோ நோன்பு வைக்கச் சக்தியே இல்லாது போய் விடுமாயின் அதற்காகப்பரிகாரம் செய்து கொள்ளும்படி. அதாவது "பித்யா"க்கொடுக்கும்படி இறைவன் கட்டளையிட்டிருக்கிறான். என்னே, இறைவனின் கருணை!

தொழுகை, நோன்பு, ஜக்காத் ஹஜ்ஜு முதலியவைகளை நிறைவேற்றுவது கடமை என்பதாக இஸ்லாம் மதம் கட்டளையிட்டிருக்கிறது. கட்டளையிட்டது மட்டுமில்லாமல் இவைகளைக் கடமையாக ஏற்படுத்தி, ஒவ்வொரு முஸ்லிமும் இவைகளைச் செய்வது அவசியமெனவும் வற்புறுத்தி இருக்கிறது. இதற்குக் காரண மென்னவெனில், இவையனைத்தும் அல்லாஹு தஆலாவின் திருப்தியை அடைவதும், அவனது மஅரிபத்தைப் பெற்றுக் கொள்வதுமேயாகும். இந்த வணக்கங்களெல்லாம் மேலே கூறப்பட்ட காரியங்களை அடைவதற்கான உபகரணங்களாக இருக்கின்றன. இவ்வணக்கங்களில் ஒன்று திரேக ஊழியம் சம்பந்தப்பட்டதாக இருந்தால், மற்றொன்று ஆன்மா சம்பந்தப்பட்டதாக இருக்கிறது; இன்னொன்று பொருள் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது.

எனவே, பலதிறப்பட்ட இவ்வணக்கங்களால் முஸ்லிம்கள் தங்களது அதி ஆச்சரியமான காட்சியைச் சமர்ப்பிக்கின்றனர். ஒரு முஸ்லிம் தனது தொழுகையில் பூமியின் மீது தனது நெற்றியைவைத்து ஸுஜூது செய்து நிமிரும்போது சூரியனையும் சந்திரனையும் கூட நாணமுறும்படிச் செய்யத்தக்க விதமாகத் தனது நெற்றியின் மீது இலங்கும்படியான அடையாளத்துடன் எழுந்திருக்கிறார்.

ஷை முஸ்லிம் பணம் சம்பாதித்துச் செல்வந்தராகி விடுவாராயின் செல்வத்தின் பாலுள்ள குருட்டுத்தனமான ஆசையும், அதனைப் பெருக்கிக்கொள்ளவேண்டும் என்ற கருத்தும் தன்னை இறைவனது மஅரிபத்திலும் வணக்கத்திலும் ஈடுபடும்படி செய்வதில்லை என்பதை உணர்ந்து, இறைவன் பால் பற்றும், விசுவாசமும் கொள்ளவேண்டும் என்றும் அவனை வணங்கவேண்டும் என்றும் கருதி, பணத்தின்பாலுள்ள பற்றையும் ஆசையையும் குறைத்துக் கொள்வதற்காக தமது செல்வத்தில் நாற்பதிலொருபாகத்தை ஜக்காத் வரி என்பதாக தர்மம் கொடுத்து விடுகிறார். இதனால் அவருக்குப் பணத்தின்பாலுள்ள பேராசை நீங்குவதுடன் அவரது அகமும் சுத்தமாகிறது.

சுருங்கக் கூறுமிடத்து, மனிதன் அடையும் அதிக உச்சஸ்தானம் அவன் இறைவனை அடைவதுதான். அவனது இருதயத்தில் அல்லாஹு தஆலாவின் மீதுள்ள நீங்காப் பற்றைத் தவிர வேறொன்றுக்கும் இடமிருக்கக் கூடாது என்பதே அவனது இவ்வுலகவாழ்க்கையின் லக்ஷியமாகும். ஆகவே, இந்த லக்ஷியத்தை அடையவிடாமற் தடுப்பவைகளை உதறித் தள்ளிவிடுவதும், அவைகளுக்கு இடங்கொடுக்காமல் இருப்பதும் அவசியமாகும். இப்படித் தடை செய்பவைகளில் ஷைத்தானும், மன இச்சையும்தான் பிரதானமானவைகள். இவை இரண்டும் மனிதனுக்குக் கொடும் விரோதிகளாக வுள்ளவைகள். இவையிரண்டிற்கும் அகப்படாமல் தப்பித்துக் கொள்வது மிகவும் சிரமமாகும். ஆதலால், இவையிரண்டையும் வெவ்வேறாகப் பிரித்துத் தனித்தனியே தோற்கடிப்பதுதான் அறிவுடமையாகும்.

தவிரவும், அல்லாஹுதஆலா மனிதனைச் சிருஷ்டிக்கும்போதே அவனில் முரண்பட்ட இரண்டு சக்திகளை ஏற்படுத்தியே சிருஷ்டித்திருக்கிறான். இவைகளில் ஒன்று மனிதனுக்கு நன்மை செய்வதாக இருக்கிறது. மற்றொன்று தீமை செய்வதாக இருக்கிறது. எனவே, மனிதன் இவ்விரண்டில் தனக்கு நன்மைசெய்யக் கூடிய சக்திக்கு ஆக்கமளித்துப் பலங்கொடுத்து அதனை வளர்த்து அதற்கு இணங்கி நடக்கவேண்டும்; தனக்குத் தீமை செய்யும் சக்திக்கு இருக்கும் பலத்தைக் குறைத்து அதனைக் கீழ்ப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்தால் அவன் மலக்குகளினும் உயர்ந்த அந்தஸ்தை அடைகின்றான். அவ்வாறு செய்யாது, தனக்கு நன்மை செய்யக் கூடிய சக்திக்குப் பலங்கொடுக்காமலும், அதனைப் பின்பற்றாமலு மிருந்துகொண்டு தனக்குத்தீமை செய்யும் சக்திக்குப் பலத்தைக் கொடுத்து அதனைப் பின்பற்றுவானாயின் அவன் மிருகங்களிலும் கடையனாகி விடுகின்றான். இதனைக் குறித்துத்தான் இறைவன், மனிதனை "அஹ்ஸனத்தக்வீம்" (மிகவும் அழகான சிருஷ்டி) என்றும், "அஸ்பலஸ்ஸாபி

லீன்" (கிழானவர்களுக்கும் கிழானவன்) என்றும் கூறியுள்ளான்.

எனவே, மேலே கூறப்பட்ட இரண்டு விரோதிகளில் ஒருவனன ஷைத்தான் மனிதனுக்குப் புறம்பேயுள்ளவன்; மற்றொருவனன நப்ஸு மனிதனுக்குள்ளிலேயே இருப்பவன். இவ்விருவிரோதிகளில் ஒருவன் பகிரங்க விரோதியாகவும், மற்றொருவன் நயவஞ்சகனுகவும் இருக்கிறுன். ஆகவே, பகிரங்க விரோதியைப் பார்க்கினும் நயவஞ்சக விரோதியிடம் தான் மனிதன் மிக சுலபமாக ஏமாற்றமடைய முடியும். அல்லாமலும், மனிதனுக்கு, உள்ளில் இருக்கும் நயவஞ்சக விரோதியான நப்ஸின் உதவியின்றி அவனுக்கு வெளியில் இருப்பவனன பகிரங்கவிரோதியாகிய ஷைத்தானுல் எவ்விதத்தீமையும் கெடுதியும் செய்யமுடியாது. ஆகவே, இவ்விரு விரோதிகளிலும் நப்ஸு என்னும் விரோதியை அடக்கி ஒடுக்கி வைப்பதானது இரண்டு விரோதிகளையும் ஒடுக்கிவைப்பதற்குச் சமமாக இருக்கிறது. அப்படி ஒடுக்கி வைப்பதற்காகவேதான் அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா நோன்பு வைப்பதைக் கடமையாக ஏற்படுத்தி இருக்கிறுன். இஸ்லாம் மதத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள், ஒழுங்குகள் முதலியவைகள் தவருமல் ஒருவர் நோன்பு வைத்து வருவாராயின் அவருடைய நப்ஸின் பலங்குன்றி, அது அவருக்குக் கீழ்ப்படிவதாகவே ஆகிவிடும். நப்ஸைக் கீழ்ப் படுத்திக்கொண்ட ஒருவர் பகிரங்கவிரோதியான ஷைத்தானைக் கீழ்ப்படுத்திக்கொள்வது அவ்வளவு சிரமமல்ல. இதனைக் குறித்துத்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "நாம் சிறிய ஜிஹாதை (மார்க்க யுத்தத்தை)ச் செய்து முடித்து விட்டோம்; எனவே, இனிப்பெரிய ஜிஹாதின்பால் செல்வோமாக" என்றுகூறி இருக்கிறுர்கள். அதாவது, தனது நப்ஸுடன் போராட்டம் செய்து அதனை அடக்குவதுதான் பெரிய ஜிஹாதாகும். இந்தப் பெரிய ஜிஹாதில் முஸ்லிம்களுக்கு முக்கிய கருவியாக இருப்பது நோன்பு வைப்பதாகும். ஆகவே, நாமனைவரும் இஸ்லாமிய ஷரீஅத்தில் சொல்லப்பட்ட விதி விலக்குகள், ஒழுங்குகள் முதலியவைகளைக் கடைப்பிடித்து நோன்பு வைத்து நமக்குள்ளேயுள்ள நயவஞ்சகனன நப்ஸுடன் போர் செய்வோமாக. இப்பெரிய ஜிஹாதில் நமக்கு இறைவன் வெற்றியுமளிப்பானுக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

வேதங்களின் தன்மை

பரிசுத்த வேதங்களைப்பற்றிய இஸ்லாமிய அடையாளங்கள்

(சென்றமீ 414-ம் பக்கத் தொடர்)

II

திருகுர்ஆன் எந்தெந்த வேதங்களைப்பற்றிப் புகழ்ந்திருக்கின்றதோ அந்த வேதங்களின் தன்மைகளையும் லக்ஷணங்களையும் கூறி இருக்கிறது. அமீர் ஹம்ஜாஜங், சார் தர்வேஷ் கதை ஆகியவைகளுக்கு "இன்ஜீல்" என்று பெயரிட்டு இவைகள்தான் இஞ்ஜீல் வேதம் என்று தாவாச்செய்தால் அதனை மெய்யென்று ஒப்புக்கொள்ளும்படி திருகுர்ஆன் கூறவில்லை. ஆனுல் சத்திய வேதங்களுக்குள்ள அடையாளங்கள் இன்னின்னவைகளென்றும், அவ்வடையாளங்களுள்ள வேதங்களை அசல் வேதங்களென்று ஒப்புக்கொள்ளுங்கள் என்றும், அவைகளுக்குரிய அடையாளங்களையும் குறிப்பிட்டிருக்கிறது. பழைய வேதங்களை விசுவாசிக்க வேண்டும் என்று திருகுர்ஆன் கட்டளையிட்டு விட்டு, அவைகளின் அடையாளங்களைக் கூருமலிருந்திருக்குமாயின் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் முஸ்லிம்களை ஏமாற்றச் செய்யும் சூழ்ச்சியில் வெற்றிபெற்றுவிடுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஆனுல், அவ்வேதங்களை அறிந்து கொள்வதற்கான அடையாளங்களையும் குறிகளையும் இறைவன் நம்மிடம் கொடுத்து விட்டதால், மாதாகோவில் சபையார் பொய்யாகக் கட்டிய கிரந்தத்தை வேதமென்று ஒப்புக்கொள்ளுமாறு நம்மிடம் அவர்கள் தாவாச் செய்யமுடியாது. எனவே, பரிசுத்த வேதாகமங்களின் சில அடையாளங்களைக் கீழே தருகிறேம் :—

1. (மத்தேயு - மார்க்கு - லூக்கா - யோவான் ஆகியவர்களால் எழுதப்பட்ட) இவாஞ்சலியங்கள் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அருளப்பட்டனவல்ல என்பது கிறிஸ்துவர்களின் கொள்கையாகும். ஏனெனில், அவர்கள் திருத்துவக் கொள்கைக்காரர்களாதலின், ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களைத் தேவனென்றே நம்பி இருக்கிறார்கள். ஆதலின், இஞ்ஜில் வேதத்தை அவரது சிஷ்யர்கள் இல்ஹாமின் மூலமாக இயற்றியதுடன், ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களது ஜீவியகால நடவடிக்கைகளையும் பிரசார அலுவல்களையும் பலதரப்பட்ட காலங்களில் எழுதினார்கள். இந்த சிஷ்யர்கள் எழுதிய கிரந்தத்தைத்தான் கிறிஸ்துவர்கள் "இவாஞ்சலியம்" என்ற பெயரால் அழைக்கிறார்கள். இதை பாதிரி இமாதுத்தீன் தம்முடைய "ஹக்கிக்கே இர்பான்" என்ற புத்தகத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"இஞ்ஜீல் கர்த்தருக்கு இறக்கப்பட்டது என்பதாக முஸ்லிம்கள் விசுவாசங்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவர்களாகிய நாங்கள் இந்தக் கொள்கையை அங்கீகரிப்பதில்லை. மஸீஹானவர் வானத்திற்குச் சென்ற பின்னர் தேவனுடைய இல்ஹாமின் மூலமாக நான்கு இவாஞ்சலியங்களையும் ஹவாரிய்யீன்கள் ஒழுங்குபடுத்தி இயற்றினார்கள் என்பது நமது விசுவாசம்."

ஆனால், திருகுர்ஆன் இதனை அங்கீகரிக்கவில்லை. "அவருக்கு நாம் இஞ்ஜீலை அருளினோம்" என்பதாக அல்லாஹு தஆலா தனது திருமறையிற் கூறியுள்ளான். ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களும்கூட "எனக்கு அவன் வேதத்தைக் கொடுத்து என்னை நபியாக ஏற்படுத்தினான்" என்பதாகக் கூறி இருக்கிறார்கள். ஆகவே, அசல் இஞ்ஜீல் வேதமானது ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களுக்கு இறைவனால் அருளப்பட்டது என்று திருகுர்ஆன் கூறுகிறது. இது ஒரு அடையாளமாகும். ஆகவே, ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களுக்கு அல்லாஹு தஆலாவால் அருளப்பட்ட "இஞ்ஜீல்" வேதத்தை விசுவாசிக்கும்படியாகத்தான் முஸ்லிம்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறார்களேயன்றி ஹவாரிய்யீன்கள் எழுதிக் கோர்வை செய்த கிரந்தத்தை இஞ்ஜீல் என்று விசுவாசிக்கும்படி திருகுர்ஆன் கட்டளையிடவில்லை. மேலும், ஹவாரிய்யீன்களால் இயற்றப்பட்ட எந்த இஞ்ஜிலையும்பற்றித் திருகுர்ஆனில் எவ்விதப் பிரஸ்தாபமுமில்லை. எனவே, இஞ்ஜில் வேதம் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களுக்கு இறக்கப்படவில்லை என்று கிறிஸ்துவர்களே கூறும்போது, அப்படிப்பட்ட வேதத்தை விசுவாசிக்க வேண்டுமென்று திருகுர்ஆனின் பெயரால் கிறிஸ்துவர்கள் முஸ்லிம்களிடம் ஏன் வேண்டிக் கொள்ளவேண்டும்.

மிஸ்டர் ராட்வெல் துரை மகனார் தம்முடைய திருகுர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பில் இம்முக்கிய விஷயத்தைப் பின்வருமாறு சுட்டிக்காட்டி எழுதியுள்ளார் :—

"திருகுர்ஆன் சுட்டிக் காட்டுகிற இஞ்ஜீல் வேதம் என்பது கிறிஸ்துவர்களாகிய நம்மிடம் இருந்துவருகிற இவாஞ்சலியம் அன்று. ஏனெனில், 'முஹம்மது (ஸல்.) அவர்களுக்கு திருகுர்ஆன் இறங்கியதுபோல இஞ்ஜீல் வேதமும் நேரடியாக ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களுக்கு இறக்கப்பட்டிருந்தது' என்பதாகத் திரு குர்ஆன் கூறுகிறது"

மற்றொரு சோல்

அசல் இஞ்ஜீலில் "காத்தமுல் முர்ஸலீன்" ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களது வருகையைப்பற்றிய நற்செய்திகளும் முன்னறிவிப்புகளும் இருக்கின்றன என்று அல்லாஹு தஆலா திருகுர்ஆனில் கூறி இருக்கிறான். இது இரண்டாவது அடையாளமாகும்.

"இந்த உம்மியான (எழுதப் படிக்கத்தெரியாத) றஸூலைப் பின்பற்றுகிறவர்கள் தங்களிடமுள்ள தௌராத்திலும் இஞ்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்கின்றனர்"

என்று திருகுர்ஆன் சாக்ஷியம் கூறுகிறது. மேலும், ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் தமக்குப்பின் ஒரு றஸூல் வருவாரென்றும், அவரது பெயர் 'அஹ்மது' என்றும் இஸ்ரவேலருக்கு முன்னறிவிப்புச் செய்ததாகவும் திரு குர்ஆன் கூறுகிறது. அதாவது, ஆத்ம உலகின் அதிபதியான ஹஜ்றத் முஹம்மதுர் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களைப்பற்றிய முன்னறிவிப்பு இஞ்ஜீலில் காணப்படவேண்டும் என்பது அதனுடைய இரண்டாவது அறிகுறி என திருகுர்ஆன் அறிவித்திருக்கிறது. தௌராத்தையும் இஞ்ஜீலையும் ஒப்புக்கொண்டிருக்கிற ஆயத்துகளையும், இவ்வேதங்களை விசுவாசிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிற ஆயத்துகளையும், அவைகளுக்குள்ள இவ்விரு அடையாளங்களையும் சீர்தூக்கிப் பார்த்து நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஆகவே, நம்மைப் பார்த்து இஞ்சிலை ஒப்புக்கொள்ளுமாறு கூறும் பாதிரிமார்களுக்கு "இவ்விரு லக்ஷணங்களுமுள்ள இஞ்ஜீல்வேதத்தை எங்களுக்குச் சமர்ப்பியுங்கள், அவைகளை விசுவாசிக்கும்படி எங்களைக்கேட்டுக் கொள்ளுங்கள், அவைகளை நாங்கள் விசுவாசிக்கிறோம்." என்று நாம் பதில் கூறுவோமாக.

மேலே எடுத்தெழுதப்பட்ட திருகுர்ஆன் ஆயத்துகளை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கும் பக்ஷத்தில், "விசுவாசங் கோண்டவர்களே! ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு நேரடியாக அருளப்பட்டதும், இறுதி நபி (ஸல்.) அவர்களது முன்னறிவிப்புகள் உள்ளதுமான இஞ்ஜீல் வேதத்தை விசுவாசியுங்கள்" என்று திருகுர்ஆன் கட்டளையிட்டிருக்கிறது என்பது புலனாகும்.

இப்படிப்பட்ட லக்ஷணங்கள் பொருந்திய இஞ்ஜீல் வேதத்தைச் சமர்ப்பிக்கும்படி இப்பொழுது நாம் கிறிஸ்தவர்களிடம் கேட்க வேண்டும். இக்கோரிக்கையை நாம் அவர்களிடம் வெளியிடுவோமாயின் அவர்கள் தங்கள் காதுகளை இறுகப் பொத்திக்கொள்வார்கள் என்பதிலும், இந்த லக்ஷணமுள்ள இஞ்ஜீலைச் சமர்ப்பிக்கும்படி நாம் கோருவது சரியான கோரிக்கை என ஒப்புக்கொள்ள மறுப்பார்களென்பதிலும் சந்தேகமே இல்லை. "உங்களிடமுள்ள இஞ்ஜீல் ஹஸ்றத் ஈஸா (அலை.) அவர்களுக்கு அருளப்பட்டதா" என்று நாம்கிறிஸ்துவர்களை நோக்கி வினவுவோமாயின், அவர்கள் "இல்லை, இல்லை; எங்களிடமிருக்கிற இவாஞ்சலியம் ஹவாரிய்யீன்களியற்றியதேயாகும்; திருகுர்ஆன் இதனை அங்கீகரித்திருப்பதால் முஸ்லிம்கள் இதனை விசுவாசிக்க வேண்டியது அவசியமாகும்" என்றே கூறுவார்கள்.

"உங்களிடமிருக்கிற இஞ்ஜீலில் எங்களது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்பற்றிய முன்னறிவிப்பு இருக்கிறதா?" என்று நாம் கிறிஸ்துவர்களை நோக்கிக் கேட்டால், அதற்கு அவர்கள் "இல்லவே இல்லை; அப்படி இருக்கவும் முடியாது. ஏனெனில், ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) உண்மையான றஸூலல்லர்; ஆதலின் அவரைப்பற்றிய முன்னறிவிப்பு இஞ்ஜீலில் இருக்கவேண்டிய நியாயமே இல்லை. ஆனாலும், உங்களது குர்ஆன் இஞ்ஜீல் வேதத்தை விசுவாசிக்கும்படி உங்களுக்குக் கட்டளையிட்டிருப்பதால் நீங்கள் இஞ்ஜீல் வேதத்தை விசுவாசிப்பது கடமையாகும்" என்று பதில் கூறுவார்கள்.

இவ்வாறான நிலைமையில் பாதிரிமார்கள் "பரிசுத்த வேதாகமங்கள்" என்ற பெயரால் தங்களிடமுள்ள ஒரு கிரந்தத்தை விசுவாசிக்க வேண்டுமென்று முஸ்லிம்களைக் கேட்பது முஸ்லிம்களைப் பரிகசிப்பதாக இருக்கிறதா அல்லவா என்பதை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள். மேலும், இவாஞ்சலியத்தை முஸ்லிம்களிடம் பலவந்தமாகப் புகுத்துவதில் ஏதேனும் பிரயோஜனமேற்படப்போகின்றதா? ஒருக்காலுமில்லை. தவிரவும், தற்போதுள்ள இவாஞ்சலியம் தான் சரியான இஞ்ஜீல்வேதம் என்பதற்கு திருகுர் ஆனிலிருந்து கிறிஸ்துவாகள் மேற்கோள் எடுத்திருக்கக் கூடாது. அவ்வாறு எடுத்தபின் திருகுர் ஆனிலுள்ள இதர லக்ஷணங்களையும் தங்கள் முன் வைத்துக்கொண்டு இப்பொழுதிருக்கிற இவாஞ்சலியத்தை உரைசிப்பார்க்கவேண்டும். இதற்கும் முடியாதென அவர்கள் கூறுவார்களாயின் இது "நான்கு பக்கீர்கள் கதை, இஞ்ஜீல் என்று கூறிக்கொண்டு, அதனை விசுவாசிக்கும்படி முஸ்லிம்களை வற்புறுத்துவதற்கும் தற்போது கிறிஸ்துவப் பாதிரிமார்களது கூற்றுக்கு மிடையில் எவ்விதவித்தியாசமுமில்லை என்பதைத் தவிர வேறில்லை" என்றே ஏற்படும்.

மாற்றப்பட்டிருக்கிறது என்பதற்கான சாட்சியங்கள்.

இனி நாம் கிறிஸ்துவப் பாதிரிமார்களின் வினாக்களைப்பற்றி கவனிப்போம்: இந்தக் கேள்விகளுக்குபதில் கூறுவதற்குமுன் மற்றொருவிஷயத்தை அறிந்து கொள்ளவேண்டும். அதாவது, இக்கேள்விகள் வீண் ஏமாற்றகரமானவைகள்; முஸ்லிம்கள் இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லும் விஷயத்தில் ஈடுபட்டு உழன்றுகொண்டிருக்கட்டும்; இவர்களுடைய ஆக்ஷேபனைகளை விட்டுத் தப்பித்துக்கொள்வதற்குப் பாதிரிமார்களுக்கு இடம் கிடைக்கட்டும் என்பதற்காக இவர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள் என்பதை முஸ்லிம்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். மிக மிக மந்த புத்தியுள்ளவர்களும்கூட எளிதில் உணர்ந்துகொள்ளக் கூடியவாறும், இன்ஜீல் வேதத்தை ஆதரிப்பவர்களும்கூட மூச்சு விடுவதற்கு இடமேற்படாதவாறும் நாம் இக்

கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியும். அதற்காக நாம் ஒரு சிறு உதாரணத்தை இங்கு கூறுகிறோம்.

ஒரு மனிதருக்கு ஜுரம் கண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். ஜுரத்தால் பீடிக்கப்பட்டவர் தலைவலியினாலும் இதர கஷ்டங்களினாலும் துடித்துக்கொண்டிருக்கிறார். எந்நேரமும் கஷ்டம் பொறுக்க முடியாமல் புலம்பிக்கொண்டும் அலறிக்கொண்டுமிருக்கிறார். இறுதியாக ஒரு டாக்டர் இந்நோயாளியைப் பரீக்ஷித்து சிகிச்சை செய்வதற்காக அழைக்கப்படுகிறார். அந்த டாக்டர் வந்து நோயாளியை நோக்கி உமக்கு ஜுரமா? என்று வினவுகிறார். அதற்கு அந்நோயாளி "ஆம்! கடுமையான ஜுரம் கண்டிருக்கிறது. பல நாட்களாக உயிர் பாதையாயிருக்கிறது." என்று பதில் கூறுகிறார். அப்பொழுது அந்த டாக்டர் மறுபடியும் அந்த நோயாளியை நோக்கி, "உமக்கு உண்மையாகவே ஜுரம் வந்திருக்குமாயின், அந்த ஜுரம் எப்பொழுது வந்தது? என் வந்தது? எந்நேரமும் விடாமல் ஜுரம் அடிக்கிறதா? அல்லது சிற்சில சமயத்தில் ஜுரம் நின்றுவிடுகிறதா? ஜுரம் வருவதற்கான அடையாளம் யாது? என்று பல கேள்விகளை அடுக்கடுக்காகக் கேட்கிறார். இக்கேள்விகளுக்கு பதிலாக அந்த நோயாளி "டாக்டர் அவர்களே! இந்தக் கேள்விகளுக்கு என்ன அவசியம்? தாங்கள் நாடிபார்த்து ஜுரம் இருக்கிறதா? இல்லையா என்பதைக் கண்டறிந்து கொள்ளுங்கள்! ஜுரம் இருக்குமாயின் இக்கேள்விகளுக்கு நீங்களே தக்க பதிலைக் கண்டுபிடித்துக்கொள்ளுங்கள். எனக்கு ஜுரம் வந்ததற்குக் காரணம் என்ன? எப்பொழுது இந்த ஜுரம் வந்தது? இதற்குத் தக்க சிகிச்சை யாது? என்பதைத் தாங்களே எனக்கறிவிக்க வேண்டும் என்று கூறுகிறான் அந்த நோயாளி.

மேலே சொல்லப்பட்ட இக்கதையில், நோயாளியானவன் டாக்டருக்குக் கூறிய பதில் மிகவும் பொருத்தமானவைகளாகும் என்பது நமது அபிப்பிராயம். டாக்டர் நாடிப்பார்த்து ஜுரம் இருக்கிறதா? இல்லையா? என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும், ஜுரம் இருப்பதாகத் தெரிந்தால் அதற்குரிய காரணங்களை அந்த டாக்டரே கண்டுபிடித்து அதற்கான ஔஷதங்களைக் கூறவேண்டும் என்றும் அந்த நோயாளி விரும்புகிறான்.

எனவே, இந்தக் கதையில் இருக்கிற நோயாளிதான் முஸ்லிம்களாக இருக்கிறார்கள். டாக்டர்தான் கிறிஸ்துவப் பாதிரிமார்களாக இருக்கிறார்கள். ஆகவே, நோயாளி கூறிய பதிலே நமது பதிலாகும். அதாவது, கிறிஸ்துவப் பாதிரிமார்களாகிய நீங்களே உங்களது கைவசமிருக்கிற இவாஞ்சலியத்தை ஒவ்வொரு பக்கம் பக்கமாகப் பார்த்து அதிலிருக்கிற திரித்தலையும் புரட்டலையும் கண்டுகொள்ளுங்கள்; உண்மையில் அதில் திரித்தலும் புரட்டலும் இருப்பதாக உங்களுக்குப் புலப்பட்டு உறுதியேற்பட்டுவிட்டால் "(1) இது எப்பொழுது புரட்டப்பட்டது? (2) எந்த ஜனங்கள் இப்படிப் புரட்டினர்? (3) இப்படிப் புரட்டியது கொண்டு அவர்களின் நோக்கம் யாது? (4) ஒரு பிரதியில் மாத்திரம் புரட்டலேற்பட்டதா? உலகத்திலுள்ள எல்லா பிரதிகளும் புரட்டப்பட்டதா? என்ற கேள்விகளுக்குத் தக்க சமாதானத்தைக் கண்டு பிடியுங்கள். இதனைக் கண்டுப்பிடிப்பதற்காக நீங்கள் எந்த முறையைக் கையாண்டாலும் அதில் நாங்கள் தலையிடவேமாட்டோம்; வேதம் புறட்டப்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதே எங்களது நோக்கம். ஆகவே, அவை புரட்டப்பட்டதற்கான காரணம் என்னவென்பதையும், அவைகளைப் புரட்டியவர்கள் யாவர்? என்ற விஷயத்தையும் கண்டு பிடிப்பது உங்களது வேலையாகும்" என்று நாம் அவர்களுக்குக் கூறுகிறோம். இது சம்மந்தமாக நாம் செய்யவேண்டிய கடமையும் ஒன்றுண்டு. அது வருமாறு:—

இஞ்ஜீலின் புதிய பதிப்பில் 12 வாக்கியங்களில்லை

இவ்விடத்தில் யாம் நமது தாவா சரியானது தான் என்பதற்காக இவாஞ்சலியத்தி லிருந்து 12 வாக்கியங்களை எடுத்துக் காண்பிக்கிறோம். இப்பன்னிரண்டு வாக்கியங்களும் அடியிற் கண்ட பிரதிகளில் பரிபூரணமாகக் காணப்படுகின்றன.

(1) 1860-ம் வருஷத்தில் லண்டனில் பதிப்பிக்கப்பட்ட புதிய ஏற்பாடு.

(2) 1825-ம் வருஷத்தில் லண்டனில் பதிப்பிக்கப்பட்ட புதிய ஏற்பாடு (அறபி பாஷையிலுள்ளது).

(3) 1834-ம் வருஷத்தில் லண்டனில் பதிப்பிக்கப்பட்ட புதிய ஏற்பாடு (பார்ஸி பாஷையிலுள்ளது).

(4) 1832-ம் வருஷத்தில் லண்டனில் பதிப்பிக்கப்பட்ட புதிய ஏற்பாடு (பார்ஸி பாஷையிலுள்ளது.)

அப்பன்னிரண்டு வாக்கியங்களின் விபரம்

1. ஆனால், இந்த வகை பிரார்த்தனை இல்லாமலும் நோன்பில்லாமலும் வெளியாக மாட்டாது. (மத்தேபு - அத். 14 - வச. 21).

2. ஏனெனில், மனித குமாரன் காணாமற் போனவர்களைக் காப்பாற்றுவதற்காக வந்திருக்கிறான். (மத்தேபு - அத். 18 - வச. 11).

3. பிறர் மெய்ப்பிக்கச் செய்பவர்களே? உங்களுக்கு அந்தோ! விதவைகளின் வீடு விழுங்கப்படுகிறது. ஏமாற்றுவதற்காக நீங்கள் நீளமாக தொழுகிறீர்களோ இந்தக் காரணத்திற்காக நீங்கள் தண்டனையடைவீர்கள். மத்தேபு-(அத். 23 - வச. 14.)

4. அங்கு அவர்களுடைய புழு மரிப்பதுமில்லை நெருப்பு அணைவதுமில்லை. (மார்க்கு - அத் 9. - வச 46.)

5. எனினும், நீங்கள் மன்னிக்கவில்லையானால் வானத்தின் மீதிருக்கிற உங்கள் பிதா உங்களது குற்றத்தை மன்னிக்கமாட்டார். (மார்க்கு - அத் 11. - வச 26.)

6. கெட்டவர்களுடன் சேர்த்து எண்ணப்பட்டிருப்பதாகக் கூறுபவனுக்கு அந்த எழுத்து அப்பொழுது நிறைவேறியது. (மார்க்கு - அத் 15. – வச 28.)

7. ஒவ்வொரு பண்டிகையிலும் ஒருவரை அவருக்காக விட்டுவிடுவது அவரது கடமையாக இருந்தது. (லுக்கா - அத் 23. - வச 17.)

8. ஏனெனில், ஒரு தேவதூதன் அந்தந்தச் சமயத்தில் அந்தக் குளத்திலிறங்கி ஜலத்தை அலம்பச் செய்து கொண்டிருந்தான். எனவே, ஜலம் கலங்கிய பின் அதில் முதல் முதலாக இறங்குபவர் எப்படிப்பட்ட நோயாளியாக இருந்தாலும் அவர் அதனை விட்டுக்குணமடைந்து விடுவார் (யோவான்—அத 5-வச. 4).

9. நீ முழுமனத்துடன் விசுவாசங்கொள்வதுதான் தகுதியாகும் என்று அப்போஸ்தலர் கூறினர். அதற்கு அவன் பதில் கூறுகையில் "இயேசுகிறிஸ்து கர்த்தரின் குமாரர் என்று நான் விசுவாசங் கொள்கிறேன்" என்று கூறினர். (அப்போஸ்தலருடைய நடவடிக்கைகள் அத் 8 - வச 37).

10. லூஸியாஸ் பட்டாளத்தின் தலைவனுடன் வந்து அவரை நமது கைகளிலிருந்து அபகரித்துக் கொண்டு சென்றான். (அப்போ. —அத். 24,-வச. 7).

11. அப்பொழுது அவர், "யூதர்கள் தங்களுக்குள் அதிக அந்நியோன்யமாய் போனர்கள்" என்று கூறினர் (அப்போ அத் 28—வச 29).

12. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களனைவருக்கும் உண்டாவதாக - ஆமென் - (உரோமர் - அத். 26 — வச. 24).

கிறிஸ்துவசகோதரீர்! பரிசுத்த வேதாகமங்களிலுள்ள இந்த வசனங்களைப் பார்த்திருக்கிறீர்களா? இவ் வசனங்களெல்லாம் பைபிள் புதிய ஏற்பாட்டில் மேலே எழுதப்பட்டுள்ள பிரதிகளில் இருக்கின்றன. ஆனால், சமீபகாலத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட புதிய ஏற்பாட்டில் இவ்வசனங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, லூதியானவிலுள்ள அமெரிக்கன் மிஷன் பிரஸ் உருது 1926-வது ஸ்த்திய புதிய ஏற்பாடு, 1903-ல் லாகூர் 'முபீதே ஆம்' பிரஸில் பதிப்பிக்கப்பட்ட உருது புதிய ஏற்பாடு, லண்டன் ஆக்ஸ்போர்டு பிரஸில் 1910-ம் வருஷத்தில் பதிப்பிக்கப்பட்ட ஆங்கில புதிய ஏற்பாடு ஆகியவைகளில் இவ்வசனங்களில்லை. இதனைப்பற்றி நன்கு விசாரணை செய்த மட்டில், உலகத்திலுள்ள எல்லாப் புதிய பதிப்புகளிலும் மேலே காட்டப்பட்ட வசனங்களையல்லாமல் இன்னும் அநேகம் வசனங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று நமக்கு வெளியாகிறது.

தேவனுடைய வாக்கு என்று கிறிஸ்துவர்கள் தாவாச்செய்து கொண்டிருக்கிற இஞ்ஜீல் என்ற கிரந்தத்தில் ஒரு நூறு வருஷ காலத்திற்குள் இத்தனை புரட்டல்களும் மாற்றுதல்களு மிருக்கின்றன என்றால் கிட்டத்தட்ட சென்ற 2 ஆயிரம் வருஷகாலமாக வேதபுரட்டர்கள் இதில் எத்தனை புரட்டுகளையும் திரித்தல்களையும் செய்திருப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! இதனால் தான் இன்று வரை இஞ்ஜீல் வேதம் எத்தனை பேர்களால் எழுதப்பட்டது, இவைகளின் அசல் பாஷை

யாது? இவைகள் எப்பொழுது எழுதப்பட்டவை? என்ற விஷயங்களைப் பற்றிக் கிறிஸ்துவர்களும் கூட ஒரு முடிவுக்குவர முடியாமல் இருந்து வருகிறார்கள்.

இதனை யல்லாமல், இந்த இவாஞ்சலியங்களைப் பரிசிலனை செய்து பார்த்தமட்டில் இவைகளுக்குள் வார்த்தைகள் அதிகமாகவும் குறைவாகவும் இருப்பதும், பெயர்களுக்குள் அபிப்பிராய வித்தியாசங்கள் இருப்பதும், தெரிய வருகிறது.

பரிசுத்த வேதாகமங்கள் புறட்டப்பட்டும் திருத்தப்பட்டும் வந்திருக்கின்றன என்பதில் கிறிஸ்துவப் பாதிரிமார்களுக்கு இன்னமும் சந்தேகமிருக்கிறதா? இஞ்ஜீல் வேதத்தில் எப்பொழுது மாற்றம் செய்யப்பட்டது? ஏன் அவ்வாறு மாற்றப்பட்டது என்பனவாகிய கேள்விகளை முஸ்லிம்களிடம் அவர்கள் கேட்பது நியாயம் என்று இனியும் கருதிக் கொண்டிருக்கிறார்களா? மாற்றப்பட்டிருக்கிறது, திரித்துக் கூறப்பட்டிருக்கிறது என்ற வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் கிறிஸ்துவ நண்பர்களுக்கு மனவருத்தமுண்டாகும் பக்ஷத்தில் அந்த வார்த்தைகளை உபயோகிப்பதை நாம் நிறுத்திக் கொள்கிறோம். ஆனால், பழைய இவாஞ்சலியத்திலுள்ள அநேகம் வாக்கியங்கள் புதிதாக அச்சிடப்பட்ட இவாஞ்சலியத்தி லிருந்து அகற்றப்பட்டிருக்கின்றனவா? அல்லவா? என்று யாம் வினவுகின்றோம். இவ்வுண்மையை ஒப்புக்கொள்வதும் கிறிஸ்துவப் பாதிரிமார்களுக்கு வருத்தமாக இருக்கும் பக்ஷத்தில் அவர்கள் தங்களிடமுள்ள இந்தக் கிரந்தத்தை ஒப்புக் கொள்ளும்படியும் விசுவாசிக்கும்படியும் முஸ்லிம்களை அறைகூவி அழைப்பதையும், தங்களுடைய திரித்தலையும் புரட்டலையும் மறைப்பதற்கு திருகுர்ஆனின் வசனங்களைக்கொண்டு திரையிடுவதையும் விட்டுவிடுவார்களாக.

(பாரான் ஆசிரியர், பார்க்கலீத்.)

நூர்ஜஹான் பேகம் கொலைக் கைதியா?

ஜஹாங்கீர் சக்கிரவர்த்தியின் நீதி

இந்தியாவை ஆட்சி புரிந்த முஸ்லிம் அரச வம்சத்தினர்களில் மொகலாய அரச வம்சத்தினர் மிகவும் பிரக்யாதி பெற்றவர்கள். இவர்கள் வெகுகாலம்வரை இந்தியா முழுவதையும் ஆட்சி புரிந்ததால் இவ்வம்சத்திலுதித்த பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கஜீப் முதலிய சக்கரவர்த்திகளின் கீர்த்தி இந்தியாவிலுள்ள ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர், சீக்கியர் ஆகிய சகல வகுப்பினருக்கும் தெரிந்த விஷயமாகும். இவர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் இந்தியாவிலுள்ள சமூகத்தினர் பலவிதமான அபிப்பிராயங் கொண்டவர்களாக இருக்கின்றனர். ஒரு சமூகத்தினர் இவர்களி லொருவரைப் போற்றினால் மற்றொரு சமூகத்தார் அவரைத் தூற்றுகின்றனர். ஹிந்து முஸ்லிம்களுக்கிடையில் விரோதத்தை வளர்த்துவரக் கருதும் நமது தேச விரோதிகள் ஹிந்து முஸ்லிம் பிணக்கை உண்டுபண்ணுவதற்காக இந்தச் சக்கிரவர்த்திகளின்மீது அநேகம் பொய்க் கதைகளைக் கட்டிவிட்டிருக்கிறார்கள். இப்பொய்க் கதைகளால் நமது நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் துவேஷங் கொண்டு வருகின்றனர்; இப்பொய்க் கதைகள் நம் நாட்டு மக்களிடம் தேகத்தையும், விரோதத்தையும் வளர்த்து வருகின்றன.

இந்தியா தேசம் இதுபோழ்து சுயராஜ்யத்தின் பாட்டையில் மிக விரைவாகச் சென்று கொண்டிருக்கிறது. இது அடையவேண்டிய கடைசி ஸ்தானத்தை அடைவதற்கு இன்னும் வெகுகாலம் செல்லவேண்டிய திருப்பதல்லாமல் அநேகம் தியாகங்களையும் செய்யவேண்டியதுமிருக்கிறது. ஆனால், இந்தியா தனது லக்ஷியத்தைத் துரிதமாக நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் இங்குள்ள சகல வகுப்பினரும் ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டும்; துவேஷ புத்தியையும், சந்தேக நோக்குடன் பார்ப்பதையும் விட்டொழிக்கவேண்டும். இதற்குத் தக்க அருமருந்து, நமது தேசத்தை அர

சாட்சி புரிந்துவந்த அரசர்கள் மீது கட்டி வைத்திருக்கும் கட்டுக் கதைகளைப் பொய் யென்று நிரூபணம் செய்வதும், அவர்கள் செய்துவந்த ஆட்சிமுறையை உள்ளது உள்ள படி பொது ஜனங்களுக்கு எடுத்துரைப்பதும் அவசியமாகும். இப்படி எடுத்துக் கூறுவதன் மூலம் வகுப்புணர்ச்சி நாளுக்குநாள் குன்றி ஒரு வரை ஒருவர் நேசிக்க ஆரம்பிப்பர் என்பது திண்ணம்.

இந்தியாவை ஆட்சிபுரிந்த முஸ்லிம் அரசர் களில், மொகலாய வம்சத்தினர் ஜங்கிஸ்கானின் சந்தியினர் என்பதும், ஹலாக்கூகானின் வம்சத் தினர் என்பதும் உண்மை. ஆனல், ஒரு அரசர், ஆட்சி புரியும் குடும்பத்தினர், உயர் குலத்தார் ஆகியவருக்கு இருக்கவேண்டிய முக்கிய அம்சங்களனைத்தும் மொகலாயவம்சத்தி லுதித்த சக்கிரவர்த்திகளிடம் மிகவும் நிரப்ப மாக இருந்தன என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. இவர்களிடம் இந்த இலக்ஷணங்கள் பரிபூரணமாக இருந்ததனுற்றுன் இவர்கள் பரம் பரையாக ஒருவருக்குப்பின் ஒருவராக இந்தியா தேசத்தை நூற்றுக்கணக்கான வருஷங்கள் வரை ஆட்சி புரிந்தனர். இவ்வாறு ஆட்சி புரிந்த இவ்வம்சத்தினரில் ஜஹாங்கீர் சக்கிர வர்த்தியும் ஒருவராவர்.

இவர் நூர்ஜஹான் என்ற தனது மனைவி யின்பால் அதிகம் காதல் கொண்டிருந்ததால் அம்மாதிடம் அரசாங்கக் காரியங்களை எல்லாம் ஒப்புவித்து விட்டு, அவள் சொல்வதுபோல் நடந்து கொண்டிருந்தாரென்றும், மதுபானம் அருந்திக்கொண்டிருந்தா ரென்றும், பிரஜை களுக்கு அநீதி செய்து வந்தாரென்றும், அர சாங்க நிர்வாகத்தை அலக்ஷியம் செய்து, அதனைச் சரிவரக் கவனியாதிருந்தாரென்றும், இதனல் பல ஊழல்கள் உண்டாயின என்றும் விரோதிகள் பலர் இவர்மீது அபாண்டம் கட்டி விட்டிருக்கின்றனர். ஆயினும், அடியிற் கண்ட ஒரு சம்பவம் மாத்திரமே இவர்பால் சொல்லப் படும் இத்தியாதி தோஷங்களையும் மிகச் சுலப மாகஅகற்றி விடும் என்பதை நேயர்கள் உணர் வார்களாக.

ஜஹாங்கீர் சக்கரவர்த்திக்கு அவரது பெற் றோர்கள் இட்ட பெயர் நூறுத்தீன்ஸலீம் என்பது. அவர் பட்டத்திற்கு வந்தபோது "ஜஹாங்கீர்" என்பதாகப் பட்டமளிக்கப் பட்டது. இவர் தனது அரண்மனையில் நீதிச் சங்கிலி ஒன்றைத் தொங்கவிட்டு வைத்திருந் தார். துன்பம் இழைக்கப்பட்டவர்கள், அநீதி செய்யப்பட்டவர்கள், அக்கிரமம் செய்யப்பட்ட வர்கள் எச்சமயத்திலும் வந்து இந்தச் சங்கிலி யைப் பிடித்தசைத்தால் அங்குமணி அடிக்கும். மணி ஓசை கேட்டவுடன் சக்கரவர்த்தி அத னைப்பற்றி விசாரித்து தக்கன செய்வது வழக் கம். இதற்கு ஆராய்ச்சி மணி என்றுஞ்சொல் வர். பாரசீக தேசத்தை அரசாட்சி புரிந்த நௌஷேர்வான் சக்கரவர்த்தி தம்முடைய நீதத்தினுலேயே இன்றும் உலகில் மங்காப் புகழ்பெற்றிருக்கிறுர்; அவரது நீதியை இவர் பின்பற்றி இம்மாதிரி ஆராய்ச்சி மணிகட்டித் தொங்கவிட்டிருந்தார் என்று சரித்திராசிரியர் கள் கூறுகின்றனர்.

உலகச் சரித்திரத்தை நாம் துருவி ஆராய்ந்து பார்க்கும்போது, நீதி நியாயம் ஆகியவைகளை நிலைநிறுத்துவதற்காகத் தம்முடைய உறவின ரையும் பந்துக்களையும் தண்டித்தவர் என்ற பேறு இரண்டாவது கலீபாவாகிய அமீருல் மூமினீன் ஹஜ்றத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தவிர்த்து வேறு யாருக் கும் இல்லை என்பது நன்கு விளங்கும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தோழரும், தன் னல மறுப்பு, நீதி, நியாயம் ஆகியவைகளே உருவாயமைந்தவருமான ஒரு பெரியாரிடத்தி லிருந்து இதற்கு மாறுக ஒரு காரியம் நடை பெறும் என்று எதிர்பார்க்கமுடியாது.

ஆனல் "இந்திய அரசர்கள் அரசாங்கம் செலுத்தவில்லை, கடவுளின் அதிகாரத்தைக் கையாண்டுவந்தனர்" என்று சொல்லப்படுகிற இந்திய அரசர்களில் ஒருவரும், கூத்துகளிலும் வேடிக்கைகளிலும், மதுபானத்திலும், சிற் றின்பத்திலும் தனது வாழ்நாளைக் கழித்துவந்த வர் என்றும், நூர்ஜஹானின் பாதங்களில் தனது கிரீடத்தை ஒப்படைத்து விட்டவர் என்று சொல்லப்படுபவருமாகிய ஜஹாங்கீர், உலக சரித்திரத்தில் ஹஜ்றத் உமர் (றலி.) அவர்களுக்குப் பிறகு, அவர்கள் செய்து காட் டிய நீதிக்கு அடுத்தபடியாக மற்றொரு சம்பவத் தைச் செய்து நீதியை நிலைநாட்டி இருக்கிறுர் என்று கூறினல் வாசகர்களாகிய நீங்கள் அத னைக் கண்டு ஆச்சரியமடையாமலிருக்க மாட் டீர்கள்.

ஜஹாங்கீரைத் தனது இஷ்டப்படி நடக்கும் படிச் செய்து கொண்டிருந்தவளும், இந்தியா

முழுவதற்கும் சக்கிரவர்த்தினியாக இருந்தவளும், ஜஹாங்கீரின் அன்புக்குரிய வாழ்க்கைத் துணைவியுமான நூர்ஜஹான் ஒரு நாள் அந்தி வேளையில் காற்றுக்குடிப்பதற்காகவும், தனது கோட்டையினுடையவும் இயற்கையினுடையவும் அழகைக்கண்டு ஆனந்திப்பதற்காகவும் அரண்மனையினது மேல் மெத்தையின் மீதேறி தனது தாதிகளுடன் உலாவிக்கொண்டிருந்தனள்.

அதுபொழுது அந்தப்புறத்து மெத்தையின் மீது அரசியும் அரசியின் தாதியும் உலாவிக் கொண்டிருப்பதன் பக்கமாக, தனது வாலிப இன்பத்தை அனுபவிப்பவனை ஒரு வாலிபன் எவ்விதமாகவோ கோட்டையின் அகழின் வழியாக வந்து, உலகத்திலேயே நிகரில்லாத அழகு பொருந்தியவளென்று கியாதிபெற்ற அந்தப் பாரசீக ஸ்திரீயும், சக்கரவர்த்தியின் மனத்தைக் கொள்ளை கொண்டவளுமான நூர்ஜஹானென்னும் அவ்வாரணங்கையை எப்படியோ பார்த்துவிட்டான். அவ்வளவுதான் தாமதம். அவன் அந்த இடத்திலேயே ஸ்தம்பித்தவனாக அவளது ரூபலாவண்யத்தையும், நடையலங்காரத்தையும், உடையழகையும், வசீகர கமல முகத்தையும் கூர்ந்துபார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தனன்.

ஷேர்அப்கனுடைய மனைவியாக மாத்திரமில்லாமல் இந்தியச் சக்கரவர்த்தினியாக இருக்கிற நூர்ஜஹான் தனது ரூபலாவண்யத்தை கண்டானந்திப்பதற்கு இந்திய சக்கரவர்த்தியாகிய ஜஹாங்கீரை மட்டிலும் தெரிந்தெடுத்திருக்கும்போது அந்நியனொருவன் தனது அழகைக் கண்டானந்திப்பதைச் சகிப்பளோ? தன்னைக் கூர்மையாகப் பார்த்துக்கொண்டிருப்பவன்மீது நூர்ஜஹானின் பார்வை வீழ்ந்தவுடன் அவளது மெய் சிலிர்த்தது; அளவற்ற வருத்தமுண்டாயிற்று. இதனையுணர்ந்த அவளது தோழிகள் அவ்வாலிபனை அகன்று செல்லும்படி சமிக்ஞை செய்தனர். ஆனால், இவ்விள வாலிபன் அழகைக் கவர்ந்துகொண்டிருக்கும் வேலையில் முழுதும் ஈடுபட்டிருந்ததால் அவர்கள் செய்யும் சமிக்ஞையை அவனறியாது இமை கொட்டாமல் பார்த்தவண்ணமாகவே இருந்துகொண்டிருந்தான். எனவே, நூர்ஜஹானுக்குக் கோபமேலிட்டதால் தோழிகளை அழைத்து அம்பும் வில்லும் கொண்டுவரச் செய்து அவ்வாலிபனை நோக்கி பாணம் தொடுத்தாள். அவ்வம்பு அவன் மெய்மீது தைக்க அவன் கீழேவிழுந்து மாண்டனன்.

மறுநாள் தர்பார் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஜஹாங்கீர் சக்கரவர்த்தி மயிலாசனத்தின் மீது வீற்றிருந்தார். மந்திரிகளும் பிரதானிகளும், ராஜாக்களும், மகாராஜாக்களும், அமீர்களும், நவாபுகளும் அவரைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்தனர். அதுபொழுது ஒரு வயோதிக ஸ்திரீ திடீரென அழுது புலம்பிக்கொண்டு தர்பார் மண்டபத்தினண்டை வந்தனள். கிழவியின் பிரலாபத்தைக் கேட்ட ஜஹாங்கீர் பதரி, இதென்ன புலம்பல், நமது ஆட்சியில் இம்மாதிரி கவலையுற்று வருந்திப் புலம்புபவருமுண்டோ என்ற எண்ணத்தால் காவல்காரர்களை நோக்கினர். அரசன் குறிப்பறிந்த அமைச்சர் முதலானோர் அவ்வயோதிக ஸ்திரீயினண்டையிற்சென்று, அவளை தர்பாருக்குள் அழைத்து வந்தனர். பிறகு,

ஜஹாங்கீர் :—(அவ்வயோதிக ஸ்திரீயை நோக்கி) அம்மா! தாங்கள் ஏன் அழுகிறீர்கள்?

வயோதிக ஸ்திரீ:—பிள்ளாய்! நான் கொள்ளையடிக்கப்பட்டேன். என் வாணுள் முழுவதும் சம்பாதித்த செல்வமும், எனது தள்ளாத பருவத்திற்கு ஆதரவாக இருந்ததும் எனக்கிருந்த ஒரே புதல்வன்தான். அவன் கோட்டையின் அகழ்ப்பக்கத்தில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனன்.

ஜஹாங்கீர் :—(கோபத்துடன்) யார் கொலை செய்தது? எப்பொழுது கொலை நடந்தது?

வயோதிக ஸ்திரீ :—மகனே! எனக்கு என்ன தெரியும்? கொலை செய்தது யார் என்பதை யான் எப்படி அறிவேன்? எனது மைந்தன் இரவு வீட்டிற்குத் திரும்ப வாராததால் இன்று காலை நான் வருந்தித் துடித்துக்கொண்டிருந்தபோது, யாரோ ஒருவருடைய சவம் போலிஸ் கொத்தவால் சாவடியில் கிடக்கிறது என்று எனது பக்கத்து வீட்டு மனிதர் கூறினர். இதைக் கேட்டவுடனேயே எனது ஈரல்குலை பிடுங்கிப் போட்டாற்போலிருந்தது; கைகால்களில் நடுக்கம் வந்தது; என் கண்களிலிருந்து ஜலம் தானாக வழிந்தோட வாரம்பித்தது; மனத்திலே பலப்பலவாறு எண்ணங்கள் தோன்றின. ஆகவே, நான் விழுந்தடித்து ஓடிவந்து கொத்தவால் சாவடியை

அடைந்து சவத்தினண்டை சென்றேன். பார்த்தேன், பார்த்தேன். என் மைந்தன் உதிரத்தில் புரண்டு பிணமாகக் கிடக்கின்றான். யான் அடையாளங்கண்டபின் ஜனக்கூட்டம் வந்தது. யாவரும் பார்த்தனர். பின்னர் எடுத்து அடக்கம் செய்துவிட்டனர்.

ஜஹாங்கீர் :—(போலீஸ் கொத்தவாலை நோக்கி) என்ன சமாச்சாரம்? நடந்த விஷயமென்ன? நாமிருக்கும் கோட்டைச் சுவரினண்டையில் கொலைசெய்யத் துணிந்தவன் எவன்?

கோத்துவால் :—(கை கட்டிக்கொண்டு) அரசே! அறியப்படாத ஒருவன் கோட்டையின் அகழிக்குப் பக்கத்தில் பிணமாகக் கிடக்கக் காணப்பட்டனன். அவன் அம்பினால் அடிபட்டு மாண்டு போயிருந்தனன். இதனைப் பற்றி விசாரணை செய்ததில், "அரண்மனையிலுள்ளவர்கள் மெத்தைக்கு மேலில் சென்றுலாவிக் கொண்டிருந்தபோது இம்மனிதன் ஆங்கு நின்று அரசியை வேண்டுமென்றே உற்று நோக்கிக் கொண்டிருந்தனனாம்; தோழிப்பெண்கள் அவனுக்குச் சைகை செய்தும் அவன் அவ்விடம் விட்டகலவில்லை; மெத்தையிலிருந்து அம்பெறிந்ததால் அவன் அடிபட்டு மாண்டுபோயினன். ஆனால், அவன் அடிபட்டுக்கிடந்த இடம் பொது ஜனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்ட இடமுமன்று; அப்பக்கம் அந்நியர் செல்லும் வழக்கமுமன்று. ஆகவே, இவன் அங்கு சென்று, சைகை செய்தும் அவ்விடத்தை விட்டகலாமல் அரசியை உற்று நோக்கிக் கொண்டிருந்ததானது பகிரங்கமான விஷயமாகும். இஃது தர்பாரை அவமதித்ததாகவு மிருக்கிறது. ஆதலின், அவனது விஷமத்திற்குத்தக்க தண்டனை அவனுக்குக் கிடைத்தது மிகவும் பொருத்தமாக இருக்கிறது."

ஜஹாங்கீர் :—அடே! துஷ்ட! உனது வேலை தீர்ப்புக் கூறுவதல்ல. குற்றமற்ற ஒருவனைக் கொலை செய்வதும், விதவையான ஒரு வயோதிக ஸ்திரீயை அனாதையாக்கி விடுவதும் சாமான்யமான காரியங்களன்று. (பிறகு வயோதிக ஸ்திரீயை நோக்கி) அம்ம! தாங்கள் இப்பொழுது வீட்டிற்குச் சென்று நாளை இன்னேரம் இங்கு வரவேண்டும். அதுபொழுது உமது புதல்வனைக்கொன்ற குற்றவாளி உனது முன் நிறுத்தப்பட்டு உனது மைந்தனின் கொலைக்குப் பதிலாகக் கொலையாளியும் கொல்லப்படுவான் என்று கூறிவிட்டு (நீதிபதி ஷெய்குலஸத்ருத்தீன் அவர்களை நோக்கி) மௌலானா! நாளை என் முன்னிலையில் தர்பார் கூடியிருக்கும்போது இவ்வழக்கிற்கு தாங்கள் முடிவு கூறவேண்டும். யார் கொலை செய்தாலும் சரி, அவனுக்கு மார்க்கச் சட்டப்படி தண்டனை விதிக்கப்படவேண்டும்.

"தன்னுடைய அந்தப்புற ஸ்திரீகளிடமிருந்து அம்பு எய்யப்படுவதையும், அதனால் குற்றமற்ற உயிர்கள் வீணாக்கப்படுவதையும் ஜஹாங்கீர் ஒருபோதும் விரும்பமாட்டார்."

பிறகு, சக்கரவர்த்தி ஜஹாங்கீர் அதே கோபத்துடன், தமதாசனத்திலிருந்து எழுந்து நின்று தர்பாரைக் கலைத்துவிடும்படி திரையிடுபவருக்குச் சமிக்ஞை செய்தார். உடனே காவற்காரர்கள் சப்தமிட்டனர். சபையிலுள்ளவர்களனைவரும் தங்களது நெஞ்சின்மீது கையைவைத்துக் குனிந்து சக்கரவர்த்திக்கு மரியாதை செய்தனர். திரைவிடப்பட்டது. ஜஹாங்கீர் இதே கோபத்துடன் அரண்மனைக்குள் சென்றார்.

அங்கு சென்றதும் அரண்மனை மேலதிகாரியான காபூரை அழைத்து இதனைப்பற்றி விசாரணை செய்தார்.

காபூர் :—அரசே! நானில்லாத காலத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது. சக்கரவர்த்தினி அவர்கள் மாளிகையின் மேல் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருக்கும்போது, விதிமுடிந்த ஒருவன் கீழே நின்றுகொண்டு வெகு நேரம் வரை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அவன் அவ்விடம் விட்டகன்றுவிட வேண்டுமென்று தோழிப் பெண்கள் அவனுக்கு எவ்வளவோ சைகை செய்து அவனை விலக்கியும் அவன் அதனை லக்ஷியம் செய்யாமல் நின்றுகொண்டு உற்றுப் பார்த்ததாகவும், அரசிக்குக் கோபம் வந்து தோழிகளிடமிருந்து அம்பை வாங்கி அவனை நோக்கி எய்ததாகவும், அம்மனிதனைப் பயப்படச் செய்யவேண்டுமென்பதே அரசியின் நோக்கமாக இருந்தபோதிலும் தற்செயலாக அவ்வம்பு அவன்மீது பாய்ந்துவிட்டதென்றும் தோழிப் பெண்கள் கூறுகின்றனர்.

ஜஹாங்கீர் :—அரசியின் எண்ணம் எப்படியும் இருக்கட்டும். ஆனால், குற்றமற்ற ஒருவனைக் கொலை செய்துவிடுவது வீண்போகாது. நீ இன்

னும் சில வேலைக்காரர்களை அழைத்துக்கொண்டு அரசியைக் கைதி செய்து, மாளிகைக்குள்ளி லேயே சிறையில் வைத்துவிடு. நாளைக்காலை தர்பாரில் இதற்கு முடிவு கூறப்படும்.

ஜஹாங்கீர் சக்கரவர்த்தி இவ்வுத்தரவு பிறப் பிக்கும்வரை தனது முயற்சியில் வெற்றி பெற் ருராயினும் அதற்கப்புறம் அவரது நிலைமை மாறிவிட்டதால் வெகு நேரம்வரை நின்று கொண்டே ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். பிறகு வெளியில் வந்து நண்பர்களுடன் சொக் கட்டான் விளையாடுவதில் ஈடுபட்டு விட்டார்.

அரசாணையைக் கேட்ட காபூர் என்பவன் (அரண்மனை அந்தப்புரத்தில் வேலை செய்யும் அந்நிய ஆடவரனைவருக்கும் ஆண் குறிகளை எடுத்து விடுவார்கள்) இதர பல கோஜாக்களை யும், தோழிப் பெண்களையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு நூர்ஜஹான் சக்கரவர்த்தி னியிடம் சென்று அரசிக்குச் செலுத்த வேண் டிய மரியாதையைச் செய்து சக்கரவர்த்தியின் உத்தரவை அறிவித்தனன்.

இந்த நூர்ஜஹான்தான் மொகலாய ஏகாதி பத்தியத்திற்கு எஜமாட்டியாகவும், சக்கர வர்த்தி ஜஹாங்கீரின் மீது ஆட்சி புரிபவளாகவு மிருந்தனள். இவளுடைய புருவத்திலிருந்து உண்டாகும் ஜாடை ஒன்றுக்காக சக்கரவர்த்தி உயிர் வாழ்பவராகவும், அந்த ஒரு சமிஞைக் காகத் தமது உயிரை அர்பணம் செய்பவராக வும் இருந்தார். இவளது நெற்றியில் சுருக்கம் ஏற்படுவதை ஜஹாங்கீர் கண்கொண்டு பார்க்கச் சகியாதவராய் இருந்தார். இத்தகைய செல் வாக்கும் கண்ணியமும் பெற்றிருந்த இந்த நூர் ஜஹான் இவ்வுத்தரவைக் கேட்ட மாத்திரத்தில் வாய்மூடி மௌனமாக இருந்தனள். அவளது உடலத்திலோடிக் கொண்டிருந்த ஈரானிய உதிரமும், அவளது உள்ளத்திலிருந்த மொக லாய உணர்ச்சியும் அரசரின் ஆணைக்குக் கீழ்ப் படியும்படி அவளைத் தூண்டிக் கொண்டிருந்தன. நூர்ஜஹான் தனது தோழியான நர்கிஸ் என்ப வளை அழைத்து காதில் குசுகுசு வென்று ஏதோ கூறிவிட்டுப் பிறகு சக்கரவர்த்தியின் கட்டளையை நிறைவேற்றும்படி காபூரிடம் கூறினள்.

உடனே, காபூர் சில தோழிப் பெண்களையும் அரண்மனைப் பேடிகளையும் அரசியைச் சூழ்ந்து கொள்ளும்படிச் செய்து, சந்தடியில்லாமல் அரண்மனைக்குள்ளிருந்த ஒரு மண்டபத்தினுள் கொண்டுவந்து பேடிகளைக் காவல் வைத்து விட்டனன். நூர்ஜஹானின் தோழிப் பெண் கள் தேவையான சாமான்களைக் கொடுப்பதில் எவ்விதத் தடையும் செய்யவில்லை யெனினும், பாதுகாப்புக் கைதியாக இருக்கிற நூர்ஜஹான் யாரிடமும் வாய்திறந்து பேசாது பசித்த பெண் சிங்கத்தைப்போல் பதுங்கிக் கிடந்த னள். கொஞ்சநேரத்திற்குப் பின் நர்கிஸ் என்ற தோழி மறுபடியும் வந்து அரசியின் காதில் முணுமுணுவென்று ஏதோ கூறினள். அதனால் நூர்ஜஹானுக்குக் கோபம் வந்தது, பிறகு தனது தோழிகளை அழைத்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனள்.

நூர்ஜஹான் இவ்விதமாக அடைக்கப்பட்ட சமாசாரம் அரண்மனை எங்கும் ஒரு நொடிக் குள் பரவிற்று. எங்கும் ஒரே கவலையும் கூக் குரலாகவுமிருந்தது. அன்பும், கருணையும் உருவாகத் தோன்றிய ஜஹாங்கீர் தனது அன் பிற்குரிய மனைவியை இவ்வாறு கைதுசெய்த கடின சித்தத்தைக் கண்டு கோட்டைக்குள் ளிருந்தவர்களெல்லோரும் கலக்கமும் நடுக்க மும் கொண்டிருந்தனர்.

கான்ஜஹான் என்பவரிடம் செல்லுமாறு அரசியால் கட்டளையிடப்பட்ட நர்கிஸ் ஓடோ டியும்வந்து கான்ஜஹானிடம் சக்கரவர்த்தியின் கட்டளையையும், சக்கரவர்த்தினி கைதியாக இருப்பதையும் தெரிவித்தனள். இச்சம்பவத் தைக்கேட்ட கான்ஜஹான் மதிமயங்கி ஸ்தம் பித்து நின்றுவிட்டார். பிறகு கொஞ்சநேரம் கழித்து நர்கிஸை அழைத்து ஏதோ கூறி அனுப்பிவிட்டு நீதிபதி ஸத்ருத்தீனையும், போலீஸ் கொத்தவாலையும் அழைத்து அவர்க ளுடன் கலந்தாலோசனை செய்தார்.

இரவு ஒன்பது மணி இருக்கும். கொல்லப் பட்டவனின் தாயாகிய விதவைக் கிழவியின் குடிசைக்கு கொத்துவால், நீதிபதி, கான் ஜஹான் ஆகிய மூவரும்வந்தனர். துக்கமுள்ள அவ்வயோதிக ஸ்திரீ அம்மூவருடனும் சம் பாஷணை செய்தனள். கொல்லப்பட்ட அவ ளுடைய மைந்தனின் நஷ்டஈடாக ஒரு லக்ஷம் அஷ்ரபி (தங்கநாணயம்) தருவதாகவும், அவ் வயோதிகஸ்திரீ நாளைக்குக் கூடும் தர்பாரில் தனது வழக்கை வாபிஸ்வாங்கிக்கொள்ளவேண் டும் என்றும் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆனல், கிழவி அதற்குச் சம்மதப்படவில்லை. நீதிபதி ஸத்ருத்தீன் திருகுர்ஆன், ஹதீது

ஷரீப் ஆகியவைகளிலிருந்து அநேகம் மேற்கோள்களை எடுத்துக்கூறி, அவ்வழக்கை வாப்பிஸ் வாங்கிக்கொள்வதுதான் சிறந்தது என்பதைப்பற்றி உபதேசம் செய்தார். போலீஸ் கொத்துவால் அக்கிழவியை முகஸ்துதி பேசினார். ஆனால், அக்கிழவியோ பிடிவாதமாக இருந்ததால் இவர்களது முயற்சிகளெதுவும் பலிக்கவில்லை; திருகுர்ஆன், ஹதீது ஆகியவைகளை அக்கிழவி கேட்டு அவைகளில் சொல்லப்பட்ட நீதிவார்த்தைகளுக்குப் பயப்படவுமில்லை; முகஸ்துதி கூறல் முதலியவைகளைக் கேட்டு ஏமாற்றமடையவுமில்லை; பணத்துக் காசைப்பட்டு மனமிறக்கம் காண்பிக்கவுமில்லை. இரவு 12 மணிவரை இம்மூன்று கனவான்களும் அவ்வயோதிக ஸ்திரீயிடம் தங்களுக்குத் தெரிந்த ஜகஜாலவித்தைகளையெல்லாம் காட்டினர். பயங்காட்டுவதற்காக அம்பு எய்ததாகவும், அது தவறிவிட்டதாகவும், அதனால் இது கொலைக்குற்றமாகாதென்றும், அரசி விடுதலை செய்யப்பட்டு விடுவாளென்றும் பலமாதிரியாகவெல்லாம் கூறினர். கொலைக்குப் பதிலாக அரசியைத் தூக்கில் போட்டுவிட்டால் உனது மைந்தன் மறுபடியும் உயிர்பெற்றெழும்பி வந்து விடுவானா? கிடைக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு வழக்கை வாப்பஸ் வாங்கிக்கொண்டால் இந்தத் தள்ளாத வயதில் சுகமாகக் காலக்ஷேபம் கழிக்க உதவும் என்றும் உபதேசித்தனர்.

ஆனால், கிழவி இவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டுஏமாற்றமடைபவளாயில்லை. குற்றமற்ற எனது மைந்தனின் கொலைக்கு நான் கட்டாயமாகப் பழிவாங்குவேன் என்றே பிடிவாதமாகக் கூறிக்கொண்டிருந்ததால் இறுதியாக இம்மூவரும் தங்கள் முயற்சி கைகூடாமல் திரும்பினர். அரசிக்கு வந்த இக்கஷ்டத்தை நினைத்து நினைத்து கான்ஜஹான் அவ்விரவு முழுவதும் நித்திரை செய்யாமல் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தார். நீதிபதியான ஸத்ருத்தின் இரவு முழுவதிலும் இறைவனைப் பிரார்த்திப்பதிலும் "அல்ஹபீஜ்" (காப்பாற்றுபவன்) என்ற அவனது திருநாமத்தை ஜபிப்பதிலுமே ஈடுபட்டிருந்தார்.

ஆனால், கான்ஜஹான் எவ்விதத்திலேனும் அவ்வயோதிக ஸ்திரியைச் சரிப்படுத்தி வழக்கை வாப்பஸ் வாங்கிக்கொள்ளச் சம்மதப்படுத்தி இருப்பார்; நாளை தர்பார் கூடியவுடன் வழக்கு விசாரணைக்கு வரமாட்டாது என்று நூர்ஜஹான் எண்ணிக்கொண்டு சற்று நிம்மதியாக இருந்தனள். தனது அன்புக்குரிய வாழ்க்கைத் துணைவியின்மீது கொலைக்குற்றம் ருஜுவானால் தூக்குமேடைக்கன்றோ அவள் செல்ல வேண்டும், அவளை விட்டுப்பிரிந்து எவ்வாறு இருக்கமுடியும் என்றும், தனது மனைவியின் பாலுள்ள அன்பின் மேலீட்டால் வழக்கை ஒருவாறு முடிவுசெய்தால் அது நீதிக்குப் பங்கம் செய்வதாகுமே என்ற தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொண்டு ஜஹாங்கீர் சக்கரவர்த்தி கவலையடைந்துகொண்டிருந்தார்.

இந்தக் காலத்தில் தர்பார் நடைபெறுவது போல் ஜஹாங்கீர் சக்கரவர்த்தியின் தர்பார் நடைபெறுவதில்லை. இவரது தர்பாரில் ராஜாக்கள், மகாராஜாக்கள், அமீர்கள், நவாபுகள், யுத்தவீரத் தளகர்த்தர்கள், ஹிந்து முஸ்லிம் பிரபலஸ்தர் ஆகிய மொகலாய ஏகாதிபத்தியத்தின் முக்கிய அங்கத்தினர்கள் அனைவரும் தர்பாருக்கு விஜயம் செய்வர். இவ்வாறு, தர்பார் மாளிகை நிறம்பப் பிரதானிகளின் கூட்டமாகவே இருக்கும். சக்கரவர்த்தி தர்பாருக்கு வரும்போது ஒரு ஏவலாள் "ஹுஜுர், 'ஸில்லே சுப்ஹானி' சக்கரவர்த்தி அவர்கள் வரப்போகிறார்கள்" என்று சப்தமிட்டுக் கூறுவர். உடனே யாவரும் மரியாதையாக எழுந்து நின்று அரசரை வரவேற்கத் தயாராகி விடுவர். இரண்டாம் முறையாக வேறு ஏவலாளர் "பார்வைகள் நேரில் இருக்கட்டும்" என்று கூறுவார். அதற்குப் பிறகு, மூன்றும் முறையாக மற்றொரு ஏவலாளர் "பார்வைகள் கவனம்" என்பதாகச் சப்தமிடுவார். இம்மூன்று சப்தத்திற்குப் பிறகு திரைநீக்கப்படும். மற்றொரு ஏவலாளர் "ஒழுங்குடன் மரியாதை செலுத்துங்கள்" என்று கூறுவார். எனவே, சபையினர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அந்தஸ்திற்கேற்றவாறு அரசருக்கு மரியாதை செய்வர். சக்கரவர்த்தி ஜஹாங்கீர் சமிக்ஞையின் மூலமாக எல்லோரிடத்திலும் சலாம் வாங்கிக்கொள்வார்.

இவ்விதமாக மறுநாள் தர்பார் கூடிற்று. சக்கரவர்த்தியின் கோபம் தணிந்ததாக ஒருவருக்கும் தெரியவில்லை. ஆதலின், எவருக்கும் வாய்திறக்கத் தைரியம் வரவில்லை. தர்பார் நிசப்தமாக இருந்தது. கடைசியாக சக்கிரவர்த்தி ஜஹாங்கீர் அவர்களே, போலீஸ்

கொத்துவாலை அழைத்து நேற்றையதினம் வழக்குச் சொல்லிவந்த வயோதிக ஸ்திரீயை அழைத்துவரும்படி கட்டளையிட்டார். உடனே, கிழவி, சிம்மாசனத்திற்குப் பக்கத்திலுள்ள கிளிக்கூட்டில் நிறுத்தப்பட்டனள். பிறகு, சக்கரவர்த்தினி நூர்ஜஹானையும் அவளது தோழிப் பெண்களையும் கொண்டுவரும்படி சக்கிரவர்த்தி கட்டளை பிறப்பித்தார். இதனைக் கேட்டவுடன் அரண்மனை மேலதிகாரியான காபூர் பதறிப் பின்வாங்கினர். இரவெல்லாம் கிழவிக்குப் பணம் தருவதாகக் கூறிய கான்ஜஹான் மெய்மறந்தார். தர்பாரிலுள்ள இதரர்கள் பயத்தினால் நடுங்கினர்.

நூர்ஜஹானுக்காகத் தன்னை அற்பணம்செய்திருந்த ஜஹாங்கீர், நூர்ஜஹானின் கால் நகத்திற்காக இவ்வுலகத்தையும் இதிலுள்ள சகலத்தையும் தியாகம் செய்யச் சித்தமாக இருந்த ஜஹாங்கீர், நூர்ஜஹான் மீது கொண்டுள்ள அன்பினால் தனது மெய்மறந்து போதையுற்றவரும், கிரயமில்லாமல் தன்னை அடிமைப்படுத்திக் கொண்டவருமான ஜஹாங்கீர், இன்று மிகவும் சாமான்யமான ஒரு வயோதிகக் கிழவியின் வழக்கின் நிமித்தமாகத் தமது அன்புவாஞ்சை அனைத்தையும் மறந்து தமது வாழ்க்கைத்துணைவியான நூர்ஜஹானைக் குற்றவாளி என்ற முறையில் நிறைந்த தர்பாரில் பகிரங்கமாகக்கொண்டுவரும்படி உத்தரவுபிறப்பித்தார்.

கான்ஜஹான் அந்த வயோதிகக் கிழவியைச் சமாதானப்படுத்தி இருப்பார் என்று இரவெல்லாம் நிம்மதியாக இருந்த நூர்ஜஹான், அரண்மனை மேலதிகாரி தம்மிடம் வந்து தர்பாருக்கு வரும்படி அழைத்ததைக் கேட்டமாத்திரத்தில் வீரிட்டலறினள். எனினும், அரசாக்கினையை மீறமுடியாதன்றோ? ஆதலின், காபூரின் உத்தரவுப்படி தனது தோழிப்பெண்களுடன் தர்பாருக்குக் கைதி என்ற முறையில் புறப்பட்டனள். நூர்ஜஹான் மாளிகைக்குள்ளிருந்து வெளித்திண்ணையில் அடியெடுத்து வைத்தவுடன் அரண்மனை யெங்கும் திடுக்கமேற்பட்டது; தர்பாரெங்கும் பயமேற்பட்டது. "பார்வைகள் நேருக்குநேராக இருக்கவேண்டும், அங்குமிங்கும் திரும்பிப் பார்க்கலாகாது" என்று ஏவலாளரின் சப்தம் வந்தது. இச்சப்தம் வந்தவுடன் தர்பார் முழுவதுமே கலக்கமடைந்து அங்குள்ளவர்களனைவரும் மெய்துடித்தனர். ஒருவரை ஒருவர் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. தங்களது பார்வைகளைத் தாழ்த்திக்கொண்டனர். சக்கரவர்த்தினி வருகின்றனள் என்று மற்றொரு சப்தம்வந்தது. சக்கிரவர்த்தி ஜஹாங்கீர் தனது முகத்தைத் திருப்பிக்கொண்டார். ஆனால், மொகலாய வம்சத்தின் உணர்ச்சி அவரது முகத்தில் தோன்றின. அவரது நெற்றியில் மடிப்புகள் காணப்பட்டன. கன்னங்களிரண்டும் சிவந்து போயின.

காஜீசத்றுத்தீன் (தமது இடத்தைவிட்டு முன்வந்து) பெரிய அம்மா! சக்கரவர்த்தினி மாளிகை உப்பரிகையின் மீது உலாவிக்கொண்டிருந்தபோது உமது மைந்தன் எதிரில் வந்து கோட்டைச் சுவருக்கு அப்பால் கீழே நின்றுகொண்டு உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனன். அதுபோது தோழிப்பெண்கள் உனது மைந்தனைத் தடுத்தனர்; அவ்விடம் விட்டகல வேண்டுமென்று சைகை செய்தனர். ஆனால் அவன் அவ்வாறு செய்யவுமில்லை; அவ்விடம் விட்டகலவுமில்லை. அவனுடைய ஒழுங்கீனமான இத்துர்நடத்தையைக் கண்டு கோபமடைந்த சக்கரவர்த்தினி அவன்மீது அம்பு எய்தனர். ஏனெனில், அவன் பயந்து அவ்விடத்தை விட்டுச் செல்லட்டும் என்பது சக்கரவர்த்தினியின கருத்தாகும். தற்செயலாக அவ் அம்பு அவன்மீது பாய்ந்தது. அதனால், அவன் மரித்தனன். இதனை சக்கரவர்த்தினி அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

சக்கரவர்த்தி அவர்கள் "ஸில்லுல்லா" அதாவது அல்லாஹு தஆலாவின் நிழலாக இருக்கிறார்கள். அவர்கள் ஹிந்துக்களுக்கு எஜமானராக இருப்பதுபோல் முஸ்லிம்களுக்கும் அமீறுல் மூமினாக இருக்கிறார்கள். சக்கரவர்த்தினி அவர்கள் அமீறுல் மூமினீன் அவர்களுக்குப் பிரியமான அரசியாகவும் முஸ்லிம்களுக்கு உம்முல் மூமினாகவும் இருக்கிறார்கள். சக்கரவத்தினி வேண்டுமென்றே குற்றம் செய்யாதிருந்தும் அமீறுல் மூமினீன் ஹஜ்ரத் உமரபாரூக் ரலியல்லாஹு அவர்களது நீதத்தை மறுபடியும் உயிர்பெறச் செய்துவிட்டார்கள். இன்று அமீறுல் மூமினீன் அவர்களது வாழ்க்கைத் துணைவியான சக்கரவர்த்தினி நூர்ஜஹான் நினதுமுன் குற்றவாளி என்றமுறையில் நிறுத்தப்பட்டிருக்கின்றனள். நீதிமானும், நீதத்தை வளர்ப்பவருமான சக்கரவர்த்தி அவர்கள் அரியணையின் மீதமர்ந்திருக்கிறார். நீ நினது மைந்தனின் கொலைக்காகப் பழிவாங்க வேண்டுமென்று விரும்பும் பக்ஷத்

தில் அதனை அறிவித்துவிடு. வழக்கு விசாரிக்கப்படட்டும். நீ நஷ்டஈடு வாங்கிக்கொண்டு வழக்கை வாப்பஸ் வாங்கிக்கொள்ள இஷ்டப்பட்டால் அதனைக் கூறிவிடு. சக்கரவர்த்தினியின் தோழிகள் நீ கேட்கும் தொகையைக் கொடுக்கச் சித்தமாக இருக்கின்றனர். சக்கிரவர்த்தினியின் கருத்து கொலை செய்யவேண்டும் என்பதாக இல்லை எனினும், நீதிப்படியும் சட்டப்படியும் அவரிடம் பழிவாங்க முடியும். ஆனாலும், அல்லாஹுசுப்ஹானஹுவதஆலா உனது இச்செய்கைக்காக உன்னை விசாரிப்பான் என்பது ஞாபகத்திலிருக்கட்டும் எனக்கூறிவிட்டு நீதிபதி ஸத்ருத்தீன் சாஹிப் பேசாதிருந்தார். தர்பாரெங்கும் நிசப்தமாக இருந்தது. சபையினரின் நேத்திரங்களெல்லாம் அவ்வயோதிக ஸ்திரீயையே நோக்கின. செவிகளெல்லாம் அக்கிழவியின் வாய்சொல்லை யேற்கக் கவனமாயிருந்தன. அவ்வயோதிக ஸ்திரீயோ ஆச்சரியத்துடனும் பிரமிப்புடனும் சக்கிரவர்த்தினியைக் கூர்ந்து பார்த்தனள். பின்னர் அரியணையை அணுகி,

"அரசே! நினது நீதி கௌஷேர்வான் சக்கரவர்த்தியின் நீதியை மறக்கச் செய்துவிட்டது. என்போன்ற அற்பக் கிழவியின் முறையீட்டிற்காக, ஒரு தாழ்ந்த மனிதனை எனது மைந்தன் போன்றவனின் கொலைக்குப் பழிவாங்குவதற்காக சக்கரவர்த்தினியை, நிறைந்த தர்பாரில் பகிரங்கமாகக் கொண்டுவந்து நிறுத்தியதே நீதியின் கடைசி எல்லையாகி விட்டது. எனது மைந்தனின் ரத்தப் பழியை மன்னித்தேன், மறந்தேன். உண்மை, நீதி, நியாயம், சத்தியம் ஆகியவைகளை நிலைநிறுத்தவும் அதனைக் காக்கவும் வேண்டி தன்னைக் குற்றவாளி என்ற முறையில் தர்பாரின் முன் பகிரங்கமாகச் சமர்ப்பித்த இவ்வரசிக்காக, எனக்கு ஆயிரம் புதல்வர்களிருந்தாலும் அவர்களனைவரையும் அற்பணம் செய்யச் சித்தமாக இருக்கின்றேன். அரசே! இதே நீதிதான் நினது ஆட்சியை நிலைக்கச் செய்யும். நினது சந்ததியினர் நீதி நியாயம் வழங்கும்வரை நினது கீர்த்தி பிரகாசித்துக் கொண்டிருக்கும்" என்று கூறிவிட்டுத் திரும்பச்செல்ல ஆரம்பித்தனள். நீதிபதி சத்றுத்தீன்:—(முன்வந்து காபூர் என்பவரை நோக்கி) "பெரிய அம்மா அவர்கள் தமது வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள் ஆதலின், அரசி இக்குற்றத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டனள்" என்று தீர்ப்புக் கூறினர்.

அரசியைச் சூழ்ந்து காவல் நின்ற அரண்மனைப் பேடிகளை காபூர் என்பவர் அகற்றிவிட்டார். உடனே, அரசி தனது தோழிகளுடன் அரண்மனைக்குள்ளேகினள். ராஜா மான்சிங் அரசி விடுதலையடைந்த சந்தோஷத்தின் மேலீட்டால், தனது இடைவாளையுருவி உயர்த்திக்கொண்டு "சக்கரவர்த்திக்கு ஜே", "சக்கரவர்த்தினிக்கு ஜே" என்று ஜெயகோஷம் செய்தார். அவரைப் பின்றொடர்ந்து தர்பாரிலிருந்த ரஜபுத்திரர்கள் கூறிய ஜெயகோஷத்தால் அம்மண்டபம் முழுவதும் முழங்கிற்று. பிறகு கான்ஜஹான் எழுந்துநின்று "சக்கரவர்த்தி ஜஹாங்கீர் வாழ்க! மொகலாயரின் நீதம் ஓங்குக!" என்று ஆர்ப்பரித்தார். இவ்விதச் சந்தோஷ ஆரவாரத்தினிடையே அரியணை முன் திரை விடப்பட்டது. ஏவலாளர் தர்பார் கலைந்ததாக அறிக்கை செய்தார்.

பிறகு, ஜஹாங்கீர் மெள்ள மெள்ளச்சென்று தமது அன்பிற்குரிய காதலி நூர்ஜஹான் இருக்கும் மாளிகைக்குள் நுழைந்தார். நூர்ஜஹான் தர்பாரிலிருந்து விடுதலை யடைந்ததும், நேராகத் தமது ஆசனத்தமர்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனள். ஜஹாங்கீர் வருவதைப் பார்த்ததும் தோழிகள் அப்புறம் அகன்றனர். ஜஹாங்கீர் எவ்விதச் சந்தோஷமுமின்றி தனது அன்பிற்குரிய வாழ்க்கைத் துணை நல்லாள் நூர்ஜஹானை கட்டியணைத்துக் கொண்டு "பேகம்! நீ கொல்லப்பட்டுப் போயிருந்தால் யான் எவ்விதம் உயிர் வாழ்வேன்" என்று கூறியவராய் தமதிரு கரங்களையுமுயர்த்தி "அருளாளா! உனது இக்கருணைக்கு யான் எங்ஙனம் நன்றி செலுத்துவேன்............" என்று இறையை இறைஞ்சினர்.

கான்ஜஹான் வயோதிக கிழவிக்குத் தருவதாகக் கூறிய ஒரு லக்ஷம் தங்க நாணயத்தைத் தமது வாக்குத்தத்தப்படி அனுப்பிவைத்தார். நூர்ஜஹான் பல லக்ஷம் ரூபாய்களையும் அநேகம் விலையுயர்ந்த ரத்தினங்களையும் வெகுமதியாக அனுப்பினள்.

தரித்திலகரப்பட்ட ஒரு வயோதிக ஸ்திரீயின் முறையீட்டுக்கு நீதி வழங்கவேண்டும் என்பதற்காகச் சக்கரவர்த்தினி குற்றவாளி என்ற முறையில் தர்பாரில் பகிரங்கமாக அழைத்துவரப்பட்ட இச்சம்பவம் இந்தியாவின் சரித்திரத்தில் அழிந்து விடுகிறது. ஆனால், ஆலம்கீர் சக்கரவர்த்தி ஹிந்துக்களைத் தொந்தரை செய்தார் என்றும் அநீதி செய்தாரென்றும் பெரும்

பெரும் எழுத்துக்களால் மிக அலங்காரமாக எழுதப்படுவது இக்காலத்தில் காணப்படுகிறது. இதுவும் காலத்தின் விசேஷமன்றோ?

இவ்வாறு நீதியோடு அரசு புரிந்துவந்த சக்கரவர்த்தி ஆலங்கீர் மீது குரோதத்தினாலோ அல்லது அழுக்காற்றினாலோ குறைகூற சில ஹிந்துக்கள் முன் வந்தது எவ்வளவு தூரம் விவரீதமாகு மென்பதை மேற்கூறப்பட்ட சம்பவ நிகழ்ச்சிகளிலிருந்து நண்பர்களே உணரக்கடவார்களாக.

இஸ்லாத்தின் முன்னேற்றமும் தற்கால முஸ்லிம்களின் நிலைமையும்

(தென்காசி ஜனாப் மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் வரைவது)

சோதரீர்!

தற்காலை எத்திசை நோக்கினும் சீர்திருத்தம், முன்னேற்றம் என்னும் வாக்கியங்களையே சதாவும் செவியுறுகின்றோம். இவ்வாறு முறசிடும் சகோதரர்கள் எவ்வகுப்பினர்கள் என்பதை நோக்கின், சகல சமயத்தினுடைய சகல வகுப்பினரும் தானென்பதைக் கண்டுகொள்கின்றோம். ஆனால் முஸ்லிம்கள் எவ்வாறாய சீர்திருத்தம், முன்னேற்றம் ஆகியவைகளைத் தேடுகின்றனர்? இதர சமயத்தவர் எவ்வாறாய சீர்திருத்தம், முன்னேற்றம் ஆகியவைகளைத் தேடுகின்றனர்? என்னும் விஷயங்களைச் சிறிது ஆராய்வோம். முஸ்லிம்களோவெனின், தாங்கள் ஒரு காலத்தில் சீர்திருத்தத்திலும் முன்னேற்றத்திலும் சகல சமயத்தினரை விடவும் உன்னத ஸ்திதியிலிருந்தனர்; காலஞ்செல்லச் செல்ல ஒற்றுமையும், ஊக்கமும், பக்தியும் குறைய ஆரம்பித்ததின் காரணமாக தற்காலை மிகக்ஷீண திசையிலிருக்கின்றனர். ஆதலால், இவர்கள் தாங்களிழந்த சீர்திருத்தம், முன்னேற்றம் ஆகியவைகளையே மீண்டும் அடைய முற்படுகின்றனர். ஆதலின், முஸ்லிம்கள் தேடுவது புதிய விஷயமன்று. ஆனால், இதர சமயத்தினரோவெனின், தங்கள் மதத்தில் இல்லாத - அனுமதிக்கப்படாத- சீர்திருத்தம், முன்னேற்றம் ஆகிய இவைகளை பிரசாரத்தின் மூலமாகவும் இராஜாங்க சபை, சட்ட சபைகள், முதலியவைகளின் மூலமாகவும் பெற அதிமுயற்சியெடுக்கின்றனர். எனிவைகள் அவர்களின் மதங்களில் இல்லை, அனுமதிக்கப்படவில்லை என்று நன்கு சிந்தித்து பார்த்தால் இவர்களின் மதத்தலைவர்கள் சகல துறைகளிலும் சம்பூரணராக இல்லாததும், அவர்கள் இவ்வுலகிற்கு ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்களுக்கு மட்டும்தான் நேர்வழிகாட்ட அனுப்பப்பட்டதும்தான் காரணமாகும். இன்னும், இவர்களின் சட்டதிட்டங்களும் அக்கால மக்களுக்கேற்றவாறே அமைந்துள்ளனவாதலின் அவர்கள் வேதத்தில் எக்காலமக்களும், எத்தேசத்தினரும் அனுஷ்டிக்கும் வண்ணம் போதனைகளும், சீர்திருத்தங்களும் இல்லாததே முக்கிய காரணமெனலாம்.

ஆனால், நமது இஸ்லாம் மதமும், இதன் சட்டதிட்டங்களடங்கிய வேதமும், சகல துறைகளிலும் சம்பூரணமானதாகவே யமையப்பெற்றுள்ளதுடன் இதன் திருநபியும் சகலதுறைகளிலும் மேம்பட்டவர்களாக விருக்கின்றார்கள். ஏனெனின், இம்மதமும், இம்மதத்தின் சட்டதிட்டங்களடங்கிய வேதமாகிய திருமறை குர்ஆன்ஷரீபும் இவ்வுலகமக்கள் அனைவர்கட்கும் இவ்வுலகம் அழியும்பரியந்தம் நேர்வழி காட்டக் கூடியதாகவும், சகல முன்னேற்றங்களையும், சீர்திருத்தங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டனவாகவும் அமையப்பெற்றிருப்பதினாலேயாகும். இன்னும், இப்படிப்பட்ட அழகிய சத்திய சன்மார்க்கத்தை சம்பூரணமாக இவ்வுலகிற்குக் கொண்டுவந்த எம்பெருமானார் அகில விருட்சகர் அஹ்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் இல்லரவாசியான துறவியாகவிருந்து, மானுஷீக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நுழைந்து வெளிப்படவேண்டிய சகல அந்தஸ்தையும் வகித்து, அவ்வப்பதவியிலுள்ளாரும் எங்ஙனம் ஒழுகவேண்டுமென அனுஷ்டித்துக் காட்டி, மானிடவர்க்கம் பின்பற்றத்தக்க ஓர் பரிபூரண

இலக்கியபுருடராய்த் திகழ்ந்தார்கள். அரசனுயினும் ஆண்டியாயினும், இல்லறத்தானுயினும் துறவுபூண்டவனுயினும், உழுதுண்டு வாழ்வோனுயினும் வர்த்தகனுயினும் சமாதான காலத்தும் சமர்புரியுங்காலத்தும், எவருக்கும் வேண்டும்படிப்பினை எதுவாயினும் அதற்கு அகில விருட்சகர் (ஸல்.) அவர்களது ஜீவிய வாழ்க்கையில்அன்னர் நடந்துகாட்டிய முன்மாதிரிஇல்லாதிராதென்ருல் அன்னரது பெருமையையும், அவர்கள் நமக்கு கொணர்ந்த மார்க்கத்தின் மகிமையையும் எடுத்தியம்பவும் வேண்டுமோ? இதற்காகவே இறைவன்திருமறையில் "நுங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (முஹம்மது நபி (ஸல்.) அவர்களது ஜீவியவாழ்க்கையில் அழகிய முன்மாதிரி இருக்கிறது" என விளம்பியுள்ளான்.

சகோதரர்களே!

முஸ்லிம்களாய நாம் இத்துணை சிறப்புப் பொருந்திய சன்மார்க்கத்தில் இருந்துகொண்டு இதர மதத்தினர்களின் முன்னேற்றங்களையும் சீர்திருத்தங்களையும் பார்த்து அவைகளைப் பின்பற்ற நமக்கென்ன அவசியமேற்பட்டுப் போயிற்று? நாம் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்யை அன்னியரிடம் கடன்வாங்குபவர்கள் போலிருக்கிருேம். ஏனைய எல்லா சமயத்தவர்களும் இஸ்லாத்தின் முன்னேற்றத்தையும், சீர்திருத்தத்தையும் எடுத்துக்கொண்டு அதற்குப் பல நவநாமங்களைச் சூட்டி அனுஷ்டிக்கின்றனரேயன்றி வேறல்ல. ஆனல் நாமோ நமக்குள்ள சகல முன்னேற்றங்களையும், சீர்திருத்தங்களையும் விட்டுவிட்டு நாளுக்குநாள் க்ஷீணதிசையடைந்து கொண்டே போகின்ருேம். என்னே நமது அறியாமை!

அன்பர்காள்!

நாம் எதுவரை நமது மத ஆக்ஞைப்படி நடந்துவந்தோமோ அதுவரை இவ்வுலகிலுள்ள எல்லா சமயத்தவர்களும் நம்மைப் போற்றியும், புகழ்ந்தும், நமக்கு ஐக்கியப்பட்டும், நமது நாகரீகத்தைப் பின்பற்றியும் வந்தனர். ஆனல் நாம் எதுபொழுது நமது உயர்ந்த நன்நடக்கைகளை விட்டு நமது மனக் குரங்கிற்கு வழிப்பட ஆரம்பித்தோமோ அன்று முதல் நாம் சகல துறைகளிலும் க்ஷீணதிசை யடைந்ததுடனில்லாது நம்மைப்போற்றி வந்தவர்களெல்லோராலும் இகழப்படுவதற்கும் பாத்தியஸ்தருமானேம்; நமது பண்டைய கீர்த்தியையும் மதிப்பையும் இழந்தோம்; நாம் சொற்ப ஜனங்களாயிருந்துகொண்டு இவ்வுலகத்தையே நடுங்கச்செய்த மாபெரும் இராஜாங்கங்களையெல்லாம் அன்னிய மதத்தினரிடமும், அன்னிய தேசத்தினரிடமும் பறிகொடுத்தோம்; நமது தைரியங்களை யெல்லாமிழந்து அடிமைகள்போல் வாழ்கின்ருேம். இவ்வாறு நாம் தலைகீழாகப்போயும் நமக்கு உணர்ச்சியில்லை, ஊக்கமில்லை, சன்மார்க்க பக்தியில்லை. யாருக்கு வந்தவிருந்தோவென இருந்துகொண்டு "இன்னும் கெட்டுப் போவோம் என்ன பந்தயம்" என்னும் பழமொழியையே சிரமேற்கொண்டு நடக்கின்ருேம். அந்தோ! நமது நிலைமையைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்தால்தான் தீருமோ? பரிதாபம்! மிக்க பரிதாபம்!!

நாம் இவ்வாருய நிலைமையிலிருந்தும் நமது ஆடம்பரத்துக்கும் வீண் டம்பங்களுக்கும் குறைவில்லை. நமக்குள் எத்தனையோ கட்சிகள் தோன்றி நம்மை பாதாளத்தில் ஆழ்த்தி வருகின்றன. நாம் ஒருவருக்கொருவர் சண்டைகளிட்டுக் கொண்டு, நமது நெற்றிவேர்வை நிலத்தில் விழ கஷ்டத்துடன் சேமித்துவைத்த பொருள்களை யெல்லாம் கோர்ட்டுக்கும் வக்கீல்கட்கும் வீணே வாரியிறைக்கின்ருேம். இறுதியாக இவ்வாருய நிலைமையில் நம்முடைய ஆஸ்திகளை யெல்லாமிழந்து இன்ஸால்வென்ட்டும் மிக தைரியமாகக் கொடுத்துவிடுகின்ருேம் பரிதாபம்! நாம் இவ்வாறு மேலும் மேலும் அதிகீழ்த்திசையில் சென்று கொண்டிருப்பதைப் பார்த்த இதர மதவாதிகள் "ஊர் இரண்டிட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பதைப்போன்று நமக்கிடையில் நுழைந்து மீண்டும் மீண்டும் நமக்குள் கட்சிகளையும், வீண் கிளர்ச்சிகளையும் கிளப்பிவிடுகின்றனர். இதற்கு உதாரணம் திருநெல்வேலி ஜில்லா போர்டு தேர்தலில் நடந்த சம்பவங்களைப் பார்க்கின், மேற்கூறிய விஷயங்கள் முற்றும் உண்மையெனப் புலப்படும்.

எனதாருயிர் சகோதரர்களே!

இதுமட்டுமா? அல்ல. நம்மை சகல துறைகளிலும் முன்னேற விடாது சதா முட்டுக்கட்டை யிடுகின்றனர். ராஜீய விஷயங்களை எடுத்துக் கொண்டாலும் அங்கும் முஸ்லிம்கள் தங்கள் தயவை யெதிர்பார்க்கும்படி சதா முயற்சிசெய்துகொண்டு "நாங்கள் ஹிந்து

முஸ்லிம் ஒற்றுமைக்கு பாடுபடுகின்றோம்'' என்று வாய்கூசாது கூறித்திரிகின்றனர். வீரர்களின் மரபிலுதித்த நாம் இவ்வாறான நிலைமைக்கும் வந்துவிட்டோம் அந்தோ பரிதாம்! இன்னும், இந்தியாவின் பொதுப்பாஷையாக எதை வைப்பது என்ற விஷயத்திலும் முஸ்லிம்களின் நோக்கங்கட்கு முட்டுக்கட்டையிடுகின்றனர். வெகு நாட்களாக எங்கும் பரவியிருக்கக்கூடியதும் இந்தியாவின் அரைவாசி ஜனங்கட்கு தாய்பாஷையாக வழங்கப்பட்டு வருவதுமான ''உர்தூ'' பாஷையைத் தொலைத்துவிட்டு தங்களது சமஸ்கிருத பாஷை கலந்த ''ஹிந்தி''யை இந்தியாவின் பொதுப் பாஷையாக ஆக்கிவிட எங்கும் ஸ்கூல்களை ஏற்படுத்தி அதற்கான சகல முறைகளையும் கையாளுகின்றனர். இதற்காக பல சபைகளையும், சங்கங்களையும் ஏற்படுத்தி, பரீட்சை காலங்களில் பல மெடல்களையும் ஹிந்தி மாணவர்கட்கு வழங்கி அவர்களை அதி உத்சாக மூட்டுகின்றனர். தற்கால காங்கிரஸ் தலைவரான பாபுராஜேந்திர பிரசாத் நமது சென்னை மாகாண சுற்றுப் பிரயாணத்தில் ''ஹிந்தி'' பாஷை அபிவிருத்திக்காக எடுத்துக்கொண்ட முயர்ச்சியையும் ஊக்கத்தையும் பார்க்கும்போழ்து ஹிந்தி பாஷையில் அவருக்குண்டான அன்பும் உர்தூவின்மீது அவருக்குண்டாய வெறுப்பும் நன்கு தெரியவரும். இதற்கெதிராக நாமோ முற்றும் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்து கிடக்கின்றோம். மேலும் ஹிந்தி பிரச்சார சபைகளுக்கு முஸ்லிம்கள் உபகாரமும் செய்கின்றனர். அம்மாஹா நாடுகளுக்குச் சென்று தலைமையும் வகித்து இதைப் போற்றியும் பேசுகின்றனர். அந்தோ இன்னவர்கள் உர்தூ பாஷை நசித்துப்போவதை சிறிதும் கவனிப்பதில்லை. இஸ்லாமிய தலைவர்களே! இதன் பக்கல் நுங்களது கவனத்தை சிறிது திருப்பி முஸ்லிம்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர மாட்டீர்களா? மேலும்,

நமக்குள் ஒரு சிலர் தோன்றி தாங்கள்தாம் உண்மையான முஸ்லிம்களென்று பறையடித்துக் கொண்டு நமது பரிசுத்த மார்க்கத்தில் இல்லாத விஷயங்களையும், குர்ஆன் ஷரீபிலும், ஹதீதுகளிலும் உள்ளவைகளுக்கு மாற்றமானவைகளை கூறியும், பிரசாரங்கள் செய்தும், புத்தகங்கள்எழுதியும் நம்மை பாதாளத்தில் ஆழ்த்தி வருகின்றனர். இவைகட்கு மாற்றமாய் உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கும் உண்மை அறிஞர்களை சதாவும் தூற்றுவதை அன்னோர் தங்களின் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு நமது இஸ்லாமிய வாலிபர்களுக்கு தங்கள் மதத்தலைவர்கள்மீது வெறுப்பையுண்டாக்கிவிட்டால் இவர்கள் தங்கள் இஷ்டம் போல் மார்க்கத்தைப்புறட்டி வயிர்வளர்க்கலாம், கடுமொழி பரிகாசவார்த்தை முதலியவைகளால் அறிஞர்களை திட்டும்போது வாலிபர்களை தங்கள் வலையில் சிக்கவைத்துக்கொள்ளலா மென்பது இன்னோர்களின் நோக்கம் போலும். என்னே இவ்வஞ்சகக் குழாத்தினரின் அறிவு சென்றவாறு! இனியேனும் இவ்வஞ்சகக்குழாத்தினர் தங்களது வஞ்சகத் தொழிலை விடுத்து மனமொழி மெய்களால் உண்மை முஸ்லிம்களாகத் திகழ்வார்களா?

இஸ்லாமிய பக்தர்களே!

இவ்வாறு நாம் பலதுறைகளிலும் பிற்போக்கடைந்து வருவதைப் பார்த்தாவது நமது ஆழ்ந்த தூக்கத்தை விட்டொழித்து நமது சமூகம் முன்னேற்றமடைவதற் குண்டான வழியை நாம் கண்டுபிடிக்கலாகாதா? நமது முன்னோர்களின் சரிதைகளை உற்று நோக்கக் கூடாதா? இன்றுமுதலாவது நாம் நமது இஸ்லாமிய நாகரீகமென்னும் நற்பழக்கவழக்க சஞ்சீவியை உபயோகிப்போமாக; நமக்குள் சகல துறைகளிலும் ஒற்றுமையைஸ்தாபிப்போமாக; நமக்கிடையில் நுழைந்து கிடக்கும் நூதன அனுச்சார பித்அத்துகளான துற்வழக்கங்களை அகற்றுவோமாக; நமக்குள் நிகழும் சகல சம்பவங்களிலும் வீண் ஆடம்பரங்களை விட்டொழித்து சிக்கனத்தைக் கைக்கொள்வோமாக; நமக்குள் எண்ணத்தொலையா எத்தனையோ சங்கங்களிருந்தும் நஞ்சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவைகள் மிக சொற்பமே. ஆதலின், எல்லா சங்கத்தினர்களும் தங்களது துயிலைவிட்டொழித்து நஞ்சமூக முன்னேற்றத்திற்கான வழியில் இறங்குவார்களாக.

முஸ்லிம்கள் வதியும் ஒவ்வொரு ஊர்களிலும் இஸ்லாமியப் பிரசாரசபைகளை அவசியம் ஏற்படுத்தவேண்டும்; இதற்கு உதவிபுரிய ஒவ்வொரு முஸ்லிம் சகோதரர்களும் முன்வரல் வேண்டும். பிரசார விஷயமாக சென்ற அக்டோபர் மாதம் வெளியான நம் ''ஹிபாஜத்துல் இஸ்லாம்'' சஞ்சிகையில் ''இஸ்லாமே பிரசாரத்திற்குரிய மதம்'' என்ற தலைப்பின்கீழ் அதிவிரி

வான வியாசமொன்று வரைந்துள்ளேனாதலின் ஈண்டும் அதைப்பற்றி விரிவாக வரையவிரும்ப வில்லை. ஆனால் சில விஷயங்களை ஞாபகத்திற் காகவரைகின்றேன்: நமது சமூகத்தினிடையே நுழைந்து கிடக்கும் துற்வழக்கங்களை மேற்படி சபையின்மூலமாக அகற்றவேண்டும். இஸ்லாத் தின் தத்துவங்களையும், நட்பங்களையும், நோக் கங்களையும் இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் நமதுவாழ்க்கைக்கு எவ்வளவு பொருத்தமாக யிருக்கின்றதென்பதையும், நமது எதிரிகளால் இஸ்லாத்திற்கு இழைக்கப்பட்டுவரும் இன்னல் களையும், அதற்காகநாம்செய்யவேண்டுவதென்ன வென்பதையும் நமது முஸ்லிம்களுக்கும் ஏனைய மத சகோதரர்கட்கும் அழகிய முறையில் எடுத்துரைக்கவேண்டும். ஆங்காங்கு உர்து அபிவிருத்தி பிரச்சார சபைகளை ஏற்படுத்தி உர்து பாஷையைக் கற்க நமது முஸ்லிம்களை வற்புறுத்தவேண்டும்.

சகோதரர்களே!

ஹிந்து மஹாசபையையாவது காங்கிரஸ் சபையையாவது உதாரணத்திற்காக எடுத்துக் கொள்வோம். இவைகளின் தலைமைக் காரியா லயத்திலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்படு மாயின் ஒவ்வொரு மாகாணசபைகளும், ஜில்லா, தாலூகா, கிராம சபைகளும் எவ்வளவு துரித மாக அவ்வறிக்கையைக் கவனித்து ஆவன செய்ய முற்படுகிறது என்பதை கண்கூடாகக் காண்கின்றோம். இவ்வாறே நமது இந்தியா பூராவும் இவைகளுக்குக்கிளைச்சபைகள் இருந்து வருகிறது. இதனை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு நமது சமூகத்தின் நிலைமையையும் இத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்! நமக்கு இந்தியா பூராவும் சபைகள் இல்லாது போயி னும் ஒரு மாகாணத்திலாவது இவ்விதம் இருக் கின்றதா என்பதை நன்காராய்ந்து பார்த்தால் இல்லை யென்பதாக மிகதைரியத்தோடு கூறி விடலாம். ஏன்? நமக்குள் ஒற்றுமையில்லை, ஊக்கமில்லை, நமது சமூகம் முன்னேறவேண்டு மென்ற ஆசையில்லை. என்செய்வோம் பாபம். இத்துணை காலமாக போனது போகட்டும் இனி மேலாவது இவ்விதத்துறைகளில் நமது அறி ஞர்கள் கவனம் செலுத்துவார்களாக. கேவலம் ஒரு தாலூகா முஸ்லிம்கள் சேர்ந்து ஒரு பிரச் சாரகருக்கு உதவியளித்து சமூகமின்னேற் றத்திற்குப் பாடுபடலாகாதா? இவ்வாறு ஒவ் வொரு தாலூகாக்களிலும் நடக்கும் பட்சம் இதன் காரணமாக ஒற்றுமையும், முன்னேற்ற மும் ஏற்படுமென்பது மறுக்கமுடியா உண்மை யாகும். சமூக முன்னேற்றத்திற்கும், வஞ் சகர்களின் மாயவலைகளில் சிக்கவிடாது நமது முஸ்லிம்களைக் காப்பாற்றுவதற்கும் பொறுப் புடன் உழைத்து வெற்றி பெற்றுவரும் நுங்க ளது ஏழுவயது குழந்தையாம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திரிகையை வாரப் பதிப்பாகத் திகழச்செய்ய முன்வரமாட்டீர்களா? இதன் சந்தாதார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புதிய சந்தாதார்களைச் சேர்த்தனுப்பி வைப்பார்களா னால் இன்ஷா அல்லாஹ் வெகுசீக்கிரம் வாரப் பதிப்பாகத் திகழுமென்பது திண்ணம். நீங்கள் தினசரி எவ்வளவோபொருள்களை செலவுசெய் கின்றீர்கள். அதில் ஒரு பகுதியை நுங்களது ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற் குக் கொடுத்துதவ முன்வரலாகாதா?

இறுதியாக சிலவிஷயங்களை வரைந்து இவ் வியாசத்தை முடிக்கின்றேன். நாம் ஒவ்வொரு வரும் நபிகள் நாயகத்தின் அடிச்சுவட்டைப்பின் பற்றுவோமாக. மனோவாக்கு காயங்களால் நாம் உண்மை முஸ்லிமாகுவோமாக. நாம் இவ்வாறான தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டோமாதலின் இனி எவ்வாறு முன்னேற்றமடைவோம் என்ற மனத்தளர்ச்சிவேண்டாம். இறைவனின் வச னத்தைநோட்டமிடுவோமாக அதாவது:— அதைரியப்படாதீர்கள், மனவருத்தமுறாதீர்கள் (ஏனெனின்) நீங்கள்மட்டும் உண்மையான உறுதியுடையவர்களாயிருக்கும் பட்சம் (நீங் களே இவ்வுலகில்) மேலான நிலையிலிருப்பீர் கள். (குர்ஆன்). சமூகத்தலைவர்களே! வாலிப சிங்கங்களே!! இன்றே இரங்குவீர்களாக! சத்திய இஸ்லாத்திற்குத் தொண்டாற்ற முன்வருவீர்க ளாக. ஆங்காங்கு சன்மார்க்கத் தொண்டர்களை ஏற்படுத்துவீர்களாக. இன்றே எழுங்கள்! நன்றேயுழையுங்கள்!! இதனால் இகபர நற் சாதனங்களைப் பெற்றுய்யுங்கள்!!!

சந்தாநேயர்கட்கு!

ரமலான் ஷரீபுக்குப் பின்னுள்ள ஈதுப்பெருநாளை முன்னிட்டு அடுத்த—அதாவது 1936-ம் ஆண்டு ஜனவரி—மாதத்திற்குரிய மாசிகை அம்மாதம் 15-ம் திகதிக்குப்பின் வெளி வருமென்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். —மானேஜர்.

அத்தாவுல்லாஷாஹ் புகாரி வழக்கு
ரிவிஷன் மனு தீர்ப்பு

ஹைகோர்ட்டு அதிகாரம் வரையருக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் ஷாஹ் சாகிபின் தண்டனையை அதிகப்படுத்த முடியாது.

பஞ்சாப் மாகாண அமீருஷ்ஷரீஅத்தும், அஹ்றார் சபைத் தலைவர்களிலொருவரும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சந்ததியிற் றோன்றியவரும், பிரபல மார்க்கோபன்யாசகருமான மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் சாஹிப் புகாரி அவர்கள், காதியானில் நடைபெற்ற அகில இந்திய அஹ்றார் மகாநாட்டில் தலைமை வகித்துச் சுமார் 60 அல்லது 70 ஆயிரம் பேர்களைக் கொண்ட மாபெரும் கூட்டத்தில் செய்த தலைமைப் பேருரையின் பேரில் பஞ்சாப் சர்க்கார் மௌலானா அவர்கள் மீது வழக்குத் தொடுத்து குர்தாஸ்பூர் ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட்டால் 6 மாத சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டதும், அதனை ஆக்ஷேபித்து மௌலானா அவர்கள் குர்தாஸ்பூர் செஷன்ஸ் ஜட்ஜ் கோர்ட்டில் அப்பீல் செய்ததும், செஷன்ஸ் ஜட்ஜு இவ்வழக்கை விசாரித்து மௌலானா அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மாற்றி சர்க்காரின் நடத்தையையும், காதியானிகளின் விபரீதப் போக்கையும் பற்றித் தமது தீர்ப்பில் பிரஸ்தாபித்துக் கூறியிருந்ததும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

பின்னர், செஷன்ஸ் ஜட்ஜு கூறிய ஜட்ஜ்மெண்டிலிருந்து அரசாங்கத்தைக் குறித்து எழுதி இருக்கிற சில பாகத்தை எடுத்துவிட வேண்டுமென பஞ்சாப் சர்க்காரும், காதியானித் தலைவர்களைக் குறித்து ஷை ஜட்ஜ்மெண்ட்டில் கூறப்பட்டிருக்கும் பகுதியில் 14 வாக்கியங்களை எடுத்துவிட வேண்டுமென்று காதியானீ கலீபா மிர்ஜாபஷீருத்தீன் மஹ்மூதும் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்தனர். காதியானிகள் சார்பாக ஸர். தேஜ்பகதூர் சாப்ரூ ஆஜரானார். ஷை அப்பீல் மனுக்களைப்பற்றிய விவாதம் நவம்பர் மீ 11உ லாகூர் ஹைக்கோர்ட்டில் நடைபெற்றபின் ஜட்ஜ் மிஸ்டர் ஜே கோல்டுஸ்ட்ரீம் தீர்ப்புக் கூறினார். அதன் சாராம்சம் வருமாறு:—

"சர்க்காரின் நிர்வாகத்தைத்தாக்கி எழுதி இருக்கிற பாகத்தை ஜட்ஜுமென்டிலிருந்து எடுத்துவிடவேண்டுமென்று கவர்ன்மெண்ட் அட்வகேட் ஒருமனுக் கொடுத்து, போலீஸாரிடம் கொலை சம்மந்தமான ரிப்போர்ட்டுகளிருந்தும் போலீஸார் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை என்று செஷன்ஸ் ஜட்ஜு எழுதி இருக்கிறார் என்று சர்க்கார் வக்கீல் ஆக்ஷேபித்திருக்கிறார் என்று நீதிபதி குறிப்பிட்டு, இவைகளை அகற்ற மறுத்து, அவை சம்மந்தமாய் பின்வருமாறு கூறியிருக்கிறார்:— ரிக்கார்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் சாக்ஷியங்களையும், இவ்வழக்கிற்கு அவைகளில் இருக்கிற சம்பந்தத்தையும் கவனிக்குமிடத்து செஷன்ஸ் ஜட்ஜ் இவ்விதமாக ரிமார்க்கு எழுதுவதற்கு அவசியமில்லை." என்றும்,

காதியானீ கலீபாவின் சார்பாக டாக்டர் சாப்ரூ செய்துகொண்ட அப்பீலைக் குறித்து ஜட்ஜு தீர்ப்பு கூறும்போது, அவர்கள் ஆக்ஷேபித்த 14 வாக்கியங்களில் "அஹ்மதீ மதம் புதிதாக உண்டாக்கப்பட்ட மதம்" என்று செஷன்ஸ் ஜட்ஜ் கூறியதில் "புதிதாக உண்டாக்கப்பட்டது" என்ற வார்த்தைகளை அகற்றிவிடத் உத்தரவு செய்து "மதத்தைப்பற்றி அபிப்பிராயங்கூற கோர்ட்டுக்குஉரிமையில்லை" என்று கூறி இருக்கிறார். "முபாஹலா" பத்திராதிபர் அப்துல்கரீம் என்பவரின் மரணத்திற்கு வேண்டிய சூழ்ச்சிகளை காதியான் கலீபா செய்தார்" என்ற வாக்கியத்தையும் ஷை ஜட்ஜ்மெண்டிலிருந்து எடுத்துப்போட உத்தரவு செய்து "இதற்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதச் சம்மந்தமுமில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். மிர்ஜா குலாம் அஹ்மது இதர முஸ்லிம்களைத் தூஷணைசெய்தார் என்று ஷை ஜட்ஜ்மெண்டின் ஓரிடத்தில் கூறப்பட்டிருப்பதால் இதனை அகற்றிவிட நீதிபதி மறுத்து விட்டாராயினும் "இவ்வழக்குடன் இதற்குச் சம்மந்தமில்லாததால் இதனை செஷன்ஸ் ஜட்ஜ் தமது தீர்ப்பில் குறிப்பிட

வேண்டிய அவசியமில்லை" என்று கூறினர். மிர்ஜா காதியான் பூளோமிர் கம்பெனியின் ஒய்ன் டானிக்கை உபயோகித்துவந்தார் என்று செஷன்ஸ் ஜட்ஜ் கூறிஇருக்கும் வாக்கியத்தை எடுத்துப்போட உத்தரவுசெய்து "மிர்ஜாவின் சாப்பாட்டைப் பற்றியோ குடித்துக்கொண்டிருந்ததைப்பற்றியோ விவரிப்பது இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதல்ல" என்று கூறி இருக்கிறார்.

தண்டனையை அதிகப்படுத்த வேண்டும் என்று சர்க்கார் சார்பாகக் கேட்டுக்கொள்ளப் படவில்லை. ஆதலால், கோர்ட்டின் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. (அதாவது ஷாஹ்சாகிபின் தண்டனையை அதிகப்படுத்த முடியாது) என்றும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு:—இவ்விஷயம் லாகூரில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகையிலிருந்துஎடுக்கப்பட்டதாகும். ஆனல் நமது சென்னையில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகை இந்தத் தீர்ப்பை வெகு ஆர்ப்பாட்டமாகப் பெருங்கொட்டை எழுத்தில் பிரசுரித்திருப்பதுமல்லாமல் மிர்ஜாகுலாம் அஹ்மதைப்பற்றி செஷன்ஸ் ஜட்ஜ் குறிப்பிட்டு "காதியான் மிர்ஜா ஒய்ன் சாப்பிடுவது வழக்கம்" என்றெழுதி இருந்ததை "அவரது புதல்வரும் தற்போதைய காதியானி கலீபாவுமான மிர்ஜா பஷீருத்தீன் பால்மர்ஸ் டானிக் ஒயின் சாப்பிடுவது வழக்கமென்று" எழுதி இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்றபடி, அந்தப் பத்திரிகை காதியானி மீது கொண்டுள்ள அபிமானத்தால் உண்மைக்கு மாறாக, ஜட்ஜ்மெண்டில் ஒன்று கூறப்பட்டிருக்க இப்பத்திரிகை வேறுவிதமாகக் கூறி ஏதோ பழைய ஜட்ஜ்மெண்டே மாற்றப்பட்டுப் போய்விட்டதாக பொது ஜனங்கள் கருதும் தோரணையில் விஷயம் விளங்காமல் எழுதியிருக்கிறது. என்னே இப்பத்திரிகையின் விபரீதப் போக்கு!

பழைய ஞாபகம்

பாரூக்கி தர்பாரில் ஒரு நௌ முஸ்லிம்

கிலாபத்தே ராஷிதாவின் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களில் எதை எடுத்துக் கொண்டாலும், அதில் உங்களுக்கு மிகவும் அபூர்வமானதும், ஆச்சரியமானதும், புதிதானதும், பிரமிக்கத் தக்கதும், மதசம்பந்தமுள்ளதுமான பல விஷயங்கள் இருப்பது தெரியவரும். அவ்விஷயம் சரித்திரத்தில் பிரத்தியேகமாக பொன்மை கொண்டெழுதப் படத் தகுந்ததாக இருப்பதைக் காணலாம். ஹஜ்றத் உமர் பாரூக் (றலி.) அவர்கள் இரண்டாவது கலீபாவார்கள். இவர்களது காலத்தில்தான் ரோமன் ஏகாதிபத்தியமும், பாரசீக ஏகாதிபத்தியமும் முஸ்லிம்களால் முறியடிக்கப்பட்டன. இவர்களுடைய ஆட்சிகாலம் மறக்கத்தக்க காலமன்று. இக்காலத்தில் மத விஷயங்களும் ராஜரீக விஷயங்களும் முஸ்லிம்களிடம் ஒருங்கே அமைந்து உச்சஸ்தானத்திலிருந்தன. உலகத்திலுள்ள சகல தேசத்தாரும் தங்கள் தங்கள் தகுதிக்குத் தக்கவாறு இவ்வாட்சியிலிருந்து தங்களது ஆட்சி முறைகளைத் திருத்தியமைத்துக் கொண்டிருக்கின்றனர். நாம் கூறுகிற இவ்விஷயம் இஸ்லாத்தின் மீதும் குலபாயெ ராஷிதீன்கள் மீதும் நமக்கிருக்கிற அளவுகடந்த பற்றினல் அல்லவென்பதை உலக சரித்திரம் உங்களுக்கு விளக்கிக்காட்டும். இதற்கு உதாரணமாக ஹஜ்றத் உமர் பாரூக் (றலி.) அவர்களது காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கீழே தருகிறோம். அதில் மார்க்க பக்தர்கள் தங்களுக்குத்தேவையான சில அம்சங்களை எடுத்துக்கொண்டு சந்தோஷமடைய முடியும்; ராஜிய வாதிகள் "யுத்தம் ஏமாற்றமே யாகும்" என்ற பழமொழியின் வியாக்யானத்தைக் கண்டு கொள்ளமுடியும்; சரித்திரக்காரர்கள் அரசாங்கங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமுள்ள காரணங்களையும், அபூர்வ விஷயங்களையும்பற்றி எழுதுவார்கள். அச்சம்பவம் வருமாறு:—

பாரசீக ஏகாதிபத்தியத்தின் கடைசி நிலை.

. சங்கைவான்களான ஸ்ஹாபிகள் பஸ்ராவைக் கைப்பற்றியபோது, அந்த நகரையும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் பாதுகாக்கவும்,

அமைதி சமாதானம் ஆகியவைகளை நாட்டில் நிலைநிறுத்தவும் கூஸிஸ்தான் பிரதேசத்தையும் கைப்பற்றி அதனுடன் இணைப்பது மிகவும் அவசியமாக இருந்தது. இவ்வாறு செய்தால்தான் அங்குள்ள இஸ்லாமிய ஆட்சிக்கு வெளியிலிருந்து அபாயம் உண்டாகுவதற்கு இடமில்லாமலிருக்கும். ஆகவே, ஹிஜ்ரி 16-வது வருஷத்தில் அஹ்வாஸ் என்ற நகர் இஸ்லாமிய அரசாங்கத்தின் எல்லைக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு மனுதிர், சோஸ் ஆகிய நகரங்களிலும் இஸ்லாமியக் கொடி பறக்க விடப்பட்டது.

பாரசீக அரசாங்கத்தின் சக்தியும் சின்னு பின்னமாகித் தனது கடைசி மூச்சைவிட்டுக் கொண்டிருந்தது. அவ்வரசாங்கத்தின் அதிபதியான 'யஜ்துகுர்து' சக்கிரவர்த்தி என்பார் தமது குடும்பத்தினருடன் "கும்" என்ற நகரில் இருந்துகொண்டு முஸ்லிம்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்ய வழிவறியாமல் திகைத்துக் கொண்டிருந்தார். இவ்வித நிலைமையில் பாரசீகர்களில் அதிகச் செல்வாக்கும் வல்லமையும் பொருந்திய ஒரு தலைவரான 'ஹுர்முஜான்' என்பவர் சக்கிரவர்த்தி யஜ்துகுர்து விடம் சென்று "அஹ்வாஸ், பாரிஸ் ஆகிய மாகாண அரசாங்கங்களுக்குத் தம்மை அதிபதியாக்கி விடும் பக்ஷத்தில் சில தினங்களுக்குள் அறபிகளின் சக்தியைச் சிதறவடித்து விடுவதாகவும், இவர்களின் படையெடுப்பு என்ற பிரவாகம் இனி என்றென்றைக்கும் வராமல் தடுத்து விடுவதாகவும்" தெரிவித்துக்கொண்டார்.

கிஸ்ரா பர்வேஜுடைய அரசாங்கமும் வல்லமையும் தமது கண்களுக்கு எதிரில் வீழ்ச்சியடைவதைப் பார்த்துக்கொண்டிருந்த "யஸ்தகுர்து" எதிர்பாராத விதமாகக் கிடைத்த இந்த உதவிக்காக சந்தோஷமடைந்து, ஹுர்முஜானுடைய நிபந்தனையை ஒப்புக்கொண்டு ஒரு பெரும் படையுடன் முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் செய்வதற்காக அனுப்பினர். அக்காலத்தில் கூஸிஸ்தான் மாகாணத்திற்கு ஷோஸ்தர் தலைநகராக இருந்தது. இங்கு ஈரானிய அரசாங்கத்தின் அரண்களும் கோட்டைகளும் இருந்து கொண்டிருந்தன. அஹ்வாஸ், பாரிஸ் ஆகிய மாகாணங்களில் அரசாட்சி புரியலாம் என்ற பேராசையால் ஹுர்முஜான் என்பவர் தமது பரிவாரங்களுடன் நேராக ஷோஸ்தருக்கு வந்து அரண்களையும் கோட்டைகளையும் பழுதுபார்த்து ஒழுங்கு படுத்தியதுடன், அக்கம்பக்கத்திலுள்ள நகரங்களுக்கு ஆட்களையனுப்பி முஸ்லிம் போர்வீரர்களை எதிர்த்து யுத்தம் செய்வதற்காகப் பிரசங்கம் புரிவித்தார். இதனுல் அங்குள்ளவர்கள் முஸ்லிம்கள்பால் கோபாவேசங்கொண்டு, எவ்விதத்திலும் அவர்களை நாட்டைவிட்டுத் துரத்திவிட வேண்டுமென்று கூட்டங் கூட்டமாகப் படையில் சேர்ந்தனர். இதனுல் ஹுர்முஜானுக்குப் பெரும் பலமும் படையு முண்டாயிற்று.

அப்பிரதேசத்திலுள்ள இஸ்லாமிய சேனைக்கு அதுபோழ்து ஹஜ்ரத் அபூமூஸா அஷ்அரீ (றலி.) என்ற பிரபல ஸஹாபி ஒருவர் தளகர்த்தராகவும், அப்பிரதேசத்திற்கு கவர்னராகவும் இருந்துகொண்டிருந்தார். பகைவர்கள் தம்மைத் தாக்கி முஸ்லிம்களை ஓட்டிவிட வேண்டும் என்று படைதிரட்டுவதையும், யுத்த முஸ்தீப்புச் செய்வதையும் பற்றி கலீபாவான ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி.) அவர்களுக்கு விபரமாக அறிவித்து தாம் அவர்களுடன் யுத்தம் செய்வதற்கான அனுமதி கோரினுர். கலீபா அவர்களிடமிருந்து தகவல் கிடைத்தும் ஹுர்முஜானையும் அவரது படையையும் ஒடுக்குவதற்காக முஸ்லிம் சேனைகளுடன் ஷோஸ்தரை நோக்கிச் சென்றுர். இறுதியாக முஸ்லிம்களுக்கும் பாரசீகர்களுக்கும் அங்கு யுத்தம் ஆரம்பமாகவே இருகக்ஷியினரிலும் பலத்த சேத மேற்பட்டது. அநேகம் ஸஹாபிகள் ஹுர்முஜானுடைய கையினுல் ஷஹீதானுர்கள். பாரசீகர்களிலும் ஆயிரம் பேர்கள்வரை மாண்டனர்; அறுநூறுக்கு அதிகமானவர்கள் கைதியாயினர். இறுதியாக ஹுர்முஜான் கோட்டையை அடைத்துக்கொண்டு உள்ளே இருந்துகொண்டான்; முஸ்லிம்கள் கோட்டையை முற்றுகை போட்டுக்கொண்டு வெளியிலிருந்தனர். இவ்விதமாகப் பல நாட்கள்வரை முற்றுகை நடந்தது. இறுதியான வெற்றியும் தோல்வியும் எவருக்கும் ஏற்படாமலிருந்து வந்தது.

கள்ளவழி

ஒருநாள் ஷோஸ்தர் நகரத்திலிருந்த ஒரு பாரசீகன் மாறுவேஷம் போட்டுக்கொண்டு முஸ்லிம்களின் சேனைக்குள் பிரவேசித்து தளகர்த்தரான ஹஜ்றத் அபூமூஸா அஷ்அரீ (றலி) அவர்களிடம் வந்து, தமது உயிருக்கும் பொருளுக்கும் அபயம் தந்தால் நகரத்தைச் சுலபமா

கப் பிடித்துக்கொள்வதற்கான வழிசொல்வதாகக் கூறினன். ஹஜ்றத் அபூமூஸா அஷ்அரீ (றலி.) அவர்கள் இதற்குச் சம்மதித்தார்கள். உடனே, அவன் ஒரு அறபியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு டைகிரீஸ் நதியின் ஒரு கால்வாயைக் கடந்து ஒரு சுரங்கத்தின்வழி மூலமாக நகரத்திற்குள் வந்தான். ஜனங்கள் இவ்வறபியை அடையாளங்கண்டு கொள்ளாமலிருக்கும் பொருட்டு அந்த மனிதன் அவ்வறபியைத் தமது வேலைக்காரனைப்போல் உடையணியச் செய்து அவரது முகத்தை மற்றவர்கள் கண்டுகொள்ளாம லிருக்கும்படிச் செய்து நகரத்திலுள்ள ரஸ்தாக்கள் பஜார்கள் தெருக்கள் முதலிய யாவையும் சுற்றிக் காண்பித்து ஹுர்முஜான் இருக்கும் மாளிகைக்கும் அழைத்துச் சென்றனன். அதுபோழ்து ஹுர்முஜான் தமது தளகர்த்தர்களிடமும் ராணுவ நிபுணர்களிடமும் யுத்தத்தைப்பற்றிக் கலந்து பேசி ஆலோசனை செய்துகொண்டிருந்தார். அந்த மாளிகையையும் சுற்றிப் பார்த்தபின் இருவருமாகச் சுரங்கவழியாக ஹஜ்றத் அபூமூஸா அஷ அரீ (றலி.) அவர்களிடம் திரும்பவந்தனர்.

பிறகு, அந்தப் பாரசீகன் சொன்னவைகளை அவனுடன் சென்ற அவ்வறபியும் ஒப்புக்கொண்டதுடன் தம்முடன் 200 வீரர்களை அனுப்பினல் நகரத்தைக் கைப்பற்றிவிடலாம் என்றுங் கூறினர். இவ்வரபியின் பெயர் அஷ்ரஸ் என்பதாகும். முஸ்லிம் தளகர்த்தரான ஹஜ்றத் அபூமூஸா அஷ்அரீ (றலி.) அவர்கள் தமது போர்வீரர்களைக் கவனித்தார்கள். "காக்கை நோக்கறியும்" என்றபடி தங்கள் தலைவர் தங்களைக் கவனிப்பதன் கருத்தை அறிந்த முஸ்லிம் வீரர்கள், அஷ்ரஸ் என்ற அறபியுடன் செல்வதற்குமுன் வந்தனர். இவர்களில் 200 பேர்களை ஹஜ்றத் அவர்கள் பொறுக்கி எடுத்து அஷ்ரஸுடன் அனுப்பிவிட்டு மற்றைய போர்வீரர்களுடன் ஹஜ்றத் அவர்கள் தயாராக இருந்துகொண்டிருந்தார்கள்.

அஷ்ரஸ் என்ற அவ்வறபி 200 வீரர்களுடன் அச்சுரங்கத்திற்குள் சென்று நகரச் சுவர்வாயிலைத் திறந்துவிட்டார். வெளியில் தயாராக இருந்து கொண்டிருந்த முஸ்லிம் வீரர்கள் பிரவாகம்போல் நகருக்குள் பிரவேசித்தனர். பாரசீகர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கைகலந்த பலத்த சண்டை நடந்தது. இறுதியாக பாரஸீகர்களின் தளகர்த்தரான ஹுர்முஜான் கோட்டைக்குள் சென்று ஒளித்துக்கொண்டார். ஆயினும், முஸ்லிம்கள் கோட்டையின் சுவரினண்டை வந்தபின், ஒளிந்துகொள்வதிலும் பிரயோஜனமில்லை என்று நினைத்து, கோட்டையின் சுவரின்மீதேறி நின்றுகொண்டு முஸ்லிம்களை நோக்கி "இன்னமும் என்னிடம் 50 அம்புகளிருக்கின்றன; உங்களில் 100 பேர்கள் இந்த அம்புகளினுல் மரணமடையாதவரை என்னை நீங்கள் கைதிசெய்ய முடியாது. ஆனல், நீங்கள் என்னை மதீனுவுக்கு அனுப்பிவைத்து, ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் என்னைப்பற்றித் தீர்ப்புக் கூற சந்தர்பம் அளிப்பீர்களாயின் யான் ஆயுதங்களைக் கீழேவைத்துவிட்டுச் சரணடையத் தயாராக இருக்கின்றேன். இல்லையேல் உங்களில் நூறுபேரைப் பிணமாக்கிவிட்டு யானும் தற்கொலைசெய்துகொள்வேன்" என்று கூறினர்.

ஹஜ்றத் உமர்பாரூக் (றலி.)

முஸ்லிம்களின் தளகர்த்தரான ஹஜ்றத் அபூமூஸா அஷ்அரீ (றலி.) அவர்கள் ஹுர்முஜானுடைய வேண்டுகோளை அங்கீகரித்து அவரை மதீனு முனவ்வராவுக்கு அனுப்பிவைத்தார்கள். ஹுர்முஜான் தான்மட்டிலும் மதீனுவுக்குச் செல்லாமல் தனது மனைவி மக்கள் முதலிய தனது குடும்பத்தினர் அனைவரையும் அழைத்துச் சென்றுர். மதீனுவுக்குப் பக்கத்தில் வந்தவுடன் ஹுர்முஜான் ராஜாஉடைகளணிந்து முத்துப்பதித்த கிரீடமணிந்து, வைரமிழைத்த வாளை இடையில் கட்டி மிகவும் கம்பீரமாக மதீனுவிற்குட் சென்றுர். இவர் வருகிற இந்தக் கோலத்தைக் கண்டதும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவரைச் சூழ்ந்துகொண்டு வேடிக்கை பார்த்தனர். "ஹுர்முஜான் விருந்தாளியாகி வந்துவிட்டார்" என்று தெருக்களெல்லாம் பிரஸ்தாபமாக இருந்தது.

அமீறுல் மூமினீன் ஹஜ்றத் உமர்பாரூக் (றலி.) அவர்கள் எங்கே இருக்கிறுர்களென்று ஹுர்முஜான் விசாரித்தார். ரோமன் ஏகாதிபத்தியத்தையும், பாரசீக ஏகாதிபத்தியத்தையும் வீழ்த்திய ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் மிக டாம்பீகமாகவும் வைபவமாகவு மிருப்பார்கள் என்று அவர் எண்ணிக்கொண்டார் போலும். அவர் மதீனு வந்தபோழ்து ஹஜ்றத் உமர் பாரூக் (றலி.) அவர்கள் மதீனுவிலுள்ள மஸ்ஜிது நபவியின் வெற்றரையில் நித்திரை

செய்து கொண்டிருந்தார்களாதலின் ஜனங்கள் அமீருல் மூமினீன் அவர்கள் மஸ்ஜிதில் இருப்பதாகக் கூறினார்கள். அங்கு ஹுர்முஜான் வந்தபோது ஜனங்களின் அரவம் கேட்டு ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்கள் நித்திரை தெளிந்து எழுந்தார்கள்.

பிறகு, ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்கள் எழுந்தவுடன் ஹுர்முஜானின் ஆடம்பர உடைகள் கண்ணில் பட்டது. உடனே, ஹஜ்ரத் அவர்கள் "இவையனைத்தும் இவ்வற்ப உலகத்தின் அலங்காரச் சாமான்கள்" என்று கூறினார்கள். பிறகு கொஞ்ச நேரம் வரை ஹுர்முஜானுக்கும் ஹஜ்ரத் உமர் பாரூக் (றலி.) அவர்களுக்கும் சம்பாஷணை நடைபெற்றது.

ஹுர்முஜான் பலமுறை துரோகம் செய்திருப்பதாலும், இவருடைய கையால் இரண்டு முக்கிய ஸஹாபிகள் ஷஹீதாக்கப்பட்டிருப்பதாலும் ஹஜ்ரத் உமர் பாரூக் (றலி.) அவர்கள் ஹுர்முஜானுக்கு ஏற்கனவே மரண தண்டனை விதித்திருந்தார்கள். ஆனாலும், எக்ஸ்பார்ட்டியான தீர்ப்பைக் கொண்டு மரண தண்டனையை நிறைவேற்றுவது அனுசிதமென்று இக்குற்றச் சாட்டுகளுக்குத்தக்க சமாதானங்களைக் கூறும் பொருட்டு ஹுர்முஜானுக்கு சாவகாசம் அளித்திருந்தார்கள். அதுபோழ்து ஹுர்முஜான் ஹஜ்ரத் உமர் பாரூக் (றலி.) அவர்களை நோக்கி,

"உமரே! கடவுள் எங்களுடன் இருக்கும்வரை நீங்கள் எங்களது அடிமைகளாகவும், எங்கள் சொற்படி நடப்பவர்களாகவும் இருந்தீர்கள். இன்று கடவுள் உங்களுடன் இருப்பதால் நாங்கள் உங்களது அடிமைகளாகவும் உங்களது சொற்படி நடப்பவர்களாகவுமிருக்கிறோம்."

என்று கூறினார்.

ஹுர்முஜான் தந்திரம்

தனக்கு மரண தண்டனையைத் தவிர வேறு தண்டனை கிடைக்காது என்று ஹுர்முஜானுக்கு உறுதியாகி விட்டது. ஆனாலும், அவர் முஸ்லிமாகி விடவேண்டுமென்னும் விரும்பிக் கொண்டிருந்தார். ஆகவே, அவர் "இவ்வித நிலைமையில் யான் முஸ்லிமாகி விடுவேனாயின் நான் மரணத்திற்கு பயந்து இஸ்லாத்தைத் தழுவிவிட்டதாக ஜனங்கள் கூறுவர்; ஜனங்கள் இப்படிக் கூறுவார்கள் என்பதற்காக இஸ்லாம் மதத்தைத் தழுவாமலிருந்தால் மரண தண்டனையை அடைவேன்; அதனால் யான் இஸ்லாம் மதத்தைத் தழுவும் பாக்கியம் கிடைக்கப் பெறேன்" என்று தனது மனதுக்குள் ஆலோசனை செய்துகொண்டு இவ்விரண்டினுள் எதனைச் செய்யலாம் என்ற சிந்தனையில் இருந்து கொண்டிருந்தார்.

ஆகவே, இதனை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் ஒரு யுக்தி செய்தார். அதாவது, குடிப்பதற்காக ஜலம் கேட்டார். ஜலம் கொடுக்கப்பட்டது. அந்த ஜலத்தைக் கையில் வாங்கிக்கொண்டு ஹஜ்ரத் உமர் பாரூக் (றலி.) அவர்களை நோக்கி "நான் இந்த ஜலத்தைக் குடிப்பதற்குள் என்னைக் கொல்வதில்லை என்று எனக்கு அனுமதி கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். ஹஜ்ரத் உமர் பாரூக் (றலி.) அவர்கள் அவ்வண்ணமே அனுமதித்து "நீர் ஜலம் அருந்துவதற்கு முன்னர் வெட்டப்பட மாட்டீர்" என்று வாக்களித்தார்கள்.

இந்த அனுமதி கிடைத்தவுடன் ஹுர்முஜான் அந்த ஜலத்தை அருந்தாமல் பாத்திரத்துடன் கீழே வைத்துவிட்டு, இனி யான் இந்த ஜலத்தை அருந்தப் போவதில்லையாகையால் உங்களுடைய வாக்குத்தத்தத்தின்படி நீங்கள் எனக்குமரண தண்டனையை நிறைவேற்ற முடியாது" என்று கூறினர்.

ஹஸ்ரத் உமர் (றலி.) அவர்கள் ஹுர்முஜானுடைய இந்தத் தந்திரத்தையும், தாங்கள் தவறிப்போனதையும் கண்டு பிரமிப்படைந்தார்கள். ஹஸ்ரத் அவர்கள் வாக்குறுதிப்படி அந்தஜலத்தை அவர் அருந்தாமல் இருக்கும் வரை அவருக்கு மரண தண்டனையை நிறைவேற்றவும் முடியாது. பிறகு, ஹுர்முஜான் கலிமத்துத்தௌஹீதை ஓதி இஸ்லாம் மதத்தைத் தழுவியதுடன் "நான் இதற்குமுன்பே முஸ்லிமாகிவிட்டேன்; ஆனல், எனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், மரணத்திற்குப் பயந்தும் இஸ்லாம் மதத்தைத் தழுவினேன் என்று என்னை இழிவாகக் கூறாமலிருக்கும் பொருட்டே யான் இந்த யுக்தியைச் செய்தேன்? என்று தெரிவித்துக் கொண்டார்.

பிறகு, ஹஜ்ரத் உமர் பாரூக் (றலி.) அவர்கள் ஹுர்முஜான் இஸ்லாத்தைத் தழுவியதற்காக அதிகச் சந்தோஷமடைந்ததுடன், மதீனாமுனவ்வராவிலேயே அவர் வாசஞ்செய்யவும் அனுமதித்தார்கள். அதுவும் போதா

தென்று வருஷத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் உபகாரமாக அவருக்குக் கொடுத்துவரவும் உத்தரவு செய்தார்கள்.

சோதரீர்! பெரிய ஏகாதிபத்தியங்களை வீழ்த்திய கலீபா அவர்கள் வெற்றரையில் படுத்துத் தூங்கும் விதமான அவ்வளவு சாமான்ய வாழ்க்கை நடத்தியதும், ஆடம்பர உடைகளைக் கண்டவுடன் இவை இவ்வற்ப உலகத்திற்கு அலங்காரமானவைகள் என்று அவைகளை அலக்ஷியமாக மதித்துக் கூறியதும், கொடுங்குற்றம் செய்து மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியினிடத்திலும்கூட தங்கள்வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக மரணதண்டனை நிறைவேற்ருமலிருந்ததும், அந்தக் கைதிக்கு மன்னிப்பளித்து 2000 ரூபாய் வருஷந்தோறும் உதவிக்காகக் கொடுக்கும்படிச் செய்ததும் இக்காலத்தைய அரசர்களிடம் காணக்கிடைக்காத அரும்பெரும் தன்மைகளாகும்.

சுகாதாரம்—தேன்

தேனனது, புஷ்பங்களின் அமுதத்திலிருந்து தேனீக்களால் உண்டாக்கப்பட்ட பசையானதும், தித்திப்பானதுமான ஒரு வஸ்து. பூவிலிருந்து உண்டாகும் பச்சை அமுதத்தில் கொஞ்சம் தித்திப்பும், ஜலமும், வாஸனை கொடுக்கும் முக்கியமான எண்ணெய்களும் கலந்திருக்கின்றன. தேன் கூண்டில், இந்த தேனீக்கள் இதிலுள்ள ரஸாயன வஸ்துக்களை மாற்றி, வேருெரு வஸ்துவை உண்டாக்குகின்றன. இந்த வஸ்துவில் க்ரேப் சர்க்கரை, பழச்சர்க்கரை அல்லது டெக்ஸ்ட்ரோஸ், லெவலோஸ் இவை சமபாகமாக இருக்கின்றன. ரஸாயன சாஸ்திரப்படி பார்க்கப் போனல், தேனனது ஒரு கார்போஹைட்ரேட் கலப்புப் பதார்த்தம். இதில், மாற்றப்பட்ட சர்க்கரையும் (அதாவது, சரிபாகமான டெக்ஸ்ட்ரோஸும், லெவலோஸும்), டெக்ஸ்டிரினும், இன்னும் இதர வஸ்த்துக்களும் இருக்கின்றன. இவற்றுள், மகரந்தம் ஈதர் சம்பந்தமான எண்ணெய், அநேக விதமான பாஸ்பேட்டுகள், அயம், சுண்ணும்பு ஆகிய இவை சிலவாம். மானிட தேகத்தில் என்னென்ன வஸ்துக்கள் இருக்கின்றனவோ, அவையாவும் விகிதாசாரப்படி கொஞ்சமாய் இதிலிருக்கின்றன.

தேனைப் பரீக்ஷித்துப் பார்த்தால், அது ஒரு கார்போஹைட்ரேட் பதார்த்தம் என்றும், அதில், மாற்றப்பட்ட சர்க்கரைகளில், லெவலோஸ் 100-க்கு 33 முதல் 40 விகிதமும், டெக்ஸ்ட்ரோஸ் 34 முதல் 35 விகிதமும், சாக்கரோஸ் 1 முதல் 10 விகிதமும் இருக்கின்றன வென்றும் ஏற்படுகிறது. அதிலுள்ள ஜல பதார்த்தம் 100-க்கு 14 முதல் 20 வரையிலும், டெக்ஸ்டிரின் 100-க்கு ஒன்றிலும் கம்மியாகவும் இருக்கிறது.

தேனின் சுகம்

தேன் ஒரு இன்பமானதும், சுகமானதுமான ஆகாரம் என்பது யாவராலும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. இதற்குப் பிரத்தியேகமான குணங்கள் இருக்கின்றன வென்றும் சொல்லப்படுகிறது. அமுதத்தில் உள்ள சர்க்கரையில் தேனீ செய்யும் ரஸாயன மாறுதல்கள், ஜீரண ரஸங்கள் செய்யப்படுவன போல் இருப்பதாலும், அதனல் முக்கியமான சர்க்கரைகள் முதல் முதல் அடைய வேண்டிய ஜீரணத்தை அடைந்துவிட்டபடியாலும், தேனில் முன்னலேயே ஜீரணிக்கப்பட்ட சர்க்கரையிருக்கிறதென்றும், அது கரும்புச்சர்க்கரையைவிட அதிக சுகமானதென்றும் சொல்லப்படுகிறது. ஆனதுபற்றி, தேனுக்கு ஏற்பட்டுள்ள இந்த சுகம் முக்கியமானது இதிலுள்ள சர்க்கரையினல் விடுபடப்படும் சக்தியானது, ஸ்டார்சு சர்க்கரை முதலான எரிகரும்பு ஆகாரங்களைக் காட்டிலும் அதிசீக்கிரத்தில் வெளியாகி விடுகிறது.

சர்க்கரையை உண்பதனல், ஜீரணசக்தியைப் புரட்டிவிடுகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஜீரணக்கோளாறுகளினல் வருந்தும் ஜனங்களுக்குக் கரும்புச் சர்க்கரையைவிட, தேன் அதிக சுகமான ஆகாரம். தேன் மலச்சிக்கலைப் போக்கும்படி யானஆகாரம். இது வாஸ்தவமான விஷயம். காய்கறிகளைப் போலவே இதற்கும் இந்தக் குணமுண்டு. அநேகர் தேனைக்குறித்து தப்பபிப்பிராயப்பட்டு அது

மலச்சிக்கலை உண்டுபண்ணுகிற தென்று சொல்லுகிறார்கள். இது வாஸ்தவமல்ல. நாம் பரீக்ஷித்துப் பார்த்தால் அது குடலை நன்ருய்ச் சுத்தம் செய்துவிடுகிறது. வேறுவிதமான தித்திப்புப் பண்டங்களை உபயோகிப்பதைக் காட்டிலும், தேனை உபயோகப் படுத்துவது உசிதம். ஆகவே தேனுக்கு அதிக பலன் உண்டு என்பதை தெரிந்துகொள்வோம்.

சர்க்கரையைவிட தேன் மேலானது

உஷ்ணத்தை உண்டுபண்ணுவதனுல் வலுவும் சக்தியும் உண்டாகும். ஹெர்குலிஸ் மிக்க பலசாலியாயிருந்ததன் காரணம், அவர் உண்ட ஆகாரத்திலிருந்துண்டான உஷ்ணம் சக்தியாக மாற்றப்பட்டதனுலேயாம். நமது ஆகாரத்தில் போதுமான காலோரிக்கள் இருக்கவேண்டிய தவசியம். சர்க்கரையைக்காட்டிலும், தேனில் அதிகசக்தியுண்டு. பலம் உண்டாக்குவதில் அது சிறந்தது. தினம் ஆகாரத்தில் தேன் சேர்த்துக்கொள்வோருக்கு, மூளையைக் கொண்டும், கைகளைக் கொண்டும் உழைப்பதற்கு சக்தி அதிகம் உண்டாகும்.

கரும்புச் சர்க்கரையைப்போலன்றி, தேகத்தில் உறிஞ்சப்படுவதற்கு முன், தேனுக்கு மாறுதல் ஒன்றும் வேண்டியதில்லை. ஆனது பற்றி, அது ஜீரண உறுப்புக்களுக்கு அதிகவேலையைக் கொடுக்கிறதில்லை. சர்க்கரை இரத்தத்தில் சேருமுன், அது பழங்கள், தேன் இவைகளிலுள்ள சர்க்கரையாக மாற்றப்பட வேண்டும். கரும்புச்சர்க்கரையை சதா உபயோகித்து வந்தால், அது ஒரேவிதமான ஆகாரம், அதன் முக்கியத்தொழில், தீ மூலமாக தேகத்திற்குச் சக்தியைக் கொடுப்பதேயாம். மற்ற போஷணை வஸ்துக்களில் சர்க்கரை இராததனுல், அதை விடாமல் உபயோகித்துவந்தால், ஆகாரத்தில் சரிசமான உணவு பதார்த்தங்கள் குறைவுபட்டு, அதனுல், தேகத்தின் தசைநார்களைக் கட்டவும், ஒழுங்குசெய்யவும் வேண்டிய உணவுப் பொருள்கள் குறைந்துபோகின்றன. சர்க்கரையின் குணங்களைப்பற்றிச் செவ்வையாய் ஆராய்ச்சி செய்த மேதாவிகள், அது மதுமேகம் என்கிற ஒரு கொடிய வியாதிக்குக் காரணம் என்று கண்டறிந்திருக்கிறார்கள். அநேகர் தாராளமாய்த் தேனைச் சேர்த்துக்கொள்ளும்படி சிபார்சுசெய்கிறார்கள். ஏனெனில், தேனில் மாற்றப்பட்ட சர்க்கரையுடன், ப்ரோடீன், இரும்பு முதலிய மற்ற முக்கியமான திரவியங்களும் இருக்கின்றன.

மதுமேகத்தினுல் வருந்துவோனுக்கு, தேன் ஒரு நல்ல ஆகாரம்; கரும்புச்சர்க்கரை விஷம். ஆனதுபற்றி, தினம் ஆகாரத்தில் தேனை தாராளமாய் உபயோகித்து வந்தால், அது தேகத்திற்கு வலுவையும், ஆரோக்கியத்தையும் அளிப்பதுடன், மதுமேகம் முதலிய வியாதிகளையும் வரவொட்டாமல் காக்கும்.

ஹிப்போகிராடிஸ், ஸெல்ஸஸ் முதலிய வைத்தியர்கள், இதனை பேதி மருந்தாகவும், கோழை முதலியவற்றை வெளிப்படுத்துவதற்கும் உபயோகித்துவந்தார்கள். அநேக வியாதிகளுக்கு ஜனங்கள் இப்போதும் தேனை உபயோகித்து வருகிறார்கள்.

இவ்வித சுகமான ஆகாரத்தை ஜனங்கள் நித்திய ஆகாரத்தினின்றும் தள்ளிவிட்டிருப்பது, தற்காலத்திய நாகரீகத்தின் பலனுகும். இது மிகவும் விசனிக்கத்தக்கதே! நகரவாசிகள், சுளுவாயும் மலிவாயும் கிடைக்கக்கூடிய சர்க்கரையை உபயோகிப்பதே இந்தசுகமான இயற்கை ஆகாரத்தை அசட்டை செய்வதற்குக் காரணமாகும்.

தேனின் உபயோகங்கள்

இயற்கையான நிலையில், தித்திப்புப் பண்டங்கள் போலவே தேனையும் பரிமாறவேண்டும். இஃது அதன் நல்ல மணத்தினுலும், சுலபமான ருசியாலும் உபயோகத்துக் கேற்றதாக இருக்கிறது. இன்னும் அநேக ஆகாரங்களுடன் இதைச் சேர்த்துப் பரிமாரலாம். இதுகாரணம்பற்றியே, இது முக்கிய உணவுப்பொருள்களில் ஒன்ருகும். இயற்கையான நிலையிலும் தேனை உபயோகிக்கலாம்; சமைக்கப்பட்ட ஆகாரத்திலும் இதைச் சேர்த்து உபயோகிக்கலாம். இந்நாட்டில் இது சமைப்பதைக் காட்டிலும், சமைக்காதபடியே உபயோகிக்கப்படுகிறது. சமைக்கும்போது தேனை அதிகமாக உபயோகிக்கலாம். பழங்கள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கு, சர்க்கரைக்குப் பதிலாக தேனை உபயோகிக்கலாம்.

உத்தம மாதுக்கள்

மாதர்கள் தங்கள் பர்தாக்கள்மீது பற்றுக் கொள்வது இல்லறவாழ்க்கையை இன்பமுடன் அனுபவிப்பதற்குள்ள மூலவேருகும். மூலவேருன இவ் ஊற்றுக்கண்ணிலிருந்து சுகண்டி சந்தோஷம் மனேதிருப்தி என்னும் நந்நீர் ஒலித்தோடுகின்றது; வீட்டிற்குள் உள்ள வாழ்க்கை நிம்மதியாகவும் சந்தோஷத்தோடும் கழிந்து கொண்டிருக்கின்றன. இந்த இரகசியத்தை உணர்ந்துகொள்ளாத மாதர்கள் பர்த்தாவின் மீது பற்றுக்கொள்வதினின்று தூரமாகவிருக்கின்றனர். அன்னேருக்கு சுகஜீவியான வாழ்க்கை கிட்டுவதற்கிடமில்லாது போய்விடுவதுடன் வீட்டின் எஜமாட்டியாக விருப்பதினின்றும் பேர்கெட்டவர்களாகியு மிருக்கின்ருர்கள். ஆனல் இவ்வுண்மையை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் மாதர்கள் தங்கள் காரியம் சித்தியாவதும், சுகஜீவிகளாக வாழ்வதும், தங்கள் பர்த்தாக்களுக்குக் கீழ்படிந்து நடப்பது அவர்களுக்குத் தொண்டுபுரிவது ஆகியவைகளில்தான் இருக்கிற தென்பதைத் தெரிந்துகொள்வர். ஏனெனில், இவ்விருவர்களுக்கிடையி லேற்படும் சம்மந்தமானது அளவற்ற பிரீதியையும் நன்நடக்கைசுகஜீவியானவாழ்க்கை ஆகியவைகளையும் தெரிந்தெடுத்துக் கொள்வதற்கு வற்புறுத்தல் செய்துகொண்டிருக்கிறது. பின்னர் இச்சம்மந்தம் நாளுக்குநாள் அபிவிர்த்தியடைந்து இடைகாலத்திலேற்படும் அற்ப மனஸ்தாபங்களினல் இதன் குணபாட்டிற்கு இடங்கொடாது நாளடைவில் எச்சக்தியாலும் இதனைப் பின்னப்படுத்த முடியாதுபோய்விடுகிறது.

இவ்வாறு மாதர்கள் தங்கள் பர்த்தாக்கள் மீது பற்றுக்கொண்டு விளங்கிய விபரத்துக்கு, தற்கால நாகரீகத்தில் சிறந்துவிளங்கும் ஐரோப்பாவில் ஒரு உதாரணத்தைக்கூட காணமுடியாது. ஆனல் நமது தூய்மை பொருந்திய இஸ்லாம் மார்க்கத்தில் இதற்குப் பல உதாரணங்கள் காணப்படுகின்றன. சங்கைவான்களாய ஸஹாபாக்களின் அருமைப் பத்தினிமார்களை இவ்விஷயத்தில்நமக்குவழிகாட்டியாகக்கொள்ள முடியும். எனவே, முற்காலத்திய சரித்திரங்களை நன்கு ஆராய்ந்து பார்ப்போமாயின் சஹாபியாக்கள் தங்கள் பர்த்தாக்கள்மீது அதி அன்பு கொண்டிருந்தார்க ளென்பதைத் தெரிந்து கொள்கிறேம். அதன் சில உதாரணங்கள் வருமாறு:—

நபிகள் பெருமானர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் புதல்வியான ஹஸ்ரத் ஜைனப் (ரலி.) அவர்களை அபுல் ஆஸ் என்பவருக்கு விவாகஞ் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. அவர் குப்றுடைய நிலைமையிலிருக்கும்போது "பத்ர்" யுத்த சம்பவமேற்பட்டு அவர் கைதியாக்கப்பட்டார். அதுகாலை நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் 'பித்யா' வாங்கிக் கொண்டு யுத்தக் கைதிகளை விடுதலை செய்து வந்ததால், மக்காவாசிகள் தங்கள் தங்களுக்குரிய 'பித்யா'வை அனுப்பிவைத்து விட்டனர். ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்களால் சன்மானமளிக்கப்பட்ட மாலை ஒன்று ஹஸ்ரத் ஜைனப் (ரலி.) இடமிருந்ததால் தன்பர்த்தாவான அபுல் ஆஸின் பித்யாவைநிறைவேற்றுவதற்காக அந்த மாலையையும் ஜைனப்சேர்த்து அனுப்பினர்கள். நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களுக்கு இம் மாலையைப் பார்த்தவுடன் மனமிரக்க மேற்பட்டது. ஆனலும் ஹஸ்ரத் ஜைனப் (ரலி.) தன்பர்த்தாவின் மீது கொண்டுள்ள அன்பைக்கண்டு அகமகிழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் தங்கள் மனைவியாகிய ஆயிஷா அவர்களை விவாக விலக்குச் செய்தபின் மஹர் தொகையை அனுப்பிவைத்தார்கள். பீபீ ஆயிஷா அவர்கள் அதனைக் கண்டு கண்ணீர் விட்டவர்களாய் "பிரிந்துபோகும் சிநேகிதரைவிட இவ்வஸ்து அற்பமானதாகும்" எனக்கூறினர்கள். இதனைத் தெரிந்த ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் ஆயிஷா அவர்களின் இவ்வரும்மொழிக்காக மனேவருத்தமுற்று கண்ணீர் வடித்தார்கள்.

தபூக் யுத்தத்திற்கு ஹஸ்ரத் ஹிலால்பின் உமைய்யா (ரலி.) வாராததால் பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அவர்மீது கோபங் கொண்டார்கள். கடைசியாக அவர் தம் பெண்

சாதியுடனிருக்கும் சம்மந்தத்தை நீக்கிக் கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். இவ்வுத்திரவைத் தெரிந்துகொண்ட அவரது பத்தினியார் பெருமானார் (ஸல்.) அவர்கள் சமூகம்வந்து, என் பர்த்தா விர்த்தாபிய திசையை அடைந்தவராக விருப்பதால் அவருக்கு பணிவிடை செய்வதற்கான எந்த வேலைக்காரனும் அவரிடமில்லை யாகையால் யான் அவருக்குத்தொண்டுபுரிவதை தாங்கள் வெறுப்புகொள்ள மாட்டீர்கள் எனத் தெரிவித்துக் கொண்டார். இதற்கு நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் 'இல்லை' என்று பதில் கூறினார்கள். இவ்வாறு சங்கைவான்களான சஹாபிகளின் பத்தினிமார்கள் தங்கள் பர்த்தாக்கள்மீது பற்றுக்கொண்டிருந்ததுடன் அவர்களுக்கு பணிவிடை செய்வதை தங்களுக்குள்ள பிரதான கடமை என்பதாகவும் மதித்து ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களுக்கு உதவிபுரிவதை தங்களுக்குள்ள பிரதான கடமை என மதித்திருந்தார்கள். பெண்சாதிக்கு தன் பர்த்தாவின்மீது பற்று ஏற்படுவதால் அம்மாது பர்த்தாவின் சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்பவளாகவும்; பிள்ளைகளுடன் வாஞ்சையுடனிருப்பவளாகவும், பர்த்தாவின் ஆரோக்கியத்தை சதாவும் கவனித்துக் கொள்பவளாகவும் ஆகிவிடுகின்றாள். குரைஷ் பெண்கள் இக்குணத்தில் சிறந்து விளங்கினார்கள். அதாவது, தங்கள் பர்த்தாக்கள்மீது அதிகப் பற்றுக் கொண்டவர்களாகவும் அவர்களின் சொத்துக்களைக் காப்பாற்றுபவர்களாகவும் சிசுக்களை சவரக்ஷிக்கிறவர்களாகவும் இருந்ததால் நபிகள் பெருமானார்கள் (ஸல்.) அவர்கள் அம்மாதுக்களைப் பலமுறை புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள்.

சஹாபியாக்களான மாதுக்களுக்கு எவ்வாறு தங்கள் பர்த்தாக்கள்மீது பிரியமிருந்ததோ அவவாறே சங்கைவான்களான சஹாபாக்களுக்கும் தங்கள் மனைவியர்கள்மீது அன்பிருந்து வந்தது. எனவே, அவர்கள் ஒருபொழுதும் அம்மாதுக்களை அடித்ததுங்கிடையாது; கடுமொழிகளை உபயோகித்து ஏசிப் பேசியதுங் கிடையாது. அநேகமாய் அவர்களின் குற்றங்களை மன்னிக்கிறவர்களாகவே விருந்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களது குமாரர் அப்துல்லா சபரிலிருந்தார். அதுபொழுது அவரது மனைவி நோய்வாய்ப்பட்டிருப்பதாகத் தெரியவரவே, உடனே ஹஸ்ரத் அப்துல்லா அதிவேகமாய் வீடு திரும்பி வந்து பெண்சாதிக்குச் சிக்குப் பார்த்ததாய் புகாரிஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. எதாகினும் அசந்தர்ப்பங்களால் சஹாபாக்கள் தங்கள் மனைவியரை விவாக விலக்குச்செய்து விடுவார்களாயின், இருவர்களும் தாங்கள் தங்கள் இருப்பிடங்களில் அழுதுகொண்டிருப்பார்கள்; இப்பிரிவினை அவர்கள்மீது அதிக கஷ்டமாகத் தோன்றும். ஆனால் அச்சஹாபாக்கள் தங்கள் மனைவியர்கள்மீது கொண்டிருந்த பிரீதியால் அல்லாஹ் தஆலாவின் கடமையை நிறைவேற்றுவதில் ஓர் சிறிதும் குறைப்பாடு செய்தார்களில்லை; தங்கள் சுக வாழ்க்கையையே பெரிதென மதித்தார்களில்லை. உதாரணமாக, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களின் குமாரருக்கு அவரது மனைவியின்மீது அதிகப் பிரீதி ஏற்பட்டிருந்ததால் ஒரு முறை அவர் யுத்தத்திற்குச் செல்லாதிருந்துவிட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கட்கு இவ்விஷயம் தெரிந்தவுடனேயே அவர் மனைவியை தலாக்குச் சொல்லிவிடுமாறு வற்புறுத்தினார்கள். தாய் தந்தையர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் தமது கடமை யெனக்கருதிய அவர், தம் மனைவிக்கு ஒரு தலாக்குக் கொடுத்துவிட்டார். ஆனால் மனைவியைவிட்டுப் பிரிந்த அவர் கவலை மேலிட்டவராய் சில கவிகளைப் பாடினார். அதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அவர்களுக்கு மனமிரக்கமேற்பட்டுப் போயிற்று. அதனால் அவர் மறுபடி அப்பெண்ணை மீட்டுக்கொள்ளுவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டார். ஆகவே, சஹாபாக்கள் தங்கள் மனைவியர்கள்மீது பற்றுக் கொண்டிருந்தது சமய சந்தர்ப்பத்தைக்கொண்டிருந்ததென்பதும், அல்லாஹ் தஆலாவின் கட்டளையை நிறைவேற்றுவதில் இப்பிரீதி முழுதையும் திரணமாக மதித்திருந்தார்களென்பதும் இனிது புலனாகின்றது.

பர்த்தா மனைவி இவ்விருவர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த இப்பிரீதியின் காரணமாகவே சஹாபாக்களின் வாழ்க்கை இன்பமுடையதாகவும் மனோ திருப்தியை அளிக்கக்கூடியதாகவுமிருந்ததென்பதும், தர்க்கம் விவாதம் சண்டை சச்சரவு மிகமிக குறைவாகவே ஏற்பட்டுக் கொண்டிருந்ததென்பதும் செவ்வனே புலனாகின்றது. ஆனால் தற்கால ஏற்பட்டுள்ள மேனாட்டு நாகரீகமானது ஏதோ பெண்களுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுப்பதுபோல பாவனை காட்டி அவ்விருவர்களுக்கும் பிரீதி ஏற்படு

வதற்குள்ள அரும் சாமானை அபகரித்துக் கொண்டு சமத்துவமென்னும் திரையில் உட்காரவைத்துவிட்டது. உலகில் பெண்கள்மீது ஏற்படுகிற பிரீதி விலைமதிக்க முடியாத ஓர் வஸ்துவாகவிருக்கிறது. அவ்வாறான வஸ்துவை அலக்ஷியஞ்செய்து மாதர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளாதிருக்குமாறு செய்வது பெண்மையையே அழித்துவிடுவதுபோலவும், அவர்களது மரியாதையை குலைத்துவிடுவது போலவுமிருக்கிறது. ஆகவே, நவநாகரீகத்தின்மீது மோகங் கொண்டுதிரியும் அன்பர்கள் தங்களை கவனியாதுபோயினும் தங்கள் மனையாட்களின் நன்மையைக் கருதியேனும் அவர்கள்மீது அன்புகொள்வதன் தலைவாசலை அடைக்காதிருப்பார்களாக.

இஸ்லாமிய உலகம்

துருக்கி.

சில காலத்திற்கு முன் துருக்கியிலிருந்து வெளியேற்றப்பெற்ற ஜனரல் ரஊப் பாஷா இதுபொழுது துருக்கிவந்து சேர்ந்திருக்கிறார். திடுகூறாய் ஆகாய விமானம் மூலம், எமன் தலைநகராகிய "சன்ஆவ்" வில்தோன்றியிருக்கிறார். அவருடைய தலைமையின் கீழ் எமன் தேயத்துப்படைகள் ஒழுங்கு செய்யப்படுமெனத் தெரிகிறது. துருக்கி தேயத்து யுத்தக் கப்பலும் எமன் கடற்கரையை அடைந்துவிட்டதாகத் தெரிகிறது. இதற்கு, இடாலி, துருக்கி கடற்கரையோரமாய் தனது கடற்படை நிலையத்தை ஏற்படுத்திக் கொண்டதே காரணமெனக் கூறப்படுகிறது.

திருப்போலி.

சனூஸித் தலைவர்கள் அறபிப் பட்டாளங்களுடன் இட்டாலிக் கெதிராய் யுத்தத்திலீடுபட்டு சலாம் பாலைவனம் சென்றுவிட்டனர். அறபுப்பட்டாளத் திடம் புதிய நூதன யுத்தக் கருவிகளிருக்கின்றன. அரபிகளின் இம் முன்னேற்றத்தைக் கண்டு இத்தாலிய அதிகாரிகள் பீடிகொண்டவர்களாய் இது செய்தியை கூடியவரை மறைவாக வைக்க முயற்சிசெய்து வருகின்றனர்.

திருப்போலியில் சமீபகாலத்தில் ஒரு முஸ்லிம் கான்பரன்ஸ் நடைபெறப் போகிறபடியால், அதற்குள்ள காரியாதிகள் முன்னேற்பாடாகவே நடைபெற்று வருகிறது. முஸ்லிம்களின் பாத்தியதைகளை கவனிப்பதும் திருப்போலி வாசிகளின் முன்னேற்றத்தைக் கருதுவதும்தான் இக்கான்பரஸின் நோக்கங்களாகும்.

டைம்ஸ் பத்திரிகையானது மிஸ்ரிலுள்ள தமது நிருபர் மூலம் ஒரு தந்தியை பிரசுரித்திருக்கிறது. அதில், ஸனூஸிஷேகுகள் மிஸ்ரில் வாசஞ்செய்துகொண்டு, இடாலி கிழக்காபிரிக்காவில் பிரவேசித்து விடுமாயின் அதுபொழுது தராபுலிஸில் தாங்கள் பிரவேசித்துவிடவேண்டுமென யோசித்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸைபுத்தீன் ஸனூஸீ, மிஸர் தேசத்திய யுத்தமந்திரி, கர்னல் நூரிஸ் இவர்களைக்கண்டு பேசியதால் ஸனூஸியர்கள் தராபுலிஸ் விஷயமாய் யாது எண்ணிக்கொண்டிருக்கின்றார்களென்பது தெரியவில்லை என்பதாக ஒருவர் எழுதியிருக்கிறார்.

இத்தாலி சோமாலிலாண்டின் அறிக்கையொன்றில், இட்டாலி கவர்ன்மெண்டானது, ஒரு முஸ்லிம் சூபியான காதிரியா தரீகின் ஷெய்காகிய காஜீ முஹம்மதிப்னுஸன் அவர்களையும் அவர்களது முரீதீன்களாகிய மற்றும் அறுவர்களையும் தாக்கிலிட்டுவிட்டதால் ஒவ்வொரு இடங்களிலும் அதிருப்தி காண்பிக்கப்பட்டு வருவதாயும், மக்களிடையே பெரிய பீதி ஏற்பட்டிருப்பதாயும் தெரிய வருவதாய் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு, இப்பெரியார்கள் ஸனூஸித் தலைவர்களுடன் சம்மந்தம் வைத்திருந்ததே காரணமெனக் கூறப்படுகிறது. இதுவன்றி இத்தாலி அதிகாரிகள் சோமாலிலாண்டு முஸலிம்களை படையில் சேருமாறு உத்தரவிட்டது அநீதியாகுமென காஜீ முஹம்மதிப்னுஹஸன் அவர்கள் பத்வா வெளியிட்டதும் ஓர் குற்றமெனக் கருதப்பட்டது.

சோமாலிலாண்டிலுள்ள முஸ்லிம்கள் தங்கள்மீது புரியப்படும் அநீதியைக் கண்டு சகிக்க

முடியாதவர்களாக விருக்கின்றார்கள். அன்னோர் பட்டாளத்துக்குத் தொண்டுபுரியுமாறு வம்பறியாக இழுத்துச் செல்லப்படுகின்றனர். இதுவன்றி ஆறு மைல் தொலைதூரம் சென்று கழுதையின்மீது தண்ணீர் கொண்டுவந்து சிப்பாய்களுக்கு கொடுக்கவேண்டுமென பெண்களும், காடுகளிலிருந்துவிறகு கொண்டுவர வேண்டுமென ஆண்களும் வற்புறுத்தப்படுகின்றார்கள்.

ஜினிவா முஸ்லிம் கான்பரன்ஸ்.

சென்ற செப்டம்பர் மாதத்தில் அமீர்ஷகீப் அர்ஸலான் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஜினிவாவில் ஓர் பிரக்யாதிபெற்ற கான்பரன்ஸ் ஆரம்பமாயிற்று. அக்கான்பரன்ஸுக்கு ஹங்கேரி, ஆஸ்டிரியா, ஹாலண்டு, பல்கேரியா, ருமானியா, இட்டாலி, போலிஸ்தான், சுவிஸர்லாண்டு, ஸ்பெயின், யூனன் முதலிய பற்பல தேசங்களிலிருந்தும் பிரதிநிதிகள் விஜயஞ்செய்திருந்தனர்.

அமீர்ஷகீப் அர்ஸலான் அப்பிரதிநிதிகள் யாவரையும் வரவேற்று, ஒற்றுமை உறுதி முதலியன உண்டாக வேண்டுமென பிரார்த்தனை புரிந்தபின், ஆரம்பமாக, ஸுவிஸர்லாண்டுதேசம் முஸ்லிம்களுக்கு பூர்ணசுயேச்சை அளித்து அவர்களது பாத்தியதைகளை கவனித்து வருவதற்காக அதனைப் பாராட்டிப் பேசினார். இப்பாராட்டுதலை தந்திமூலம் அக்கவர்ன்மெண்டுக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் சபைத்தலைவர் முற்காலத்திய கிலாபதஆகூழி, முஸ்லிம்களின் நிலைமை இவைகளை எடுத்துக்கூறி, முஸ்லிம்களை முன்னேற்றக்கூடியவும் மார்க்க பாதுகாப்பளிக்கக்கூடியதுமாகிய ஓர் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமெனவும் கூறிவிட்டு, துருக்கி யாஜீ கலீபாவின் கடிதத்தைப் படித்து அதில் கூறப்பட்டுள்ள அரும்பெரும் யோசனைகளைச் சிலாக்கித்துப் பேசினார். பின்னர் அநேகர் பற்பல விஷயங்களைப்பற்றியும் சொற்பெருக்காற்றியபின் போலண்டு கவர்ன்மெண்டு தனது முஸ்லிம் பிரஜைகளோடு தக்க முறையில் நடந்து கொள்வதை பாராட்டி அதற்கு நன்றியும் செலுத்தப்பட்டது.

எமன், ஹிஜாஸ்.

இதுகாலை எமன் இமாம் தமது பட்டாளத்தை அபிவிர்த்தி செய்வதிலும் அதனை ஒழுங்குபடுத்துவதிலும் முழுப்பிரயாசையோடு ஈடுபட்டிருக்கிறார். ஆயுதங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டும், வாலிபர்கள் உற்சாக மூட்டப்பட்டுமிருக்கின்றார்கள். எமன் அதிகாரியான அமீர் ஸைபுல் இஸ்லாம் அவர்கள், துருக்கி ஜனரல் தூயாபாஷா அவர்களிடம் கூறி கடற்கரை பிராந்தியத்தைவலுப்படுத்துமாறும், 30 ஆயிரம் படைகளை அங்கேற்படுத்துமாறும் கூறியிருக்கிறார். தூயாபாஷா மேற்கு பகுதியில் மறைமுகமாக கோட்டை யமைப்பதற்கு ஏற்பாடு செய்துவருகின்றார். மறைவான இடத்தில் 6 வயர்லஸ் ஸ்டேஷன்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. சர்க்கார் பொக்கிஷமெல்லாம் ஹதீதாவிலிருந்து ஸன்ஆ கொண்டுபோகப்பட்டு விட்டது. மேலும் எமன் அரசாங்கமானது இத்தாலியர்களின் செய்கைகளையும், அதன் கடிதப் போக்குவரத்தையும் மிகவும் கவனத்தோடு பார்வையிட்டு வருகிறது.

ஈரான்.

இராக், ஈரான் இவ்விரண்டு அரசாங்கங்களுக்குமிடையே எல்லைப்புறவிஷயமாய் நீண்ட நாளாய் நிகழ்பெற்றுக் கொண்டிருந்த தகரார் முடிவுக்கு வந்துவிட்டது. அதாவது, துஹ்ரானில் சமரஸப் பேச்சு நடைபெற்று இரு அரசாங்கங்களும் ஓர் முடிவுக்கு வந்துவிட்டன. துஹ்ரான் கவர்ன்மெண்டும் அம்முடிவை வெளியிட்டுவிட்டது. இம்முடிவை உறுதிபடுத்தப்படுவதற்காக சர்வதேச சங்கத்தின் முன் எடுத்துக்கூற வேண்டியதிருக்கிறது. இதற்காக ஈரான் வெளிநாட்டு மந்திரி செய்யித் பாக்கிர்கான் காலிமி ஜினிவா புறப்பட்டுவிட்டார்.

இதுகாலை ஈரான் கவர்ன்மெண்டு, நெறுக்கமானவும் கெட்டுப்போனவுமாகிய ரஸ்தாக்களை புதிதாக திருத்தியமைக்க முற்பட்டு இதுவரை 10 வீதிகளை அமைத்திருக்கிறது. அதில்பெரிய தெருவு 538 கிலோமேத்தர் கொண்டதாக விருக்கிறது. ஈரானுக்கும் ஷாம் அரசாங்கத்தாருக்குமிடையே ஒரு ஒப்பந்தம் நடைபெற்றிருக்கிறது. அதன் பயனாக, இதரர்களுக்கு கிடைக்கும் பாத்தியதைப்போல இதுகாலை ஷாம் லப்னான் இவைகளில் வாசஞ்செய்யும் ஈரானியர்களுக்கும்கிடைக்கும். ஈரான், ரஷியா இவ்விரண்டு அரசாங்கங்களுக்கு மிடையே வியாபார ஒப்பந்தமொன்று நடைபெற்றிருக்கிறது. இதன் பயனாக ஒருதேசத்து சரக்குகள் வேறொரு தேசத்தில் விற்பனை செய்வதற்கான ஹேது வேறபட்டுப்போயிருக்கிறது.

இராக்.

இராக் ரயில்வே பொருளாதார சம்பந்தமாய் நடைபெற்ற விவாதத்தில், ரயில்வே மற்றும் சகல சாமான்களும் சேர்ந்து 40 லக்ஷம் பவுன் மதிப்பிடப்பட்டது. இதுபொழுது அதனை அப்படியே இராக் கவர்ன்மெண்டு விலைக்கு வாங்கிக்கொண்டது. சமீபத்தில் கட்டாய ராணுவம் புரிவதற்காக 90 ஆயிரம் பேர் இராக் பட்டாளத்திற் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 1936 ஜனவரி முடிவுக்குள் இவ்வெண்ணிக்கை 1½ லக்ஷம்வரை அதிகரித்துவிடுமென, உத்தேசிக்கப்படுகிறது. இக்காலை இராக்கிடத்தில் தேர்ச்சிபெற்ற 4¼ லக்ஷம் சிப்பாய்களிருந்து வருகின்றனர்.

இராக் அதிகாரியின் வருஷக் கொண்டாட்ட வைபவ சந்தோஷத்தை முன்னிட்டு, இராஜாங்க சதியாலோசனைக் குற்றத்திற்காக சிறை செய்யப்பட்டிருந்த 200 கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

08347

பாலஸ்தினத்தில் அறபிகளுக்கும் யூதர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள விரோதப் பான்மை நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வருகிறது. சிலநாளைக்கு முன் யூதர்களின் ஒரு கூட்டம் இஸ்லாமிய தேசங்களிற் சுற்றுப் பிரயாணஞ் செய்யப் புறப்பட்டிருக்கிறது. இக்கூட்டம் ஆப்கன், இராக், ஈரான், இந்தியா முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்து அப்பிரதேசங்களில் வாசஞ் செய்யும் யூதர்களை பாலஸ்தீனில் வந்து குடி ஏறும்படி கூறி அவர்கள் அதற்குச் சம்மதமளித்து விடுவார்களாயின் அதற்கு தங்கள் தூதுக்கோஷ்டிமூலம் பலவாறான உதவியும் செய்யும்.

எதுபொழுது இட்டாலி அபிஸீனியா யுத்தம் ஆரம்பமானதோ அது முதல் உலகம் முழுவதிலுமே ஓர் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டுப் போயிருக்கிறது. அதிலும் குறிப்பாக அபிஸீனியாவுடன் சேர்ந்திருக்கும் இஸ்லாமிய உலகில் பெரும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அபிஸீனியாவுக்கு உதவியாக எகிப்திலிருந்து வைத்திய நிபுணர்களடங்கிய கூட்டமொன்று புறப்படத் தயாராகி வருகிறது. அக்கூட்டம் அபிஸீனியாவுக்குச் சென்று காயமடைந்த சிப்பாய்களுக்கு வைத்திய சிகிச்சை புரியும். அங்குள்ள அநேகர் அபிஸீனியர்களுக்கு அனுதாபங் காட்டி வருவதுடன் இட்டாலி வீழ்ச்சியடையுமென்றும் எதிர்பார்க்கின்றனர்.

அமெரிக்காவில் இஸ்லாமிய பிரசாரம்.

அமெரிக்க முஸ்லிம்களின் 'ஷைகுல் இஸ்லாம்' ஷேக்சக்கிமாஜித் முஹம்மது பின்வருமாறு அறிவிக்கிறார் :—

கி. பி. கோ. 1896-ம் ஆண்டுவரை இங்கு முஸ்லிம்கள் பிரவேசித்ததே கிடையாது. ஆனால் இதே ஆண்டில் துருக்கித் தூதரின் காரியாலயம் இங்கேற்பட்டதால் முஸ்லிம்களின் வரத்துப்போக்கு ஆரம்பமாயிற்று. 1901-ல் நியூயார்க்கிலிருந்து 'அல்பயான்' என்னும் அறபிப் பத்திரிகை வெளிவந்தது. 'மஸீகன்' என்னுமூரில் இஸ்லாமிய அஞ்சுமன் ஸ்தாபிக்கப்பட்டது 'கனடா' என்னுமிடத்திலிருந்து முஸ்லிம்களின் வியாபாரம் ஆரம்பமாயிற்று. 1904-ல் அமெரிக்கப் பத்திரிகைகள் இஸ்லாமியப் பிரசாரத்தை எதிர்க்க ஆரம்பித்தும், கிறிஸ்துவ மிஷனரி சொசைடிகள் முழுபலத்தோடு எதிர்ப்பிரசாரஞ் செய்தும் இஸ்லாமிய வெள்ளம் தடைப்படவேயில்லை. 1908-ல் இஸ்லாமிய பிரசாரசபை ஏற்பட்டது. சுல்தான் முஹம்மது ரஷாது இப்பிரசாரத்திற்காக பெரும் அபரிமித நன்கொடை அளித்து வந்தார். மகா யுத்தத்தின்போது அமெரிக்க முஸ்லிம்கள் "ஹிலால்அஹ்மர்" என்னும் பெயருடைய ஓர் சங்கத்தை ஸ்தாபித்தனர். அச்சங்கம் மிக உன்னத நிலைமையில் ஊழியம் செய்து வந்தது. மஸீகன் என்னுமிடத்தில் கபரஸ்தானுக்காக இடம் வாங்கப்பட்டது. அதில் தற்காலை 533 கப்ர் களிருக்கின்றன. ஹென்ரீபோர்டு என்னும் 'போர்டு கார்' தொழிற்சாலைக்கருகில் ஆரம்பமாக மஸ்ஜித் ஸ்தாபிக்கப்பட்டது. 1914-ம் ஆண்டுவரை இவ்வாறே இஸ்லாமியப்பிரசாரம் நடைபெற்று வந்தது. இதுபொழுது அமெரிக்காவில் மூன்று இஸ்லாமிய சங்கங்கள், துருக்கி ஹிலால அஹ்மர் சங்கம், ஜம்யித்தகைரிய்யா இஸ்லாமிய்யா சங்கம், ஜம்யித்த தப்ஷீர இஸ்லாமி முதலிய சங்கங்களும் இருப்பதுடன் 70 ஆயிரம் அமெரிக்க நவ்முஸ்லிம்களும், 1 லக்ஷத்துக்கு அதிகமான வெளிநாட்டு முஸ்லிம்களுமிருக்கிறார்கள். முஸ்லிம்கள் மிகுதமாக நியூயார்க், நூவக், மேடக், ஸிகாகோ, சான், போனர் முதலிய இடங்களில் வியாபாரம் தொழில் முதலியவைகள் செய்து வருகின்றார்கள்.

ஹிபாஜத்துல் இஸ்லாம் வால்யூம்

நமது நண்பர்களில் அநேகரின் வேண்டுகோளுக்காக நமது அரும் மாசிகைகளின் ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள இதழ்கள் இப்போது புதிதாய் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. அழகான காலிக்கோ பைண்டு.

1930, 1931, 1932, 1933, 1934, 1935 இவ்வாண்டுகளுக்குள்ள வால்யூம்கள் தயாராகவிருக்கின்றன.

கிரயம் வால்யூம் 1-க்கு ரூ. 3—8—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

சத்தியப் பிரசாரம்

(காதியானிக் கண்டனம்)

ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்த "ஹிஸ்புல்லாஹ்"க்களின் அருஞ்சேவைகளும் அந்த ஜில்லாவின் பற்பல பாகங்களிலும் மகா நாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும் ஆங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கையின் கெடுதிகளும், அது தென்னுட்டில் பரவிய வரலாறும், அதன் பிரசாரத்தை ஏற்று நடத்திவரும் தென்னுட்டு மிஷனரியின் விபரமும் விபரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின் தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். அதிலும் லாகூர் பார்ட்டியினர் நயவஞ்சகத்தனமாய் முஸ்லிம்களை ஏமாற்றிவரும் இதுகாலை இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனமாக விநியோகிக்கப்படுமாகையால் கீழ்காணும் அட்ரசுக்கு தபால் சிலவு 0—0—9 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்வார்களாக.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

அல்பராஹீனுற்றப் பானிய்யா

பிற்றத்தி அலல்காதியானிய்யா

இந்த அறபி நூல், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை எடுத்து விளக்கி, அது சம்மந்தமாய் நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கம் எவ்வாறான தீர்ப்பளித்திருக்கிறதென்னும் விபரத்தை குர்ஆன் ஹதீதுகளின் தக்க மேற்கோள்களுடன் அழகிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதனை வாசிப்பது கொண்டு காதியானிகள் பிதற்றித்திரியும் சன்மார்க்க முரணானவைகள் சம்மந்தமாய் நமது சன்மார்க்கம் யாது தீர்ப்பளித்திருக்கிறதென்பது இனிது புலனாகும்.

இஃது சென்னை பிரபல முப்தீ மௌலானா மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது தமீம்சாஹிப் அவர்களால் எழுதப்பட்டு சென்னை, காயல்பட்டணம் முதலிய பற்பல ஊர்களின் உலமாக்களின் கையெழுத்துடனும், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் காரீ ஹாபிஸ் சுல்த்தானுல் வாயிஜ், முஹம்மது அப்துல் அலீம்சாஹிப் காதிரீ சித்தீகீமீரட்டி அவர்களின் மதிப்புரையுடனும் வெளிவந்திருக்கிறது.

இது சென்னை, புதுப்பேட்டை பிரபல வர்த்தகரும், தனவந்தருமான மெஸர்ஸ் A. P. M. செய்யித் இப்ராஹீம் சாஹிப் & பிரதர், அவர்களது பொருளுதவியைக் கொண்டு அச்சிடப் பட்டிருப்பதால் தபால் செலவுக்கா ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புவர்கட்கு ஒரு பிரதி அனுப்பிவைக்கப்படு

இச்சிறந்த 'ரிஸாலா' அறபி பாஷையி லிருப்பதால் அறபி தெ தோர் இதனைபெற்று வாசித்துப் பயன் பெறுவார்களென் எதிர்ப கிறோம்.

தமிழ்நாடு ... காப்பக ...
சென்னை-600 008

மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A. போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb. Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.